(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

# PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி.எ., பத்ராதிபர்.
G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. | ப்ரமாதீச ௵ மார்கழி ௴ —DECEMBER 1913. | ஸஞ்சிகை 12. No. 12.

## CHIEF CONTENTS.

முக்ய பொருளடக்கம்.

**The Agricultural World.**
விவஸாயப்பகுதி—
ஸக்ஷிப்ரதிஸக்ஷி உள்ள க்ராமங்களில் எல்லாரையும் எப்படி ஒன்றாய்ச் சேர்க்கலாம்? —பி. வி. வாமனமூர்த்திராவ் ... 618
புறம்போக்கு என்க்ரோச்மெண்டுகள் ... 621
ஆமணக்கு ஸாகுபடி ... 623
மண்சட்டிகளும் தகரப்பாத்ரங்களும் ... 624
மத்யமாகாணங்களில் விதைப் பண்ணைகள். 625
விவஸாயிகள் பணம் போகும் விதம் ... 626
தண்ணீரான பால் ... 627

**The Co-operative World.**
கோவாபரேஷன் பகுதி—
கோவாபரேஷனின் லக்ஷ்யம ... 629
கோவாபரேஷன் முதலில் ஏற்பட்டவிதம். 630
ஜெர்மெனியில் ஸேவிங்க்ஸ் பாங்கி ஸங்கங்கள் ... 631
தோட்டிகளுக்கு ஒரு கோ-வாபரேடிவ் ஸங்கம் ... 632

**The Commercial World.**
வ்யாபாரப்பகுதி—
இந்தியகைத்தொழிலபிவ்ருத்தி ... 633
தேங்காயின் நூதன உபயோகங்கள் ... 634
கைத்தறி நெசவுத்தொழில் ... 635
ரோஜாவிலிருந்து அத்தர் செய்யுமுறை ... 636

**The Educational World.**
வித்யாவிஷயப பகுதி—
காபி எழுதல் ... 637
உபாத்யாயர்களுக்கு சம்பளம் பட்வாடா செய்வதில் தாமஸம் ... 639
வேளையாட்களுக்கு படங்கள் மூலமாய்க் கற்பித்தல் ... 640

**The Legal World.**
வ்யவஹாரப் பகுதி—
க்ரமமான கார்டியனுக்குள்ள அதிகாரம் ... 641
மிஸ்ஸஸ் பெஸண்டின் கேஸ் ... 643
ஒரு ஸன்யாஸி வார்ஸாவது ... 644

**The Sanitary World.**
ஸுகாதாரப் பகுதி—
ஸுகாதாரத்தைப்பற்றிய சில தவறான கொள்கைகள் ... 645
வைத்யர்களை ரெஜிஸ்டர் செய்வது ... 647
நல்ல பற்கள் ... 648

**The Boys' World.**
பையன்கள் பகுதி—
ஸமுத்ர ஜலத்தின் நிறங்கள் ... 649
இடந்தவறிப்போட்ட "காமா" ... 650
கெய்ஸருடைய நீதி வாக்யங்கள் ... 651
லார்ட்ஹார்டிஞ்ஜும் ஒரு போலீஸ் கான்ஸ்டபிளும் ... 652

**The Ladies' World.**
ஸ்த்ரீகள் பகுதி—
பார்வைக்கு லக்ஷணமாயிருப்பது ... 653
இந்திய ஸ்த்ரீகளின் கல்வி ... 654
குழந்தைகளை வளர்த்தல் ... 656

**Story and Biography.**
கதையும் ஜீவ்ய சரித்ரமும்—
மோகனதாஸ் காந்தி ... 657
மூட அரசன் ... 660

**Departmental Notes.**
பகுதிக்குறிப்புகள் ...661—664

**Diary of the Month.**
மாஸ வர்த்தமானம் ... 665

**Season Report.**
காலஸ்திதி ... 671

**Calendar.**
பஞ்சாங்கம் ... 672

# இந்தியாவின் பெருமை.

தற்காலம் இந்தியர்களுக்கு ஒரு பெருமையாக இருக்கக்கூடிய தொழில் கம்பளித்தொழிலைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது.

## லா லி ம் லி

### சுத்த கம்பளித் துணி

இந்தியாவில் இந்தியாவுக்காக இந்தியர்களால் செய்யப்படுகிறது. இங்க்லண்டிலிருந்து இறக்குமதியாகும் உயர்ந்த கம்பளித் துணிகளை இது எல்லாவிதத்திலும் ஒத்திருக்கிறது. லாலிம்லி துணிகள் கலப்பில்லாத கம்பளியால் நெய்யப்பட்டவை. இந்தியாவின் அபிவ்ருத்தியில் நோக்கமுடைய ஒவ்வொரு இந்தியரும் லாலிம்லி துணிகளை வாங்கவேண்டியது அவச்யம். லாலிம்லி துணியை நீங்கள் ஒரு தடவை வாங்கிவிட்டால் பிறகு வெளிநாட்டிலிருந்து வரும் உபயோகமற்ற துணிகளை ஒருபோதும் வாங்கமாட்டீர்கள்.

கான்பூர் வுல்லன் மில்ஸ் கம்பெனி, லிமிடெட், கான்பூர்.

**CAWNPORE WOOLLEN MILLS Co., Ld.,**

**Cawnpore.**

ப்ளானல்கள் ஸெர்ஜுகள், ட்வீடுகள், சட்டைத்துணிகள் வேலைக்காரர்களுடைய துணிகள் குதிரைக்குப் போடும் துணிகள் முதலியவைகளின் மாதிரிகளுக்கும் விலை ஜாப்தாவுக்கும் எழுதுங்கள் அவை இனாமாக அனுப்பப்படும்.

Supplement to "The Practical Life."

"பிழைக்கும் வழிக்கு" அனுபந்தம்.



DEWAN C. RANGACHARLU.

திவான். ஸி. ரெங்காசார்லு.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர். | G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. | ப்ரமாதீச௵ மார்கழி௴, DECEMBER 1913. | ஸஞ்சிகை 12 No. 12.

## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | | *Foreign.* Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... ... | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணுக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 | ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 4 0 |

வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

**ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,**
3, & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# The Agricultural World.

## விவஸாயப்பகுதி.

### HOW TO SQUARE UP FACTIONS IN VILLAGES?

BY

P. V. VAMANAMURTI RAO.

கக்ஷிப்ரதிகக்ஷி உள்ள க்ராமங்களில் எல்லாரையும் எப்படி ஒன்றாய்ச் சேர்க்கலாம்.?*

க்ராமங்களிலுள்ள கக்ஷிப்ரதிகக்ஷிகள் அடியில் கண்டவைகளில் எதற்காவது ஸம்பந்தப்பட்டிருக்கின்றன.

(1) தேவாலயங்களில் திருவிழா ஸம்பந்தமான கக்ஷிகள்.

(2) ஸிவில் ஸம்பந்தமான தகரார்களைச் சேர்ந்த கக்ஷிகள்.

(3) கணக்கு மணியகாரர்களுக்குள் கக்ஷிகள்.

முதலாவது, அநேக க்ராமங்களில் தேவாலயங்களில் திருவிழா நடக்கும் காலங்களில் தீபாராதனை முடிந்த பிற்பாடு முதல் தீபாராதனையும்ப்ர ஸாதமும் ஒருவர் தமக்குக் கிடைக்க வேண்டுமென்றும், மற்றொருவர் தமக்குத் தான் கிடைக்கவேண்டுமென்றும் ஒருவருக்கொருவர் தகரார் செய்துகொண்டு இவ்விருவர்கள் பக்கங்களிலும் அவரவரைச் சேர்ந்த ஜனங்கள் சேருவதினால் கக்ஷிகள் உண்டாகின்றன. கல்யாணம் முதலான சுபதினங்களிலும் முதல் தாம்பூல விஷயமாய் மேற்கண்டபடியே கக்ஷிகள் உண்டு. இப்படிப்பட்ட கக்ஷிகள் நெடுநாளாயிருப்பதுமுண்டு. புதியதாய் ஏற்படுவதுமுண்டு. ஒரு கக்ஷிக்காரர்கள் திருவிழா நடத்தும்போது மற்றொரு கக்ஷிக்காரர்கள் ஷை திருவிழாவுக்கு வருகிறதில்லை. ஒரு வேளை வந்தாலும் கலகம் உண்டாய் திருவிழா பூர்த்தியாய் நடவாமல் நின்று போகிறது.

இது தவிர, சில க்ராமங்களில் திருவிழா காலங்களில் பறையர்கள்தான் தப்பட்டைகள் அடிக்கவேண்டுமென்றும், சக்கிலியர்கள் அடிக்கக்கூடாதென்றும், திருவிழா காலங்களில் கோவிலுக்கெதிரில் கட்டப்படும் தோரணங்களில் ஒரு குறித்த தோரணம் வரையில்தான் சக்கிலியர்கள் வரலாமென்றும், அந்தத்தோரணத்தைத்தாண்டி உள்ளே ப்ரவேசிக்கக்கூடாதென்றும், இன்னும் சில க்ராமங்களில் கடாபலி கொடுத்த பிற்பாடுதான் கைக்கோளர்கள் தங்கள் ப்ரார்த்தனைகளை செலுத்த கோவிலுக்கு வரவேண்டுமென்றும், அதற்கு முன் வரக்கூடாதென்றும், இன்னும் இதைப் போன்ற பலவிதமான கட்டுப்பாடுகள் உண்டு. இதற்கு விரோதமாய் எவனாவது ஒருவன் நடப்பானேயாகில், அவனுக்கும் அவனைச்சேர்ந்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உடனே கலகமும் கக்ஷியும் ஏற்படும். இப்பேர்ப்பட்ட ஸந்தர்ப்பங்களிலெல்லாம் கலகம் நடக்காமல் போலீஸார் பந்தோபஸ்து செய்தாலும் கக்ஷிகள் கலையாமல் அப்படியே இருக்கின்றன. ஆகையால் இவ்வித கக்ஷிகள் எந்தெந்த க்ராமத்திலிருக்கின்றனவென்பதையும், இருகக்ஷிகளிலுள்ள முக்யமான ஜனங்கள் இன்னின்னாரென்பதையும், தாலூகா ரெவினியூ ஆபிஸர்கள் (தாசீல்தார், டிப்டி தாசீல்தார்) க்ராம மணியக்காரர்களையும், போலீஸ் ஸ்டேஷன் ஹவுஸ் ஆபிஸர்களையும், இன்ஸ்பெக்டர்களையும் விசாரித்துத் தெரிந்துகொண்டு, ஸமயம் நேர்ந்தபோதெல்லாம் ஷை கக்ஷிகளில் ஸம்பந்தப்பட்ட ஜனங்களை தனித்தனியாய் விசாரித்து

* வ்யாஸப்போட்டிக்கு வந்த வ்யாஸம்.

ஒரு புஸ்தகத்தில் எழுதி வைத்துக்கொண்டு ஷை க்ராமங்களுக்கு ஸர்க்யூட் போகும் போது இருகக்ஷிக்காரர்களேயும், கக்ஷிகளில் சேராமல் பொதுவாயிருக்கும் ஜனங்களேயும் வைத்துக்கொண்டு விசாரித்து மஹாஜனங்கள் அபிப்ராயப்படி முடிவுசெய்து கக்ஷிகளேக் கலேப்பது நலம். இப்படிச் செய்ய அநுகூலப் படாத பக்ஷத்தில், ஒரு பஞ்சாயத்தை ஏற் படுத்தி அவர்கள் மூலமாயாவது ஒரு முடிவு செய்து இரு கக்ஷிக்காரர்களேயும் ஒன்று சேர்க்கலாம். மேற்கண்டபடி செய்வதுடன் உத்ஸவகாலங்களில் ஷை ஆபிஸர்கள் தாமும் க்ராமத்துக்குப்போய் உபய கக்ஷிக்காரர்களே ஒன்று சேர்த்து உத்ஸவம் நடப்பித்து வந் தால் நாளாவட்டத்தில் இக் கக்ஷிகள் நின்று விடும். ஸர்க்கார் உத்யோகஸ்தர்களின் உதவி இல்லாமல் இந்தக் கக்ஷிகள் கலேந்து போவது கஷ்டம். மேற்கண்டபடி முடிவு செய்வதற்கு முன் ரெவினியூ ஆபிஸர்கள் மாற்றப்பட்டால் தாங்கள் வைத்திருந்த கக்ஷிப்ரதி கக்ஷிகள் ஸம்மந்தமான நோட் புஸ்தகத்தை தங்களுக் குப் பிந்தி வருவர்களிடம் கொடுத்துவிட வேண்டும். பிந்தி வந்தவர்கள் மேற்கண்ட படி அமுல் நடத்தவேண்டும். இப்படியே இந்த நோட் புஸ்தகமானது அப்போதைக் கப்போது வேலே பார்த்துவரும் ஆபிஸர்களி டம் இருந்து கொண்டே வரவேண்டும்.

இரண்டாவது, ஸாகுபடி செய்யும் இரண்டு காலேகளுக்கும் பொதுவாயிருக்கும் எல்லே அல் லது பொழித்தகராரும், இரண்டு வீடுகளின் மத்தியிலுள்ள சுவரைப்பற்றிய தகராரும், அநேக க்ராமங்களில் ஸதாரணமாய் ஏற்படு வதுண்டு. இவைகளில் வாதி ப்ரதிவாதி என்று இரண்டே பேர்களிருந்தால் அவர்கள் கோர்ட்டுகளுக்குப்போய் தங்கள் தகராரை பைஸல் செய்துக் கொள்ளுகிறார்கள். அப்படி ப்பட்ட தகராரைப்பற்றி இங்கு சொல்ல வேண் டிய அவசியமில்லே. ஆனல் அவைகளில் சில வற்றில் கக்ஷி ப்ரதிகக்ஷிகள் ஏற்படுவது ண்டு. எப்படி எனில் ஷை தகரார்கள் உண்டாவதற்கு முன் க்ராமத்திலிருந்த கக்ஷிப் பிரதி கக்ஷிகள் இதுதான் நல்ல ஸமய மென்று நினைத்து வாதியுடன் ஒரு கக்ஷியும் ப்ரதிவாதியுடன் ஒரு கக்ஷியும் சேருவது வழக்கமாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஸந்தர் ப்பங்களில் ஒரு கக்ஷியைச் சேர்ந்தவர்கள் கோர்ட்டுகளுக்குப்போய் மற்றொரு கக்ஷிக் காரர்களுக்கு விரோதமாய் ஸாக்ஷியும் சொல் வதினுல் கக்ஷிகள் பலப்படுவதுண்டு. இதுவு மல்லாமல், ஒருவன் ஒரு பூமியை க்ரயத்துக்கு வாங்கி க்ரய சாஸனம் பெற்றுக்கொண்டால் அதே பூமியை ஷை க்ரயம் செய்தவனுடைய கூட்டாளி அல்லது அண்ணன் தம்பி முதலான தாயாதியினுல் மற்றொருவன் க்ரயத்துக்கு வாங்கி அவனும் க்ரய சாஸனம் பெற்றுக் கொண்டு க்ரயத்துக்கு வாங்கின இருவர்களும் தகுந்த கூட்டங்களுடன் ஒரே காலத்தில் ஷை பூமியில் ப்ரவேசித்து கலகம் செய்து மண்டை உடைத்துக்கொண்டு ஒருவர்பேரில் மற்றொரு வர் க்ரிமினல் கேஸ் கொண்டு போவதினுலும், ஸிவில் வ்யாஜ்யம் தொடருவதினுலும் கக்ஷி ப்ரதிகள் ஏற்படுகின்றன. இம்மாதிரியான தகரார்களில் க்ராம கர்னம் உடந்தையாயிருப் பதினுல்தான் கக்ஷிகள் பலப்படுகின்றன. சில ஸமயத்தில் கர்னம் ஒரு கக்ஷியில் சேர்ந்து கக்ஷிகளே பலப்படுத்துவது முண்டு. அல்லது கோர்ட்டுகளுக்குப் போனல் கோமுட்டிசாக்ஷி சொல்வது முண்டு. இவ்விதங்களான கக்ஷி களே எல்லாம் கலேத்துவிடமுதலாவது விஷயத் தில் குறித்தபடி தாலூகா ரிவினியூ ஆபிஸர் ஒரு பஞ்சாயத்தை ஏற்படுத்தி அப் பஞ்சாயத்தைக் கொண்டு விசாரிக்கச் செய்து கக்ஷி ப்ரதிகக்ஷிகளே சுளுவில் ஒன்று சேர்த்துவிடலாம். இவைகள் ஸிவில் ஸம்

பந்தமான தகராறுகளானதால் ஸிவில் கோர்ட்டார்தான் பைஸல் செய்யவேண்டியதென்று சொல்லலாம். ஸிவில் கோர்ட்டார் வ்யாஜ்யத்தைத்தான் பைஸல் செய்வார்களேயல்லாமல் கக்ஷிகளைக்கலைக்க அவர்களால் முடியாது. மேலும், வ்யாஜ்யம் கொண்டு போகாமலேயிருந்தால் ஷை கோர்ட்டார் என்ன செய்யக்கூடும். ஆதலால் மேற்குறித்தபடி ரெவினியூ ஆபீஸர்களுடைய உதவியில்லாமல் கக்ஷி ப்ரதி கக்ஷிகளைக் கலைத்து ஒன்றுசேர்ப்பது கடினம். கர்னம் கக்ஷிகளில் சேர்ந்திருப்பதாய் ரிவினியூ ஆபிஸர்களுக்குத் தெரிந்தபக்ஷத்தில் அப்பேர்ப்பட்ட கர்னனுடைய நடத்தையைப் பற்றி 3-வது விஷயத்தில் சொல்லப்பட்டபடி அமுல் நடத்தலாம்.

மூன்றாவது க்ராம விப்பந்தி புது ஏற்பாட்டின்போது (1888-ம்ஹு) சிலர் மணியம்வேலையை இழந்துவிட்டார்கள். மணியம் வேலைக்காக ஸமுட்தாக்கல் செய்து சிலருக்கு மிராசு பாத்யதையின்பேரில் புதியதாய் மணியம் வேலை கிடைத்திருக்கிறது. மணியத்தை இழந்துபோன பழைய மணியகாரனுக்கும் புது மணிய காரனுக்கும் மணியம் வேலை விஷயமாகவே கக்ஷிகள் ஏற்பட்டு வருகின்றன. இவைகளுக்கு ரொம்ப நாள் சென்று விட்டபடியாலும், கக்ஷியில் சேர்ந்த மணியகாரர்கள் அநேகர் தெய்வ கதி அடைந்து விட்டபடியாலும் இப்படிப்பட்ட கக்ஷிகள் குறைந்துபோய்விட்டன. ஆனால் சில க்ராமங்களில் மாத்ரம் ஆதி மணியகாரர்களைப்பிடித்த பீடை அவர்களுடைய வம்சத்தாரையும் பிடித்து வருகிறது. ஏனென்றால் அவர்களுடைய வார்ஸுகள் தங்களுடைய முன்னோர்களுடைய நாளில் ஏற்பட்ட கக்ஷிகளை விடக்கூடாதென்று அவைகளை பரிபாலித்து வருகிறார்கள். வித்யா அபிவ்ருத்தியும் நாகரீகமும் அடைந்த இந்நாளில் இப்படிப்பட்ட கக்ஷிகள் இருப்பது கெடுதலென்று சொல்லி க்ராமத்திலிருக்கும் சில முக்யஸ்தர்கள் சேர்ந்து ஷை இரண்டு வம்சத்தாரையும் தருவித்து ஸமாதானப்படுத்தி ஒன்று சேர்த்துவிடலாம். ஷை கக்ஷிகளைத் தவிர சில க்ராமங்களில் ரெவினியூ மணியகாரனுக்கும் முன்ஸீப் மணியகாரனுக்கும் கக்ஷி உண்டு. இன்னும் சில க்ராமங்களில் மணியகாரனுக்கும், கர்னனுக்கும் கக்ஷி உண்டு. வெகுவாய் இக்கக்ஷிகளின் ஆதிகாரணம் ஒருவருக்கு விரோதமாய் மற்றொருவர் எந்த ஆபிஸிலாவது அல்லது கோர்ட்டிலாவது வாக்குமூலம் கொடுத்துதான். இப்படி க்ராம உத்யோகஸ்தர்களுக்குள் மனஸ்தாபமும் கக்ஷியுமிருப்பதினால் க்ராம ஊழியக்காரர்களுக்கு அதாவது வெட்டி, தோட்டி தண்டல்காரன் முதலியவர்களுக்கு ரொம்ப கஷ்டம் ஏற்படுகிறது. ஒருவெட்டி ஒரு மாஸத்தில் வேலைக்கு வரவில்லை யென்று கர்னம் ரிபோர்ட் செய்கிறதும், அவன் வேலைக்கு வந்ததாக மணியகாரன் ரிபோர்ட் செய்கிறதுமாயிருக்கிறது. கணக்கு மணியகாரர்களுடைய கக்ஷியினால் இவர்களுடைய ரிபோர்ட்டுகள் தாலூகாவில் பைஸலாகும் வரையில் ஷை க்ராம ஊழியக்காரன் சம்பள மில்லாமல் கஷ்டப்படுவதாயிருக்கிறது. இதனோடு நிற்கிறதில்லை. க்ராமத்தில் உண்டாகும் வ்யவஹாரங்களில் கர்னம் ஒரு கக்ஷியில் சேர்ந்தும், மணியகாரன் ஒரு கக்ஷியில் சேர்ந்தும், கக்ஷிகளை பலப்படுத்துகிறார்கள். இவர்களுடைய வ்யவஹார ரிபோர்ட்டுகளை பைஸல் செய்வதில் ரெவினியூ ஆபிஸர்களுக்கு (தாசில்தார், டிப்டி தாசீல்தார், டிவிஷனபிஸர், கலெக்டர்) விசாரணை வேலையும் கால நஷ்டமும் ஏற்படுகிறது. க்ரிமினல் ஸிவில் கோர்ட்டுகளுக்கும் இவர்களால் வேலை அதிகப்படுகிறது. குடிகளுக்கும் கஷ்டமும் த்ரவ்ய நஷ்டமும்

மனக்கவலையும் உண்டாகின்றன. ஆகையால் கக்ஷிகளில் சேர்ந்து கவர்ன்மெண்டு உத்யோகஸதர்களுக்கும், ஜனங்களுக்கும் தொந்திரவை உண்டாக்கும் கணக்கு மணியகாரர்கள் விஷயமாய் ஸர்க்காரில் ஒரு உத்தரவு ஏற்பட்டால் நல்லது. அது என்னவெனில், கக்ஷிகளில் கணக்கு மணியகாரர்கள் சேர்ந்திருப்பதாய் ருஜுவாகும் பக்ஷத்தில் இந்த காரணத்தைக் கொண்டே அவர்களை தகைர் செய்துவிட ஜில்லா கலெக்டர் துரையவர்களுக்கு அதிகாரமிருந்தால் நலமாயிருக்கும். முக்யமான ஒரிரண்டு க்ராமங்களில் கக்ஷி ப்ரதிகக்ஷிகளில் சேர்ந்த கணக்கு மணியகாரர்களைப்பற்றி தாசில்தாருடையவும், டிவிஷன் ஆபிஸருடையவும் ரிபோர்ட்டுகள் கிடைத்ததின்பேரில் ஷை கணக்கு மணியகாரருக்கு நோடீஸ் கொடுத்து விசாரணைசெய்து கக்ஷிகளில் சேர்ந்திருப்பதாய் ஜில்லா கலெக்டர் துரையவர்களுக்கு ருஜுவானதாய்த் தோற்றும் பக்ஷத்தில் அவர்களை தகைர் செயதுவிட்டால் மற்ற க்ராமங்களிலுள்ள கக்ஷிகள் உடனே நின்றுவிடும். இப்படி தகைர் செய்த ஸங்கதியை ஜில்லா கெஜட்டின் க்ராமப்பத்ரிகைகளில் ப்ரஸித்தம் செய்து வந்தால் ரொம்ப அனுகூல முண்டு.

பொதுவாய் மேற்கண்ட கக்ஷிகளை யெல்லாம் கலைத்து ஒன்று சேர்க்கும் விஷயத்தில் க்ராமாந்தர பள்ளிக்கூட உபாத்யாயர்கள் ஒரு கக்ஷியிலும் சேராமலிருந்துகொண்டு தங்களால் இயன்றமட்டும் ரெவினியூ ஆபிஸர்களுக்கு ஸகாயம் செய்துவந்தால் ரொம்பவும் நல்லது.

பி. வி. வாமனமூர்த்தி ராவ்.

## ENCROACHMENT ON PORAMBOKES.

### புறம்போக்கு என்க்ரோச்மெண்டுகள்.

சென்ற நவம்பர்மாஸம் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடினபோது ஆனரபிள் ராவ்பகதூர் ராமானுஜாசார்யார் புறம்போக்கு என்க்ரோச்மெண்ட் விஷயமாய் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அந்தத் தீர்மானமாவது:--இரண்டு ஸர்வேக்கல்லுகளுக்கு இடையிலுள்ள நேர்கோட்டுக்கும் புறம்போக்குக்கும் மத்தியிலுள்ள நிலம் 5-லிங்குகள் அதாவது 39·6 அங்குலத்துக்கு மேற்படாமலிருந்தால் அதை பி-மெமோராண்டத்தில் அதாவதுபுறம்போக்கு என்க்ரோச்மெண்ட் ஜாப்தாவில் சேர்க்காமலிருக்கும்படி ரெவின்யூ அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று இந்தக் கௌன்ஸில் சிபார்சு செய்கிறது.

இதை ப்ரேரித்தபோது. ராவ்பகதூர் ராமானுஜாசார்யார், வயல்களின் கரைகள் பெரும்பாலும் நேர்கோடுகளாயிராமல் வளைவுகள் உள்ளவைகளாயிருக்கின்றன வென்றும், இந்த வளைவுகளில் நஞ்சைகளில் 5 லிங்கு அல்லது அதற்கு மேற்பட்ட அகலமுள்ள வளைவுகளுக்கும், புஞ்சைகளில் 10 லிங்குகளும் அதற்கு மேற்பட்ட அகலமுள்ள வளைவுகளுக்குமே டிமார்க்கேஷன் செய்திருக்கிறார்கள் என்றும், இதனால் அநேக இடங்களில் ஒரு நிலத்தில் நட்டிருக்கும் இரண்டு ஸர்வேக் கல்லுகளுக்கு இடையிலுள்ள நேர்கோட்டுக்கும், அந்த நிலத்தின் இயற்கையான எல்லைக்கும் மத்தியில் ஒருசிறியபாகம் நிலம் தனியாக நிற்கிற தென்றும், இந்தத் தனிப்பாகம் புறம்போக்குக்குப் பக்கமாயிருந்தால் கர்னன்கள் அந்தத் துண்டு நிலங்களை புறம்போக்கின் பாகங்கள் என்று சொல்லி பி. மெமோராண்டத்தில் சேர்த்து விடுகிறார்கள் என்றும், இதனால் நிலஸ்வான்கள் தண்டத்தீர்வை கொடுக்க நேரிடுகிறதென்றும், ஸமீபகாலத்தில் நிலஸ்வான் புறம்போக்கில் என்க்ரோச் செய்திருக்கிறார் என்று ரூபிக்காவிட்டால் அதை என்க்ரோச்மெண்ட் ஜாப்தாவில் சேர்க்காமல் விட்டுவிடவேண்டு மென்றும் சொன்னார்.

இன்னம், நிலஸ்வான் அந்தத் துண்டு நிலத்

துக்குள்ள தனது பாத்யதையை ருஜூப்படுத்திக் கொள்ளட்டுமென்றால் அப்படி ருஜூப்படுத்துவது முடியாததாயிருக்கிறதென்றும், இந்த சில்லரை எங்க்ரோச்மெண்டுகளை ரயத்துக்கு விடுவதால் கவர்ன்மெண்டுக்கு ரொம்ப நஷ்டம் ஒன்றும் ஏற்படாதென்றும், ஆகையால் இந்த தீர்மானத்தை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்க வேண்டுமென்றும் சொன்னார்.

கவர்ன்மெண்டுகாக எழுந்து பேசின ஆனரபிள் ஸர் ஜான் அட்கின்ஸன், புறம்போக்கு என்க்ரோச்மெண்டுக்கு தண்டத்தீர்வை போடுவது வருமானத்தை உத்தேசித்தல்லவென்றும், என்க்ரோச்மெண்டுகளை ரயத்துகள் விட்டுவிடவேண்டுமென்றே இப்படித்தீர்வை போடப்படுகிறதென்றும், ஆனரபிள் ராவ்பகதூர் ராமானுஜாசார்யார் சொன்னபடி 5-லிங்குகளுக்குள்பட்ட புறம் போக்கு எங்க்ரோச்மெண்டுகளை நிலஸ்வான்களுக்கு விட்டுவிடுகிறதென்று ஏற்பட்டால், வளைந்து வளைந்து போகிற கால் வாய்கள் ஓரமாய் நிலங்களையுடையவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் கால்வாய்களை ஆக்ரமித்து கடைசியில் கால்வாயே இருந்தவிடம் தெரியாமல் செய்து விடக்கூடுமென்றும், இதனால் கால்வாயின் கீழ்பாகத்தில் நிலங்களுடையவர்களுக்குக் கெடுதல் ஏற்படுமாகையாலும், அவர்களுடைய பாத்யதையும் கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டுமாகையாலும், தீர்மானத்தில் கேட்டுக்கொண்டபடி செய்ய முடியாதென்றும் சொன்னார். இன்னம் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டால் கால்வாய்களைப் போலவே க்ராமத்துக்கும் பொதுவாயுள்ள புறம்போக்குகள் ஒற்றையடிப் பாதைகள், ரஸ்தாக்கள் முதலியவைகளும் கொஞ்சம் கொஞ்சமாய் ஆக்ரமிக்கப்பட்டுப்போகுமென்றும், இப்படி க்ராமப் பொதுப் புறம்போக்குகளேயன்றி, ஸ்மசானங்கள், கோவில் புறம்போக்குகள், மசூதிப் புறம்போக்குகள் முதலிய மத ஸம்பந்தமான புறம்போக்குகள் விஷயமாயும் கவர்ன்மெண்டார் பொது ஜனங்களுடைய பாத்யதைகளில் ஒருவரும் ஆக்ரமிக்காதபடிபார்த்துக் கொள்ளவேண்டியது அவர்களுடைய கடமையாயிருக்கிறதென்றும், இதற்கு என்க்ரோச்மெண்ட் ஆக்டை அமுலுக்குக் கொண்டுவந்தால் முடியுமென்றும், தண்டத்தீர்வை போடுமுன் என்க்ரோச் செய்தவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கிறதுண்டாகையால், அது கிடைத்தவுடன் ரயத்து வேண்டுமென்று என்க்ரோச் செய்யவில்லையென்றும் தற்செயலால் நேர்ந்ததென்றும் சொல்லிவிட்டால் கலெக்டர் அல்லது ரெவின்யூ ஆபிஸர் தண்டத்தீர்வை போடாமலிருக்கலாம் என்றுஞல் இருக்கிறபடியாலும், இந்த ஆபிஸர்கள் அந்தமாதிரி கேஸூகளில் தண்டத்தீர்வை போடமாட்டார்கள் என்று தமக்கு (ஸர் ஜான் அட்கின்ஸனுக்கு) நம்பிக்கையிருக்கிறதாலும், இதனால் ரயத்துகளுக்கு யாதொரு கஷ்டமும் இல்லையென்றும், இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், சொன்னார். ஆனரபிள் மிஸ்டர் ராமானுஜாசார்யார் மறுபடியும் எழுந்து பேசினபோது, தமது தீர்மானத்தின் கருத்தை ஸர்ஜான் அட்கின்ஸன் ஸரிவர அறியவில்லையென்றும், ஸர்வே டிபார்ட்மெண்டார் சிறிய வளைவுகளுக்கு டிமார்க்கேஷன் செய்யவில்லையென்றும், இந்த வளைவுகள் கவர்ன்மெண்டுக்காவது, கால்வாய்ப் புறம்போக்குக்காவது ஸொந்தமில்லையென்றும், நிலஸ்வான்களுக்கே ஸொந்தமென்றும், இவைகளை மாத்ரம் நிலஸ்வான்களுக்கு விட்டுவிடவேண்டுமென்று கேட்பதாகவும், புது என்க்ரோச்மெண்டுகள் நேரும் பக்ஷத்தில் என்க்ரோச்மெண்ட் ஆக்டை அமுலுக்குக்கொண்டுவர ஆக்ஷேபணையில்லையென்றும், இந்தத்

தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட தன்மேல் நிலஸ்வான்கள் கால்வாய், பொதுப் புறம்போக்குகள், மதஸம்பந்தமான புறம்போக்குகள் ஆகிய இவைகளை ரயத்துகள் என்க்ரோச் செய்ய ஆரம்பித்தால் உடனே க்ராமத்தார்களிடமிருந்து ரெவின்யூ ஆபிஸர்களுக்கு பெடிஷன்கள் வந்து குவியுமாகையால் அதுவிஷயமாகப் பயப்படவேண்டியதில்லை என்றும் சொன்னர். தீர்மானத்தை கௌன்ஸிலில்வோட்டுக்கு விட்டதில் நிறைவேருமல் போயிற்று.

## CULTIVATION OF CASTOR

### ஆமணக்கு ஸாகுபடி.

'கிருஷிகன்' பத்ரிகையின் ஸமீபத்து ஸஞ்கிகை ஒன்றில் ஆமணக்கு ஸாகுபடியைப் பற்றி ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

நமது ராஜதானியில் ஆமணக்கை வேறு பயிர்களுக்கு லாயக்கில்லாத ஸத்திழந்த நிலங்களில் ஸாகுபடி செய்கிருர்கள்.

இது முக்யமாய் பல்லாரி, அனந்தபூர், க்ருஷ்ணு, கோதாவரி, சேலம், திருச்சினுப்பள்ளி முதலான ஜில்லாக்களில் ஸாகுபடி செய்யப்படுகிறது. கோதாவரி ஜில்லாவில்மட்டும் மிகவும் ஸத்துள்ள ஆற்றுப்படுகை நிலங்களில் பயிர் செய்கிருர்கள். அநேகமாய் இதற்கு எருப்போடும் வழக்கம் நமது ராஜதானியில் இல்லையென்றே சொல்லலாம். வருஷந்தோறும் பயிர் மாற்றும் வழக்கம் இருக்கும் சில விடங்களில் அடியில் கண்டபடி பயிர் மாற்றுகிருர்கள்.

| | | |
|---|---|---|
| 1-ம் போகம் | கம்பு | வரகு |
| 2-ம் போகம் | பருத்தி, தினை | ஆமணக்கு |
| 3-ம் போகம் | ஆமணக்கு | பருத்தி, தினை |

| | | |
|---|---|---|
| 1-ம் போகம் | சோளம் | சோளம் |
| 2-ம் போகம் | ஆமணக்கு | பருத்தி, தினை |
| 3-ம் போகம் | தினை | ஆமணக்கு |

புன்செய் செவ்வல் நிலங்களில் ஆமணக்கும் துவரையும், ஆமணக்கும் கொள்ளும், ஆமணக்கும் மொச்சையும் கலந்து விதைப்பதுமுண்டு. ஆமணக்கும் துவரையும் கலக்க விதைக்கவேண்டும். "ஆமணக்கும் துவரையும் அடர விதைப்பானு?" என்னும்பழமொழியையும் கவனிக்கவேண்டும். கோயம்புத்தூர் ஜில்லாவில் போர்போன் . பருத்தியுடனும் பெரிய மஞ்சட் சோளத்துடனும் கலந்து விதைக்கும் வழக்கம் இருக்கிறது. கரும்பு மஞ்சள், ஆகியபயிர்களுடனும் இதைக்கலந்து விதைக்கிருர்கள். ஆமணக்கைத் தனியாக விதைக்கும்போது ஏக்கர் ஒன்றுக்கு ஸுமார் 15 அல்லது, 20 ராத்தல் விதையும் கலப்புப் பயிர் செய்யும்போது ஏக்கர் ஒன்றுக்கு $2\frac{1}{2}$-முதல் 4 ராத்தல் வரையும் விதைக்கலாம்.

இந்தப் பயிர் விதைத்தவுடன் முளைப்பதற்கு வேண்டிய மழையிருந்தால் அதற்குப்பின் அதிக மழை யிருக்கவேண்டுமென்பது அவச்யமல்ல. இதன் ஸாகுபடிக்கு ஈரம் பிடிக்காத கொழுமையுள்ள மணற்கால் அல்லது பசளை நிலம், அல்லது மணலும் களிமண்ணும் கலந்த நல்ல நிலம், மிகவும் தகுந்தது. சுத்த மணலாவது இறுகிய களியாவது இந்தப் பயிருக்கு உதவாது.

ஆமணக்கின் வேர் ஆழமாயும் விரிவாக்வும் செல்லுமாகையால் விதை விதைப்பதற்கு முன்னல் நிலத்தை ஆழமாக உழவேண்டியது அவச்யம். மழை காலத்தில் நிலத்தை நன்ன்ருய் உழுது புரட்டிவிட்டால் மண்ணிலுள்ள புழுப்பூச்சிகளும் அவற்றின் முட்டைகளும் வெளியே தெரியும். அவற்றைப் பட்சிகள் பொறுக்கிக்கொண்டு போய்விடும். இல்லாவிட்டால் பயிர் உண்டானவுடன் இப்பூச்சிகள் பயிரை அழித்து நாசம் செய்துவிடும்.

மற்ற தைலவிதைப்பயிர்களைவிட ஆமணக்குப்பயிர் மண்ணின் ஸாரத்தை சீக்ரத்தில் உறிஞ்சி நிலவளத்தைக் குறைத்துவிடும். அதிக வளமுள்ள நிலங்களிலன்றி மற்றவைகளில் இந்தப் பயிர் தொடர்ச்சியாய் ஸாகுபடி

செய்யவேண்டுமானல் அவைகளுக்கு அதிகமாய் எருவிடவேண்டும். இந்தப் பயிருக்குக் கொட்டை முத்துப்பிண்ணாக்கு வெகு ச்லாக்யமான எருவாகும். இதன் இலைச் சருகு,காயின் வெளித்தோடு, முதலிய எல்லா பாகங்களும் அந்நிலத்திலேயே மடியவிடவேண்டும். சாணி எருவும், வண்டலும் உபயோகமுள்ளவைதான். இத்தேசத்தில் அநேக விடங்களில் ஆமணக்கைத் தனிப்பயிராக ஸாகுபடி செய்வதில்லை. அதனல் அந்த நிலத்தின் ஸாரம் அதிகமாய் இழந்து போவதில்லை. ஆனல் ஒரு நிலத்தில் இதைத் தனிப்பயிராக ஸாகுபடி செய்தால் அதன்பின் ஐந்தாறு வருஷம் கழித்துத்தான் மறுபடியும் ஆமணக்குப்பயிரிட அது லாயக்காகும். அதற்கிடையில் அதைப் பயிரிட்டால் அது தக்க மாஸூல் கொடுக்காது. அந்நிலத்தில் பயிர் மாற்றல் மிகவும் அவச்யமாகும்.

விதைக்கு முன் ஆமணக்கு முத்தை நகச்சூடாயிருக்கும் வெந்நீரில் 24 மணி நேரத்துக்கு ஊறவைத்து விதைத்தால் ஜல்தியிலும் ஒரே விதமாகவும் எல்லா விதைகளிலும் முளை கிளம்பும். பேராமணக்கு விதையை6 அடிக்கும் சிற்றுமணக்கு விதைகளை 3 அடி இடைவிட்ட வரிசைகளில் 18 அங்குலத்துக்கு ஒன்ருகவும் விதைக்கவேண்டும். இதற்கும் நெருக்கமாய் விதைத்தால் செடிகள் நெட்டையாக வளர்ந்து பக்கக் கிளைகள் அதிகமில்லாமல் கெட்டுப்போகும். மேற்சொன்ன விதமாகக் கலக்க விதை ஊன்றினல் செடிகளுக்குஊடே காற்றும் வெளிச்சமும் பட்டு செடிகள் நன்ருய்க் கிளைத்து அதிக மாஸூல் கொடுக்கும். உழவு சாலில் 18 அங்குல இடைவிட்டு இரண்டிரண்டு விதைகளைப் போட்டுக்கொண்டு போனல் அடுத்த படைச்சாலின் மண் அவைகளை மூடிவிடும். ஒரு விதை முளைக்காவிட்டாலும் மற்ருென்று முளைக்கும், அல்லது இரண்டும் முளைத்தாலும், வளமாய் உண்டாயிருக்கும் செடியை விட்டுவிட்டு நொய்ந்திருக்கும் செடியைப் பிடுங்கி எறிந்துவிடலாம். பயிர் முக்கால் அடி உயரம் ஆனவுடன் இது செய்யவேண்டும். பேராமணக்கு விதை ஏக்கர் ஒன்றுக்கு ஸுமார் 10 ராத்தல் நிறையுள்ளதும், சிற்றுமணக்கு விதை ஏக்கர் ஒன்றுக்கு ஸுமார் 14 ராத்தல் நிறையுள்ளதும் அவச்யம். பேராமணக்கு தினுஸை ஜூலைமாஸத்தில் விதைப்பார்கள். சிற்றுமணக்கு கார்த்திகைமாதக் கடைசியில் விதைக்கப்படுகிறது. பயிருண்டாகி நெருங்கிய செடிகளைப் பிடுங்கிக் களைத்தபின் கலப்பைகொண்டு பயிருழவு செய்யவேண்டும். இதனல் செடிகளின் தூர்களில் மண்ணணைக்கப்படும். அதிகமான ஈரம் தூர்களில் நிற்காது. மேலும் மண்ணைக் கிளறுவதால் நிலத்திலுள்ள மண்ணீரம் வெகு நாளைக்கு உலர்ந்து போகாது. பயிர் இரண்டடி உயரமானவுடன் இவ்விதமாய் பயிருழவு செய்வதை நிறுத்திவிடவேண்டும். ஏனெனில் செடிகளின் நிழலே மண்ணீரத்தைக் காத்துக்கொள்வதன்றி, களைகளால் பயிர் கெடுகியடையாது. செடிகள் வெகு சீக்கிரத்தில் தழைத்து மதத்து உயர வளர்ந்தால் அது நல்லதல்ல. ஸரியானபடி காய்கள் அதிகமாய் அதில் உண்டாகா. அப்படிப் பயிர் மதத்து வளரும்போது அதன் உச்சிக் கொழுந்தைக் கிள்ளிவிடவேண்டும். அப்படிச் செய்தால் பக்கக்கிளைகள் அதிகமாய் உண்டாகி காய்க்குலைகள் அதிகமாய்க் காய்க்கும். மேலும் அதிக உயரமாய் வளரும் செடிகளிலிருந்து மாஸூல் சேகரிப்பது கொஞ்சம் ப்ரயாஸமாயிருக்கும். குட்டைச் செடிகளின் மாஸூல் எடுப்பதற்குமிகவும் ஸௌகரியமாயிருக்கும்.

## EARTHENWARE POTS AND TIN CANS

### மண்சட்டிகளும் தகரப்பாத்ரங்களும்.

மாங்கன்று போன்ற செடிகளை மண்சட்டிகளில் வைத்துவ்ருத்தி செய்வதைவிட தகரத்தினுல்செய்தபாத்ரங்களில் வைத்துப் பயிர் செய்

தால் செடிகள் நன்ருய் வளருகின்றன என்று ஹாவாயி என்னும் தீவில் அநுபவத்தில் தெரியவந்தது. அதன்மேல் அவ்விடத்து விவஸாயிகள் அதுவிஷயமாய் ஆராய்ச்சிசெய்து, அப்படி தகரத்தால் செய்தபாத்ரங்களில் செடிகளை வைத்துப் பயிர்செய்தால் அந்தச் செடிகள் மண்ட்டிகளில் வளரும் செடிகளைவிட ஏன் நன்ருய் வளருகின்றனஎன்பதற்கு காரணம்கண்டு பிடித்திருக்கிருர்கள்.

முதலில் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு இரண்டு விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டார்கள். அவைகளாவன:-இரண்டு வித சட்டிகளிலிருந்தும் நீர் ஆவியாய்ப்போவதில் ஏற்படும் வித்யாஸம். தகரத்திலுள்ள ஈயத்தாலும், பற்றவைக்க உபயோகித்த பொருளாலும் செடிக்கு வளரும் சக்தி அதிகரித்தல்.

முதலில் செய்த பரீக்ஷைகளில், தகரத்தில் ஜலம் ஆவியாய்ப் போவதைவிட மண்சட்டியில் $2\frac{1}{2}$ மடங்கு வேகமாக ஜலம் ஆவியாய் மாறுகிறதென்று தெரியவந்தது. மண்சட்டியில். மேல்பாகத்திலேயேயன்றி அதன் பக்கங்களிலும் ஜலம் கசிந்துவந்து ஆவியாய் மாறிப் போயிற்று.

சட்டிகளில் ஜலம் கசிந்துவரும் த்வாரங்கள் சில சட்டிகளில் கொஞ்சம் குறைவாயும், சில சட்டிகளில் இன்னம் குறைவாயும் இருக்கும். சிலசட்டிகளில் செடிகளை வளர்த்துப் பார்த்ததில் சட்டிகளிலுள்ள த்வாரங்கள் எவ்வளவுக்கெவ்வளவு நெருக்கமாயிருந்தனவோ, அவ்வளவுக் கவ்வளவு செடிகள் உயரமாயும் செழுமையாயும் வளர்ந்திருந்தன.

இன்னம் சில பரீக்ஷைகளும் செய்து பின்வருமாறு ஸித்தாந்தம் செய்தார்கள்.

மண்சட்டிகளில் ஜலமானது பக்கத்துவாட்டில் ஓடுவதால் வேர்களைச் சுற்றிலும் உள்ள மண்ணில் ஈரம் எப்போதும் ஒரே விதமாக இருக்கும்படி செய்வது கஷ்டமானது. தகரத்திலோ பக்கவாட்டில் ஈரம் ஆவியாய்ப் போகாததனுல் செடிகளின் வேர்களின் ஈரம் எப்பொழுதும் காயாமல் இருக்கும்படி செய்வது ஸுலபம்.

தகரச்சட்டிகளில் ஈயம், நாகம் ஆகிய இவைகள் ஸம்பந்தப்பட்ட உப்புக்கள் செடிகளின் வளர்ச்சிக்கு ரொம்ப ஸாதகமாயிருக்கின்றன. மண்சட்டிகளில் இந்த ஸாதகம் கிடையாது.

சட்டிகளில் வைத்து வளர்ப்பவர்கள்இவ் விஷயங்களை கவனித்துப் பார்த்து தகரத்தால் பூந்தொட்டிகள் செய்து உபயோகித்துப் பார்ப்பார்களாக. கெரோஸின்தகரங்களை விசேஷமாக உபயோகப்படுத்திப் பார்க்கலாம்.

## SEED FARMS IN C. P.

### மத்யமாகாணங்களில் விதைப் பண்ணைகள்.

மத்ய மாகாணங்களின் விவஸாய டிபார்ட்மெண்டார் அந்த மாகாணங்களிலுள்ள விவஸாயிகள் உபயோகப்படுத்தும் விதை தினுஸுகளை அபிவ்ருத்தி செய்யும் விஷயமாய் பல வருஷங்களாக ரொம்ப கவனம் செலுத்தி வருகிருர்கள்.

முதலில் கவர்ன்மெண்டார் தங்களுடைய பண்ணைகளில் கலப்பில்லாத உயர்ந்த விதைகளைப் பயிரிட்டு கலப்பில்லாத உயர்ந்த விதையெடுக்கிருர்கள். பிறகு அந்த விதைகளை வயல்களில் பயிரிட்டுக் காட்டியும், பொருட்காட்சிகளில் வைத்தும், விவஸாய மீட்டிங்குகளில் அவைகளைப்பற்றிச் சொல்லியும், கவர்ன்மெண்டார் வசம் நல்ல விதை யிருப்பதைத் தெரியப்படுத்துகிருர்கள். பிறகு அந்த விதைகளை ஜில்லா விவஸாய ஸங்கங்களிலுள்ள சில மெம்பர்களுக்குக் கொடுத்து தங்கள் வயல்களில் பயிரிட்டுப் பார்க்கும்படி செய்கிருர்கள். அந்தந்த ப்ரதேசத்தில் வழக்கம்போல் விதைக்கும் விதைகளைப் பயிரிட்டதால் கிடைத்த

மாஸுலேயும், புது விதையால் கிடைத்த மாஸுலேயும் ஒப்பிட்டுப் பார்த்து புது விதையின் மாஸுல் த்ருப்திகர மாயிருந்தால் விவஸாயிகள் புது விதையைவாங்கி உபயோகிக்க முன் வருகிறார்கள்.

இப்படிச் செய்வதற்கு விவஸாயிகளுடைய கூட்டுறவும் வேண்டியிருப்பதால், ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு விவஸாய ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஸங்கங்களின் மெம்பர்களுக்குத் தான் விதைகள் விலேக்கு கொடுக்கிறார்கள். விதைகள் வாங்கும் ஒவ்வொரு மெம்பரும் ஸ்ரிவர மானேஜ் செய்யப்படும் ஒரு விதைப் பண்ணையில் விதைக்கவேண்டும். பண்ணையில் ஒரு தினுஸு விதைதான் விதைக்கவேண்டும். அந்தப்புது விதையின் மாஸுலுக்கென்று தனியாக போரடிக்களம் இருக்க வேண்டும். மாஸுலேயும் விதைக்கென்று தனியாக வைத்திருக்கவேண்டும்.

விவஸாய அஸிஸ்டெண்ட் அந்தப் பண்ணைகளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கொரு தடவை வந்து பார்ப்பார்.

பண்ணையின் மாஸுலே அந்த ப்ரதேசத்திலுள்ளவர்களுக்கு விற்று மிச்சமானதை அருகிலுள்ள ஊர்களுக்குக் கொண்டுபோய் விற்று விடுவார்கள். விவஸாயத்தில் விதையே ரொம்ப முக்யமானது. மேற்சொன்ன மாதிரி எவ்விதத்திலும் நல்லவிதை சேகரிக்க முயல வேண்டும்.

## WHAT THE FARMER PAYS FOR

### விவஸாயிகள் பணம் போகும் விதம்.

ஒரு இங்க்லீஷ் பத்ரிகையில் ஒரு நிருபர் விவஸாயி செலுத்துகிற பணம் போகும் விதத்தைப்பற்றி எழுதியிருக்கிறார்.

விவஸாயி போலீஸ் பந்தோபஸ்துக்காக வரி செலுத்துகிறான். ஆனால் அவனுக்கு பந்தோபஸ்து கிடைப்பதில்லே. அவன் தனது ஸொத்தை பாதுக் காத்துக்கொள்ள வேண்டுமானால் தானே ஸொந்தத்தில் ஏற்பாடுசெய்து கொள்ள வேண்டியிருக்கிறது. அவன் அநேக ஸமயங்களில் விளக்குப் போடுவதற்காகவும், வரி செலுத்துகிறான். ஆனால் அவனிருக்கும் ஊரிலும் தெருவிலும் விளக்குக் கிடையாது. அவன் பள்ளிக்கூடம் நடந்து வருவதற்காகப்பணம் கொடுக்கிறான். ஆனால் பள்ளிக்கூடங்கள் அவனுடைய பிள்ளைகள் தினம் நடந்து போகும்படி அவ்வளவு ஸமீபத்தில் இருப்பதில்லே.

அவன் ஜல வஸதிக்காகப் பணம் செலுத்துகிறான். ஆனால் அவனுக்கு ஜலம் வேண்டும் போது தனது கிணற்றுக்குத்தான் போக வேண்டியிருக்கிறது.

ரோடுகளை ஸரிவர ரிபேர் செய்து வைத்திருப்பதற்காக வரி செலுத்துகிறான். அதற்கு ப்ரதி பலனை அவன் அடைவது ரொம்பஸ்வல்பந்தான். ஒருவரியும் செலுத்தாதவர்கள் தான் ரோடுகளை ரொம்ப உபயோகித்துக் கெடுத்து விடுகிறார்கள்.

சில பாபத்துகள்தான் மேலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. விவஸாயி கொடுக்கும் வரியையும், பட்டணங்களிலுள்ளவர்கள் கொடுக்கும் வரியையும் ஒப்பிட்டுப்பார்க்கும் ஜனங்கள் இன்னார் இவ்வளவு கொடுக்கிறார் என்று "ரூபாய் அணு, பைஸாவில்" கணக்குப்போட்டு காட்டுகிறார்கள். பட்டண வாஸத்தார்கள் தங்கள் வீடுகளுக்கும் கைத்தொழில் நடக்கும் இடங்களுக்கும் மாத்ரம் உள்ள வாடகையின் மேல் வரி செலுத்துகிறார்கள். ஆனால் விவஸாயியோ தானிருக்கும் நிலத்திற்கும் வரி செலுத்தவேண்டியிருக்கிறது. அதாவது, தான் மாஸுல் உற்பத்தி செய்து விற்பதற்கு ஸாதனமாயிருக்கும் கருவியாகிய நிலத்துக்குக்கூட வரி செலுத்தவேண்டியிருக்கிறது. மேலும் இன்னொரு விஷயம் பலர் மறந்து விடுகிறார்கள். பட்டணவாஸத்தான் தான் கொடுக்கும்

வரிக்கு ப்ரதியாக முழு பலனையும் அடைகிருன். அதாவது, போலீஸ்காவல், தெருக்களுக்கு விளக்கு வெளிச்சம், நல்ல ரஸ்தாக்கள், நல்ல பள்ளிக்கூடங்கள், நல்ல ஜலம் ஆகிய இவைகள் எல்லாம் கிடைக்கின்றன. ஆனல் விவஸாயியோ தான் கொடுக்கும் வரிக்குப்ரதியாக ஒன்றும் அடைவதில்லை" என்கிருர்.

நமது தேசத்திலும் விவஸாயி கொடுக்கும் வரியும் ஸெஸ்ஸும் எல்லாருக்கும் பயன் படக்கூடிய கார்யங்களுக்கு உபயோகப்பட்டுப்போய் க்ராமங்களில் ரஸ்தாக்கள் போடுவது, பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பது, வைத்ய சாலைகள் ஏற்படுத்துவதுஆகிய இவைகளுக்குப்பணம் இல்லாமல் மறுபடியும் ஸெஸ்ஸை உயர்த்தலாமா என்று ஆலோசிக்கிருர்களே!

## WATERY MILK.

### தண்ணீரான பால்.

மாட்டை அதிக ஜலம் குடிக்கும்படி செய்வதனுலும், அல்லது அதிக ஜலஸம்பந்தமான ஆகாரம் அதற்கு கொடுப்பதனுலும் அது கொடுக்கும் பால் அதிக ஜலஸம்பந்தமாக ஆய்விடுகிறதென்று சிலர் நம்பிவருகிருர்கள். ப்ரான்ஸ்தேசத்தில் 1910-ம் வருஷத்தில் ஒரு பால்காரன் இப்படி மாட்டுக்கு அதிகஜலம் குடிக்கும்படி கொடுத்து பாலில் ஜலம் கலந்து விட்டான் என்று சொல்லி அதிகாரிகள் அவனை ப்ராஸிக்யூட் செய்து தண்டித்தார்கள். ஆனல் இங்கிலாண்டிலுள்ள விவஸாய போர்டார் இப்படி மாட்டை அதிக ஜலம் குடிக்கும்படி செய்து பாலை ஜலப்பாலாக்கி விடலாமா என்னும் விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்து பார்த்ததில், இப்படி ஜலஸம்பந்தமான ஆகாரம், அல்லது ஜலம் மாட்டுக்கு அதிகமாகக் கொடுத்து பாலைத் தண்ணீர்ப் பாலாக்கி விடலாம் என்பது உண்மையல்ல வென்று தெரியவந்தது. அவர்கள் தங்களுடைய ஆராய்ச்சியில் 7-பசுக்களை உபயோகப்படுத்திஞர்கள். அந்தப் பசுக்களுக்கு வாரத்தில் 6 நாள் அதிக ஜல ஸம்பந்தமில்லாத தீனி கொடுத்து 7-வது நாள் அவைகளின் தீனியில் ரொம்ப உப்புச்சேர்த்து அவைகளுக்கு தாகம் அதிகமாக உண்டாகும்படி செய்தார்கள். இப்படிச் செய்தும் பாலில் அதிக வித்யாஸம் தெரியவில்லை. மறுபடியும் பரீக்ஷைகள் நடத்திப்பார்த்ததில், பசுக்கள் அதிகமாய்த் தண்ணீர் குடிப்பதனுல் பாலின் தன்மையானது மாறுபடவில்லை யென்று நிச்சயிக்கப்பட்டது.

ஆனல் இந்தப் பரீக்ஷைகளைக்கொண்டு ஒன்றும் தீர்மானமாய்ச் சொல்வதற்கில்லை யென்று ஒரு நிருபர் ஒரு இங்கிலீஷ் பத்ரிகையில் தெரிவிக்கிருர்.

ஏனென்ருல், ரொம்ப பசுமையும், சாறும் உள்ள புல்வகைகளை மாடுகளுக்குத் தீனியாகப் போட்டால் பால் ரொம்ப தண்ணீர்ப்பாலாய் இருக்கும் என்பது எல்லா பால்காரர்களும் அறிந்த விஷயம் என்று அவர் சொல்லுகிருர். அப்படிப் பாலில் ஜலம் அதிகரித்து விட்டால் அதிகாரிகள் பாலில் அதிக ஜலம் கலந்துவிட்டதற்காக தங்களை தண்டிப்பார்கள் என்று எண்ணி மாடுகளுக்கு ஜல ஸம்பந்தமில்லாத வேறு தீனிகளையும் வேண்டிய அளவு பால்காரர்கள் வைப்பது வழக்கமாம்.

## JAGGERY AND MILK

### வெல்லமும் பாலும்.

மாட்டுக்குப்போடும் ருசியற்ற தீனியோடு வெல்லம் அல்லது தேன் பாகைக் கலப்பதால் பாலின் அளவு வ்ருத்தியாகுமா என்பதைப் பற்றி ஜெர்மெனியில் ஸமீபத்தில் சில பரீக்ஷைகள் நடத்திப் பார்த்தார்கள். ருசியில்லாத தீனியில் வெல்லம் கலந்து மாடுகளுக்குக் கொடுத்ததில் பாலின் அளவு அரைமடங்கு அதிகமாக ஆயிற்று. இன்னும் சில பரீக்ஷை

கள் செய்து பார்த்ததில் சில தீவனப்பொருள்களால் பாலின் தன்மையும் அளவும் வேறுபடுகின்றன வென்றும், அந்த உணவுப் பொருள்களில் அதிக உணவு ஸத்துகள் இல்லாவிட்டாலும், பால்சுரக்கும் தன்மையை வ்ருத்தி செய்யும் குணம் அவைகளுக்கு இருக்கின்றன வென்றும் ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள்.

### GROUNDNUT CAKE AS FOOD FOR CATTLE

மாடுகளுக்கு வேர்க்கடலைப் பிண்ணாக்கு.

வேர்க்கடலைப் பிண்ணாக்கை மாடுகளுக்குத் தீவனமாய் உபயோகித்து அம்மாட்டெருவை உபயோகித்தால் க்ருஷிகருக்கு இரண்டு விதத்தில் லாபமாகிறது. ஏனென்றால், அது மாடுகள் சாப்பிடக்கூடிய பிண்ணாக்காகையாலும் அதில் சற்று ஜாஸ்தி எண்ணெய்ப்பசை இருப்பதாலும் அந்த எண்ணெய்ப்பசை மாடுகளுக்குத் தீவனமாய் உபயோகப்பட்டு அப்பால் அந்த மாட்டெருவை உபயோகப்படுத்தினால் ரொம்ப அனுகூலமுண்டாகும். இல்லாவிட்டால் அந்தப் பிண்ணாக்கிலிருக்கும் எண்ணெய்ப்பசை ஷை பிண்ணாக்கை ஜாஸ்தியாய் மக்கி எருவாக உபயோகப் படுத்தும்படி இடம் கொடுக்கமாட்டாது என்று "கிருஷிகன்" எழுதுகிறது.

### MANURE FOR COCOANUT.

தென்னைக்கு எரு.

தென்னைக்கு பொட்டாஷைவிட பாஸ்பாரிக் ஆஸிடும் நைட்ரோஜனும் ரொம்ப உபயோகமானவையென்று இங்க்லீஷ்பத்திரிகை ஒன்று சொல்லுகிறது. ஆயினும் பொட்டாஷ் தென்னைக்கு எருவாக இடவேண்டியது அவச்யந்தான். தொழுவத்தெரு ச்ரேஷ்டமான எருக்களில் ஒன்றாகும். பிண்ணாக்கு, இந்த்ரிய ஸம்பந்தமான உரங்கள், எலும்புத்தூள் ஆகிய இவைகளும் ரொம்ப ச்ரேஷ்டமானவை. தென்னைகளுக்கிடையில் கோதுப்பயிர்கள் ஸாகுபடி செய்து அவைகளை பசுந்தாளுரமாக உபயோகிப்பது நல்லது. ஸாதாரண உப்பு தென்னைக்கு ரொம்ப ச்ரேஷ்டமான எரு என்று இது வரையில் எண்ணியிருந்தது போய், க்ளோரைட் ஆப் பொட்டாஷ் எருவே போதுமானதென்று இப்போது அபிப்ராய மிருந்துவருகிறதென்று ஷை பத்ரிகை கூறுகிறது.

### TEA REFUSE AS MANURE

கழிபட்ட தேயிலை எருவாகும்.

கழிபட்டுப் போன தேயிலையை ரோஜாச் செடிகளுக்கு எருவிட்டால் ரோஜா ரொம்ப செழிப்பாக வளருகிறதாம். இதை உபயோகித்ததில் ரோஜாப் புஷ்பங்கள் 6-அங்குல குறுக்களவுள்ளன வாகவும், சிறந்த வர்ணமுள்ளன வாகவும், வளர்ந்தனவாம். ஸாதாரணமாய் ஒரு செடிக்கு இரண்டு கையளவு எருவாகப் போட்டால் போதும். பெரிய செடிகளுக்கு அதிகம் போடவேண்டுமாம்.

பங்களூரில் இதைப்பரீக்ஷித்துப் பார்த்ததில் கால ஸ்திதி செடிகளுக்கு ரொம்ப கெடுதலாக இருந்தும், ரோஜாச்செடிகள் ரொம்ப நன்றாய் வளர்ந்து நல்ல புஷபங்கள் புஷ்பித்தனவாம். ரோஜாச்செடி வைத்திருப்பவர்கள் இதைப் பரீக்ஷித்துப்பார்ப்பது நல்லது.

### INSECTICIDE.

பூச்சிகளைக் கொல்லமருந்து.

பயிரில் பூச்சிகள் விழுந்தால் பின்வரும் மருந்தை உபயோகிப்பது நல்லது. புகையிலைத்தூள் ½ ராத்தல், கந்தகத்தூள் ½ ராத்தல், சுண்ணாம்பு ½ ராத்தல், இவைகள் மூன்றையும் ஒரு காலன் ஜலத்தில்கலந்து ஒருமணி நேரம் பொறுத்து அதில் தெளிந்து நிற்கும் ஜலத்தை மாத்ரம் எடுத்து பூச்சிகள் உள்ள பயிர்களில் தெளித்தால் பூச்சிகள் அழிந்து போகும்.

# The Co-operative World.
# கோவாபரேஷன் பகுதி.

## THE CO-OPERATIVE IDEAL.
### கோவாபரேஷனின் லக்ஷியம்.

கோவாபரேஷன் முயற்சி நமது தேசத்தில் ரொம்பப் பரவியிருந்தும் அதன் நோக்கம் இன்னதென்று பலருக்குத் தெரியாமலிருக்க லாம். லார்ட் க்ரே இன்டர் நாஷனல் கோவாப ரெடிவ் காங்க்ரெஸில் கோவாபரேஷனுடைய நோக்கங்கள் இன்ன வென்பதை வ்யக்தமாய் எடுத்துச்சொன்னார். அதை இங்கு எடுத்து எழுதுகிறோம்.

உலகத்திலுள்ள எல்லா கோவாபரேடர் களுக்கும் பொதுவாக கோவாபரேஷனைப்பற்றி சில முக்ய கொள்கைகள் இருக்கின்றன. முத லாவது, கோவாபரேஷன் முயற்சியானது ஒரு தனி ஜாதியைச்சேர்ந்த முயற்சியாகவாவது, ராஜாங்க ஸம்பந்தமான முயற்சியாகவாவது இருக்கக்கூடாது. ஒரு மதத்தை ஒட்டியவர் களுடைய முயற்சியாகவும் இருக்கக்கூடாது. அது ஒரு ஜன ஸமூகத்தார் தாங்களாகவே நடத்தும் ஒரு முயற்சியாக இருக்கவேண்டும். அதைச் சேர்ந்தவர்கள் தங்கள் மனக்கிளர்ச்சி யால் தூண்டப்பட்டு அந்த முயற்சியை ஸ்தாபித்து நடத்தி பலப்படுத்தவேண்டும். சில வ்யாபாரிகளும் தொழிலாளிகளும் வ்யா பாரத்தைத் தங்களுக்கு ஸாதகமாக்குவதற் காக ஒன்று சேர்ந்து பிறருடைய வ்யாபாரத் துக்குபோட்டியாகவேலைசெய்வதுபோல் இந்த முயற்சி வேலைசெய்வதல்ல. இது அப்படிக்கில் லாமலும், ராஜாங்க நிபந்தனைகளால் பாதிக்கப் படாமலும் யாரும் இதில் சேர்ந்து பயன் பெ றக்கூடியதாக இருந்து, பெரிய வ்யாபாரிகளி னுடைய ஸங்கங்களும், மற்ற ஸங்கங்களும் ஸாதாரண ஜனங்களை ஹிம்ஸிக்காமல் தகுந்த படி பாதுகாக்க ஏற்பட்ட ஒரு முயற்சியாகும்.

இந்தக் கோவாபரேஷனை நமது தொழில் களில் உபயோகப்படுத்துவதால் ஜனங்களு க்கு பலவிதத்தில் லாபம் ஏற்படுகிறது. இங்கிலண்ட், ஜெர்மெனி, ப்ரான்ஸ், அமெரிக் கா ஐக்யமாகாணங்கள், டென்மார்க், ஐயர் லண்ட் முதலிய தேசங்களில் கைத்தொழில் களில் கோவாபரேஷன் ஏற்பாட்டை உப யோகிக்கிறார்கள். ஒவ்வொருவரும் தனித் தனியாக வாங்குவதை விட்டு விட்டு, கோவாப ரேஷன் முறையில் வாங்கியும், ஸாமான் அல்லது விளைபொருள்களை ஒவ்வொருவனும் தனித்தனியாக விற்பதற்கு பதிலாக கோவாப ரேஷன் முறையில் வெளியூர்களுக்குக் கொண்டுபோய் விற்றும், ஒவ்வொரு தொழி லாளியும் விலையுயர்ந்த யந்த்ரங்களை வாங்கி உப யோகிப்பதற்குப் பதிலாக கோவாபரேஷன் முறையில் ஸுலபமாக யந்த்ரங்களை உபயோ கித்தும் வருகிறார்கள். இப்படி இந்த விஷயங் களில் கோவாபரேஷனை உபயோகிப்பதால் சரக்குகள் செய்கிறவனுக்கும் வாங்குகிற வனுக்கும் ஏற்படும் செலவு ரொம்ப மட்டுப் பட்டு அநேக வழிகளில் ஸௌகர்யமேற்படு கிறது.

வாங்குகிறவர்களுக்கும் விற்கிறவர்களுக்கும் நடுவில் இருந்து அனாவச்யமாய் லாபம் அடித் துக்கொண்டு போகும் தரகர்களை ஒழிப்பதே கோவாபரேஷனின் முக்ய நோக்கமாகும். ஜன ஸமூகத்தின் நன்மையைக்கருதி அந்தத் தரகர்களை ஒழிப்பது ரொம்ப அவச்யமாகும். இப்படிச்செய்வது கோவாபரேஷனால் ஸாத்ய மாகும். ஒரு சரக்கு விற்பனையாவதற்கு ரொம்ப அவச்யமான தரகருக்கு அவருக்கு ந்யாய

மாய்ச் சேரவேண்டிய லாபத்தைக்கொடுக்க வேண்டியது க்ரமந்தான். ஆனுல் ஒருவர் தாம் செய்த சரக்குகளை தாம் உற்பத்தி செய்தது முதல் விற்பனை செய்யும் வரையில் அனுவச்யமாய் கொடுக்கும் வீண்தண்டங்களை அவர் கொடுக்காமலிருக்கும்படி செய்யவேண்டும். கோவாபரேஷன் முயற்சியானது கைத்தொழிலில் அமர்ந்துள்ள ஜனங்களுக்கு செல்வ அபிவ்ருத்திக்கு மாத்ரம் ஸாதனமாயிருக்கிறதென்பதில்லை.

கைத்தொழில்களில் கோவாபரேஷனை உபயோகிப்பதால் ஏற்படும் ஸன்மார்க்க நன்மைகள் ரொம்பவும் முக்யமானவைகள். முதலாளியும் வேலைக்காரர்களும் எப்போதும் சண்டைபோட்டுக் கொண்டே யிருந்தால் ஜனங்களுக்கு வேண்டியவைகள் ஸுலபமாய்க் கிடைக்கமாட்டா. கோவாபரேஷனுல் முதலாளியும் வேலைக்காரர்களும் ஒத்து வேலை செய்து எல்லாருக்கும் ஏராளமான நன்மை உண்டாக்குகிறவர்களாவார்கள். இப்போதுள்ள நிலைமையை மாற்றி யாவரும் ஸகோதரர்களாக இருந்து வேலை செய்யும் கோவாபரேஷனைக் கைக்கொள்ளும்படியான நிலைமைக்குக் கொண்டுவர யாவரும் பாடுபடவேண்டும். —என்றிப்படி லார்ட் க்ரே பேசினர். நமது தேசவாஸிகள் யாவரும் இதை நன்கு கவனிப்பார்களாக.

## ORIGIN OF CO-OPERATION.

### கோவாபரேஷன் முதலில் ஏற்பட்டவிதம்.

ஐக்ய நாணய ஏற்பாடு முதல் முதலில் இட்டலி தேசத்தில்தான் ஆரம்பமாயிற்றும். இப்போது ரோமில் போப்பாக இருப்பவர் வெனீஸில் வைகார் என்று சொல்லப்படும் ஒரு குருவாக இருந்தபோது தமது ஆதீனத்தில் இருந்த ஜனங்களின் தரித்ர தசையைக்கண்டு அவர்களை எப்படி நல்ல நிலைமைக்குக்கொண்டு வருகிறதென்று வெகு காலமாய் ஆலோசித்துக்கொண்டிருந்தார். அந்த ப்ரதேசத்தில் ஜனங்களின் முக்யமான தொழில் த்ராக்ஷை ஸாகுபடி செய்வது. அவர்களுடைய தோட்டத்தில் பல நூற்றுண்டுகளுக்கு முன் வைக்கப்பட்ட த்ராக்ஷைச் செடிகள் தகுந்த எருவில்லாமல் ரொம்பக் குறைவான மாஸுல் கொடுத்துக்கொண்டிருந்தன. விவஸாயிகள் தங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கே கஷ்டப்பட்டுக்கொண்டிருந்ததால் த்ராக்ஷைப் பயிருக்கு எரு விலைக்கு வாங்கிப்போட முடியாதவர்களாயிருந்தார்கள்.

குருவானவர் தமது ஸ்நேகிதர்களுடன் இது விஷயமாய் ஆலோசித்து, கடைசியில் விவஸாயிகளுக்கு எரு வாங்குவதற்காகப் பணம் கடன் கொடுத்து உதவும் பொருட்டு ஒரு விவஸாய பாங்கி ஏற்படுத்தத் தீர்மானித்து அப்படியே ஒரு விவஸாய பாங்கி ஸ்தாபித்தார்.

சிறிது சிறிதாக அந்த ப்ரதேசத்தவர்களுடைய நிலைமை உயர்ந்து, அந்த குரு அவ்விடத்தை விட்டு வேறிடம் சென்றபோது ஜனங்கள் எல்லாம் தக்க ஜீவனம் உள்ளவர்களாகிவிட்டார்கள். அந்த விவஸாய பாங்கியில் ஜனங்களும் ஒரு பாகம் மூலதனம் போட்டார்கள். அப்படிப்போடவே ஜனங்கள் தங்கள் தொழிலில் அதிக ஊக்கம் பாராட்ட ஆரம்பித்தார்கள். ஜனங்கள் இந்த பாங்கியில் சேர்ந்து கூட்டுறவோடு வேலை செய்து வந்ததில் அவர்களிடத்தில் தன் முயற்சி ஏற்பட்டதோடு, அவர்கள் தாங்கள் வாங்கின கடன் பணத்தை அதிக லாபம் தரத்தக்க விதங்களில் ரொம்ப ஜாக்ரதையுடன் செலவழிக்க லானுர்கள். கடைசியில் அந்த விவஸாய பாங்கியை நிறுத்திவிட்டு அதற்கு பதிலாக ஒரு ஐக்ய நாணய ஸங்கம் ஸ்தாபித்தார்கள்.

## SAVINGS BANKS SOCIETIES IN GERMANY.

ஜெர்மெனியில் ஸேவிங்க்ஸ் பாங்கி ஸங்கங்கள்.

ஜெர்மனியில் கடன்கள் கொடுத்தும் ஸேவிங்க்ஸ் பாங்கி வ்யாபாரம் நடத்தியும் வரும் கோவாபரெடிவ் ஸங்கங்கள் பல இருக்கின்றன. இவைகளில் மெம்பர்களுடையவும் மற்றவர்களுடைய் மிச்சப் பணத்தை வஸூல் செய்து பாங்கியில் போட்டுவைக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. எல்லா வகுப்பினர்களும் வயதினர்களும் அந்த பாங்கிகளில் தங்களுடைய மிச்சப்பணத்தை போடும்படி ஸங்கங்கள் ப்ரயத்னம் செய்கின்றன.

விவஸாய வேலையாட்களையும் மற்ற வேலையாட்களையும் தங்கள் கூலியில் ஒரு பாகத்தை ஸங்கங்களில் போட்டுவைக்கும்படி அவர்களுடைய யஜமானர்கள் தூண்டி வருகிறார்கள். பள்ளிக்கூடங்களில் உபாத்யாயர்கள் ஸேவிங்க்ஸ் பாங்கி புஸ்தகங்களை பிள்ளைகளுக்குக் கொடுத்து பணம்போடும்படி தூண்டுகிறார்கள். ஸங்கங்கள் உண்டிப்பெட்டிகளை சார்ஜ் இல்லாமல் கொடுத்து உதவுகின்றன. இன்னம் சில ஸங்கங்கள் ஸேவிங்க்ஸ் பணம் வஸூல் செய்வதற்காக சிப்பந்திகளும் நியமிப்பதுண்டு. இவர்கள் ஒவ்வொருவாரமும் வீடுகள்தோறும் சென்று வீட்டுக்காரர்கள் பாங்கியில் போட விரும்பும் தொகைக்கு பாங்கிச் சீட்டுகள்விற்று பணத்தை வாங்கிக்கொண்டு வந்து பாங்கிக் கணக்கில் வரவு வைத்துக்கொள்வார்கள். ஹெஸ்ஸியன் யூனியனில் 1908-ம் வருஷத்தில் 180 ஸங்கங்கள் இந்த முறைப்படி வஸூல் செய்ததில் 1,14,000 பவுன் வஸூலாயிற்றும். இந்தத் தொகையானது அந்த யூனியனில் உள்ள 402 ஸங்கங்களில் உள்ள மொத்த டெபாஸிட்டில் 100-ல் 10-பங்காகுமாம்.

## CO-OPERATION IN THE LEGISLATIVE COUNCIL.

லெஜிஸ் லேட்டிவ் கௌன்ஸிலில் கோவாபரேஷன் விஷயம்.

சென்ற மாஸம் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடினபோது சில மெம்பர்கள் கோவாபரேஷன் ஸம்பந்தமாகச் சில கேள்விகள் கேட்டார்கள். ஆனரபிள் ராவ்பகதூர் ராமானுஜாசார்யார், ட்ரஸ்ட் நிதிகளை கோவாபரேடிவ் பாங்கிகளில் வட்டிக்குவிட இடங்கொடுக்கும்படி இண்டியன் ட்ரஸ்ட் ஆக்டை மாற்றவேண்டுமென்று, 1912-ம் வருஷம் டிஸம்பர்மாஸம் ப்ரொவின்ஷியல் கோவாபரெடிவ் கான்பரென்ஸ் செய்த தீர்மானத்தைப்பற்றி கவர்ன்மெண்டுக்குத் தெரியுமா வென்றும், அது விஷயமாய் கவர்ன்மெண்டார் ஏதாவது செய்திருக்கிறார்களா என்றும், இண்டியன் ட்ரஸ்ட் ஆக்டைப் போலவே கோர்ட் அப் வார்ட்ஸ் ஆக்டையும் மாற்றுவார்களா வென்றும், கேட்டார். அதற்கு கவர்ன்மெண்டார், குறிப்பிட்ட தீர்மானம் அவர்களுக்கு அனுப்பப்படாததால் அது விஷயமாய் ஒன்றும் செய்யவில்லை யென்றும், பண்டுகளை கோவாபரெடிவ் ஸெண்ட்ரல் பாங்கியில் போடுவதைப்பற்றி போர்ட் அப் ரெவின்யூவையும், கோர்ட் அப்வார்ட்ஸையும் ஆலோசனை கேட்பார்களென்றும் சொன்னார்கள்.

1882-ம் வருஷத்து 2-வது ஆக்ட் 20-வது ஸெக்ஷன் க்ளாஸ் (f)-ன் படி, ட்ரஸ்ட் பண்டுகளை இன்ன விடங்களில் வட்டிக்கு விடலாமென்பதைப் பற்றியுள்ள ஜாப்தாவில் டிஸ்ட்ரிக்ட் அர்பன் கோவாபரெடிவ் பாங்கிகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டு மென்று கோயம்புத்தூர் ஸர்க்கில் கோவாப ரெடிவ் கான்பரென்ஸ் சென்ற ஜூன்மாஸம் கூடின போது ஒரு தீர்மானம் செய்திருந்தது. ஆனர

பிள் மிஸ்டர் நரஸிம்மய்யர், இந்தத் தீர்மானத்தை ஷை கான்பரென்ஸின் ஸெக்ரெடரி ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பி அது விஷயமாக ஹைகோர்ட்டையும், கவர்ன்மெண்டையும் ரெஜிஸ்டரார் கேட்டுக்கொண்டிருப்பது தெரியுமா வென்றும், இது விஷயமாய் ஒரு ரூல் ஏற்படுத்தும்படி ஹைகோர்ட்டை கவர்ன்மெண்டார் கேட்பார்களா என்றும் கேட்டார். அதற்கு கவர்ன்மெண்டார், கான்பரென்ஸ் ஸெக்ரெடரி ரெஜிஸ்ட்ராருக்குத் தெரிவித்ததாகத் தங்களுக்கு ஒன்றும் தெரியா தென்றும், அந்த ப்ரேரணையைப் பற்றி ஆலோசிப்பதாகவும் சொன்னார்கள்.

சம்பளம் இல்லாமல் கோவாபரெடிவ் ஸங்கங்களை ஏற்படுத்த உழைத்துவரும் ஆர்கனைஸர்களுக்கு இப்போது தினப்படி படி 1-ரூபாயாகவும் ஒருஸெகண்ட் க்ளாஸ் சார்ஜும், ப்ரயாணம் 20 மைலுக்கு மேற்பட்டால் மைலுக்கு 2-அணுவீதம் ப்ராயாணச்செலவும், கொடுத்து வருவதை மாற்றி, தினப்படி படி 3-ரூபா யாகவும் இரட்டிப்பு ஸெகண்ட்க்ளாஸ் சார்ஜும், 5 மைலுக்கு மேற்பட்டால் மைலுக்கு 4 அணுவீதம் ப்ரயாணச் செலவும், கொடுக்கும்படி ஏற்பாடு செய்வார்களா என்று ஆனரபிள் மிஸ்டர் ஸ்ரீநிவாஸ சாஸ்த்ரியார் ஒரு கேள்வி கேட்டார். கேட்டுக் கொண்டபடி உயர்த்தமுடியா தென்று கவர்மெண்டார் பதில்சொன்னார்கள். கோவாபரெடிவ் இன்ஸ்பெக்டர்களுக்கு ஒரு ப்யூன் கொடுக்கவேண்டும் என்று கேட்டதற்கும் கவர்ன்மெண்டார் முடியாதென்று சொல்லிவிட்டார்கள்.

## A SCAVENGERS' CO-OPERATIVE SOCIETY.

## தோட்டிகளுக்கு ஒரு கோ-வாபரேடிவ் ஸங்கம்.

சேலம் முனிஸிபாலிடியார் அந்த முனிஸிபாலிடியில் வேலை செய்யும் தோட்டிகளின் ஸௌகர்யத்திற்காக தனியே ஒரு கோ-வாபரேடிவ் நாணய ஸங்கம் ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். அநேகமாய் எல்லா முனிஸிபாலிட்டிகளிலும், தோட்டிகள் மார்வாரிகளிடத்திலும், ஸ்வல்பத்தொகையை அதிக வட்டிக்குக்கொடுத்து ஜீவனஞ்செய்யும் இதர வகுப்பாரிடத்திலும், சிக்கிக் கொண்டிருக்கிறார்களென்பது மறுக்கக்கூடாத விஷயம். முனிஸிபாலிட்டியில் சம்பளம் கொடுக்கிற வரையில் தோட்டிகள் பொறுப்பதில்லை. அதற்கிடையிலேயே கடன் வாங்கிச்செலவு செய்கிறார்கள். சம்பளம் கிடைத்தவுடன் கடன்காரர்களிடம் கொடுத்துவிட்டு மீண்டும் கடன் வாங்க ஆரம்பிக்கிறார்கள். இப்படி நாளடைவில் கடன் அதிகரித்து விட்டால் ஒருவருக்கும் சொல்லாமல் ஓடிப்போய் விடுகிறார்கள். சேலம் முனிஸிபாலிட்டியார். அவர்களிடத்தில் சிக்கன முண்டாகும்படி செய்வதற்காக ஒரு கோ-வாபரெடிவ் ஸங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். அது முனிஸிபல் ஸெக்ரிட்டெரியின் மேல்பார்வையின்கீழ் நடந்து வருகிறது. அந்த ஸங்கம் வருஷத்துக்கு 100-க்கு $7\frac{1}{2}$ வட்டிவீதம் 2000 ரூபா ஜில்லா பாங்கியிலிருந்து கடனாக வாங்கி வைத்துக்கொண்டது. அப்பணத்திலிருந்து, தோட்டிகள் பட்டிருந்த பல சில்லரைக்கடன்கள் தீர்த்துவிடப்பட்டன. இதனால் தோட்டிகள், கடன் கொடுத்தவர்களிடத்தில் படவேண்டிய உபத்ரவம் இனிமேல் இராது.

சில தோட்டிகளுக்கு குடிசைகளும் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. தோட்டிகள் தற்போது கோ-ஆபரேடிவ் ஸங்கத்தில் வாங்கியிருக்கும் கடன்களை அவர்களுடைய மாதச் சம்பளத்திலிருந்து சிறிது சிறிதாக வஸூல் செய்து வருவதால் கஷ்டமில்லாமலே அத்தொகை ஈடுபட்டுப்போம். இதர முனிஸிபாலிட்டிகளும் இவ்விஷயத்தில் சேலம் முனிஸிபாலிடியை பின் தொடருவது விரும்பத்தக்கது.

# The Commercial World

## வ்யாபாரப்பகுதி.

### INDIAN INDUSTRIAL IMPROVEMENT.

### இந்திய கைத்தொழிலபிவ்ருத்தி.

ஸமீபத்தில் சென்னையில் மிஸஸ் பெஸண்ட் கைத்தொழிலைப்பற்றி ஒரு ப்ரஸங்கம் செய்தார். அப்போது சேர்மனுயிருந்த திவான் பகதூர் எம். ஆதிநாராயணய்யா தமது ஆரம்ப ப்ரஸங்கத்தில் இந்தியகைத்தொழிலபிவ்ருத்தி விஷயமாய் சில ஜனங்கள் கொண்டிருக்கும் மூன்று தப்பபிப்ராயங்களைப்பற்றிப்பேசினர். அவர் சொன்னதாவது:—கைத்தொழில்கள் ஸ்தாபிக்கப் படாமலிருக்கையில், அல்லது அவைகள் தகுந்த அளவுக்கு அபிவ்ருத்தி யடையாமலிருக்கையில், உயர்ந்த டெக்னிகல் கல்வியும் சாஸ்த்ரீயக் கல்வியும் கொடுக்க வேண்டியது அவசியமில்லை யென்று பலர் எண்ணி வருகிறார்கள். இந்த அபிப்ராயத்துக்கு அவர்கள் என்ன காரணம் சொல்லுகிறார்கள் என்றால், இப்படி உயர்ந்த கல்வி யடைந்த மாணவர்கள் திங்களுக்கு வேலையகப் படாததைக்கண்டு அத்ருப்தி யடையக்கூடுமாகையால், அவர்களுக்கு அப்படிப்பட்ட கல்வி கற்று கொடுக்கக்கூடாதென்கிறார்கள். ஆனால், ஜனங்கள் கல்வி பயின்று தேர்ச்சியடையாவிட்டால் கைத்தொழில்கள் அபிவ்ருத்தியடைவது முடியாது என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். எல்லா கைத்தொழில் முயற்சிகளும் கடைத் தேறவேண்டுமானல் 3-அம்சங்கள் இருந்தாகவேண்டும். அவையாவன ,மூலதனம், யோக்யதை, திறமை. பின் சொன்ன இரண்டும் தகுந்த கல்வியில்லாமல் ஏற்படுவது முடியாது. அவைகள் இரண்டும் இல்லாமல் மூலதனம் வெளிக்கிளம்புவது மிகவும் கஷ்டம். வேண்டிய அளவு கைத்தொழிலுக்கேற்ற கல்வி யில்லாவிட்டால் நம்மை சுற்றிலுமுள்ள பொருளாதாரங்களை எப்படித் தேடி உபயோகிப்பது முடியும்? ஸமீபத்தில் கவர்ன்மெண்டார், உயர்ந்த டெக்னிகல் கல்வியும் சாஸ்த்ரீயக் கல்வியும் உள்ள இந்தியர்களுக்கு வேலைகிடைப்பதற்கு ஏதாவது ஸௌகர்யமிருக்கிறதா என்பதைப்பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அப்படி விசாரித்ததில் இப்பொழுதுள்ள நிலைமையில் வேலை கிடைக்கக்கூடிய துறைகள் மிகவும் குறைவாக விருக்கின்றனவென்று தெரிய வந்தது. மேலும் இந்தியர்கள், ஏராளமான வேலையாட்கள் உள்ள விடங்களில் அவ்வேலையாட்களை வைத்து மானேஜ் செய்ய முடியாதவர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லி இந்தியர்களை, கைத்தொழில் நடத்திவரும் ஐரோப்பியர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ள ஸம்மதிப்பதில்லை. ஆனால் இப்படிச்சொல்லுவது ஸரியல்லவென்பது பம்பாய் பருத்தி மில்லுகளின் சரித்ரத்தால் நன்றாய்த் தெரிய வருகிறது.

ஸ்வதேசக் கைத்தொழில்கள் ஏற்பட்டு வ்ருத்தியானாலொழிய கைத்தொழிலில் தேர்ச்சியடைந்த இந்தியர்களுக்கு வேலை கிடைப்பது கஷ்டம். அப்படிப்பட்ட கைத்தொழில் ஏற்படவேண்டுமானாலோ டெக்னிகல் சாஸ்த்ரீயக் கல்வி கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டியது ரொம்பவும் அவச்யம் என்று சொன்னார்.

இரண்டாவது தப்பெண்ணத்தை பற்றிச்சொன்னபோது அவர், சில ஜனங்கள் கொண்டிருக்கும் இன்னொரு தப்பெண்ணம் என்னவென்றால் கவர்ன்மெண்டார் கைத்தொ

ழிலபிவ்ருத்திக்காக தாங்களே கைத்தொழில்கள் ஸ்தாபிக்கக்கூடாதென்று சொல்லுகிறார்கள் என்றும், முன் இந்தியா ஸெக்ரெடரியாக இருந்த லார்ட் மார்லி தமது டெஸ்பாட்ச் ஒன்றில் அவ்விதமே தெரிவித்திருந்ததாகவும், பொது ஜனங்கள் செலுத்தும் வரிப்பணத்தை தனி வகுப்பார்களுக்காகச் செலவழிப்பது ந்யாயமல்ல என்பதைக் கொண்டே இப்படிச் சொல்லுவதாகத் தமக்குத் தோன்றுகிறதென்றும், இப்படிச் சொல்லுபவர்கள் ஜனங்களின் திறமையையும் க்ஷேமத்தையும் அபிவ்ருத்தி செய்வதாகிய பெரிய நோக்கத்தை மறந்துவிடுகிறார்களென்றும் சொன்னார்.

காப்பு வரி ஸம்பந்தமான தப்பெண்ணத்தைப்பற்றிப் பேசினபோது திவான் பகதூர் ஆதி நாராயணய்யா, இந்தியாவின் நிலைமைகளைப் பற்றிக் கொஞ்சமும் கவனிக்காமலே இந்தியாவுக்கு காப்பு வரி வேண்டுமென்று சிலர் சொல்லிவருகிறார்கள் என்றும், இந்தியாவின் தற்போதைய நிலைமையில் அப்படி காப்பு வரி போடுவதால் என்ன நன்மைகள் ஏற்படக் கூடுமென்பது தமக்குத் தெரியவில்லையென்றும், பருத்தியில் ஜூட்மில் தொழில்களையும் டாடா இரும்புத் தொழில்களையும் தவிர பெரிய கைத்தொழில்கள் என்று சொல்லக்கூடியவைகள் ஒன்றுமில்லையென்றும், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் ஸாமான்கள் பெரும்பாலும் வேலை செய்யப்படாத சரக்குகள் என்றும், இந்தச் சரக்குகளில் பெரும்பாகம் இங்கிலண்டொழிந்த வேறு தேசங்களுக்குப் போகின்றனவென்றும், இறக்குமதிச் சரக்குகள் பெரும்பாலும் வேலைப்பாடான சரக்குகளாகவும் இங்க்லண்டிருந்து வருபவைகளாகவும் இருக்கின்றனவென்றும், இந்தியாவுக்கு வரிபோடும் ஸ்வதந்தரமில்லாதனால் இங்க்லண்டு ஸாமான்களின்மேல் காப்புவரிபோட முடியாதென்றும், மற்ற தேசங்களின்மேல் காப்பு வரி போட்டால் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் வேலை செய்யப்படாத சரக்கு வ்யாபாரத்துக்குப் பெரிய இடைஞ்சல்கள் ஏற்படும் என்றும், உதாரணமாக ஜூட் என்னும் சணல் தேயிலை சில எண்ணெய் வித்துகள் ஆகிய இவைகளைத் தவிர மற்ற சரக்குகள் இந்தியாவே உற்பத்தி செய்கிறதென்பதில்லையாதலால் அந்ய நாடுகள் நமது தேசத்து ஏற்றுமதி வ்யாபாரத்துக்கு ஏதாவது கெடுதி செய்தால் அதற்குப் பதிலாக அவர்கள் வ்யாபாரத்துக்கு ஒரு கெடுதலும் செய்ய முடியாமலிருக்கிறதென்றும் சொன்னார்.

## NEW USES FOR COCOANUT.

### தேங்காயின் நூதன உபயோகங்கள்.

சில ரஸாயன சாஸ்த்ரிகள் தேங்காய் ஸம்பந்தமாக சில பரீக்ஷைகள் செய்து அதில் உள்ள ருசியை போக்கி அதற்கு ருசியே இல்லாதபடி செய்திருக்கிறார்கள். மேலும் தேங்கா யெண்ணெய் காறலடித்துப் போகாமலிருக்கும்படி செய்யவும் உபாயங்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த இரண்டு ஸாதனங்கள் கண்டு பிடிக்கப்படவே, தேங்காயும் எண்ணெயும் உபயோகித்துச் செய்யக் கூடிய கைத்தொழில்கள் ஏராளமாய் அதிகரித்திருக்கின்றன. தேங்கா யெண்ணெயை முன் போலவே 'ஸோப்' செய்வதில் ரொம்பவும் உபயோகித்து வருகிறார்கள். தேங்காயை உடைத்து கொட்டங்கச்சியை எடுத்தெறிந்துவிட்டு அதன் பருப்பை அரைத்து ஐரோப்பாவுக்கும், அமெரிக்காவுக்கும் ஏராளமாய் அனுப்புகிறார்கள். இது அவ்விடங்களில் ரொட்டிக் கிடங்குகளில் பணியாரங்கள் செய்யவும், ஸாதாரண ஜனங்கள் சமையலில் உபயோகிக்கவும் உதவுகிறது. தேங்காய் எண்ணெயை கொழுப்புக்குப் பதிலாக மெழுகுகள் செய்வதிலும் போமேட் என்னும் வாஸனைத் தைலம் செய்வதிலும் உபயோகிக்கிறார்

கள். காட் லிவர் ஆயில் என்னும் எண்ணெயைவிட தேங்காய் எண்ணெய் வாய்க்கு ருசியாயிருக்கிறபடியால் மருந்துகளில் காட்லிவர் ஆயிலுக்குப் பதிலாக இதை உபயோகிப்பதுண்டு. தேங்கா யெண்ணெய்க்கு ஜலத்தை அதிகமாகவும், சீக்ரமாகவும் க்ரகிக்கும் தன்மையுண் டாகையால் இதைக் கொண்டு மார்கரைன் என்னும் கொழுப்பு ஸம்பந்தமான பொருள் செய்து வருகிறார்கள். இன்னம் எண்ணெயிலிருந்து போலி வெண்ணெய் செய்யப்படுகிறது. அந்த வெண்ணெய் பசு வெண்ணெயை ஸகல குணத்திலும் ஒத்திருக்கிறது. லார்ட் என்று சொல்லப்படும் பன்றிக் கொழுப்பைப் போல் தேங்கா யெண்ணெயிலிருந்து போலிக் கொழுப்பும் செய்யப்பட்டு வருகிறது. மேலே சொன்னவைகளைத் தவிர இன்னம் பல விதங்களில் தேங்காயை மேல் நாட்டார்கள் உபயோகித்து வருவதாலும், இன்னம் புது உபயோகங்கள் கண்டுபிடித்து வருவதாலும் தேங்காயின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது.

## HAND LOOM INDUSTRY.

### கைத்தறி நெசவுத்தொழில்.

கைத்தறி நெசவுத் தொழில் வ்ருத்தியாவதற்கு சில அம்சங்கள் உதவியாய் இருக்கின்றனவென்று ஒரு நிரூபர் 'சுதேச மித்திரன்' பத்ரிகையில் எழுதுகிறார். அவையாவன :—

(1) ஜனத் தொகையில் பாதிக்கு மேற்பட்ட ஸ்த்ரீகளின் சேலைகள் கைத்தறிகளாலேயே நெய்யப்படுகின்றன. கரை வேஷ்டிகள், ஸரிகை வேஷ்டிகள் போன்ற உயர்ந்த துணிகள் மில்லில் நெய்யப் படுவதில்லை.

(2) சிறு மூலதனத்தைக் கொண்டு கைத்தறிகளை ஏற்படுத்தலாம். அவற்றை அநேக வருஷத்திற்கு உபயோகப்படுத்தி வரலாம்.

(3) அழகும், சித்ரமும் வர்ணமுமமைந்த உயர்ந்த துணி நெசவுகளில், மெஷினின் போட்டி கிடையாது.

(4) துணி கெட்டியாயும் நெடுநாள் நிற்கக் கூடியதாயு மிருப்பதால் விவஸாயிகள் உள் நாட்டுத்துணியை முரட்டுவேலை செய்யும்போது உபயோகிக்கிறார்கள்.

(5) கைத்தொழிலாளிகளின் ஜீவனச் செலவு உபாயமாகவே யிருக்கிறது. பரம்பரையாய் ஏற்பட்ட ஸாமர்த்யத்தால் மென்மையான துணிகளை நெய்வதில் விசேஷ நன்மை அடைகிறார்கள். மேலும் நெசவுக்காரர்கள் கைத்தறிகளையே நம்பியிருப்பதில்லை. விவஸாயத்தோடு இத்தொழிலையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் நூல் விலை ஏற்றத்தினால் ஏற்படும் ஸங்கடகாலத்தில் அதிகமாய்க் கஷ்டப்படவேண்டியதில்லை. நெசவுக்காரர்களுக்காக ஐக்ய நாணயங்கள் ஏற்பட்டு நூல்வாங்க மூலதனம் கொடுக்கப்பட்டால், கைத்தொழில் விசேஷ வ்ருத்தியடையும். ஸ்வதேச ஸ்டோரொன்று ஏற்படுத்தி, நெய்த துணிகளைப் பொதுவில் வைத்து வேண்டிய இடங்களுக்கு அனுப்புவதாய் ஏற்பட்டால், சில்லரை வ்யாபாரிகளிட மிருந்து அவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

## MARKING SHEEP.

### ஆடுகளுக்கு அடையாளம் போடுதல்.

ஐரோப்பாவிலுள்ள சில தேசங்களில், ஆட்டு இடையர்களுக்குள் தங்கள் ஆடுகளுக்கு கீல் அல்லது தாரால் அடையாளமிடும் வழக்கம் சில காலமாக இருந்து வருகிறது. ஆட்டின் ரோமத்தில் தாரானது கெட்டியாய்ப் பிடித்துக் கொள்கிறது. என்ன செய்தாலும் தாரின் கறை போவதில்லையாம். மேலும் தாரின் கறை தோலையும் பற்றுகிறதாம். இதனால் ரோமத்துக்கும் தோலுக்கும் விலை குறைந்து போகிறதென்று வ்யாபாரிகள் முறையிடுகிறார்கள். ரோமத்திலுள்ள எண்

ணெய்ப்பசையை எடுக்கும்போது தாரானது உருகி சுற்றிலும் பரவுகிறதாம்; பிசுபிசுப்பு மாக்குகிறதாம். இந்த ரோமத்தால் செய்யப் படும் துணியில் கூட இந்தக்கறை அவலக்ஷண மாய்க்காட்டுகிறது. இம்மட்டா? இப்படித்தோ லில் கறை பட்டுப்போவதால் தோலின் விலை ரொம்பவும் குறைந்து போகிறதாம். ப்ரான்ஸ் தேசத்திலுள்ள கம்பளித்துணி நெச வுகாரர்களும், ரோமம், தோல் வ்யாபாரிகளும் ஆட்டுக்குத் தாரால் அடையாளம் போடுவதால் தங்களுக்கெல்லாமிருக்கும் நஷ்டத்தை ஸபை கூடித் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் ஆட்டுக்கு அடையாளம்போட, தாருக்குப்பதி லாக (1) காதில் பச்சைக்குத்தல் (2) காதில் ஏதாவது உலோகத் தகட்டுத் துண் டைக்கட்டுதல்(3) ஆளிவிதை எண்ணை, கற் பூரத்தைலஸத்து, ஆகிய இவைகளுடன் ஏதாவது சாயத்தைக் கரைத்து உபயோகித்தல் ஆகிய இம்முறைகளில் ஏதாவது ஒன்றை உப யோகிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

## PREPARATION OF ATTAR OF ROSES.

ரோஜாவிலிருந்து அத்தர் செய்யும் முறை.

கொஞ்சமாய் அத்தர் செய்வதற்குப் பின் வரும் வழியை உபயோகிக்கலாம்.

காலையில் பனிபோன பிறகு ரொம்ப வாஸ னையுள்ள ரோஜாப் புஷ்பங்களைப் பறித்துக் கொள்ளவேண்டும். மழை பெய்தவுடன் பறித்தால் புஷ்பங்கள் அவ்வளவு வாஸனையா யிருப்பதில்லை. வாயகலமுள்ள ஒரு கண்ணாடி பாட்டிலின் அடியில் ரோஜாவின் இதழ்களை ஒரு வரிசையாய் போட வேண்டும். அதன்மேல் சிறிது உப்பைத் தூவவேண் டும். பிறகு பருத்தியை சுத்தமான "ஆலிவ் ஆயில்" என்னும் எண்ணெயில் நனைத்து அதன்மேல் போட்டு மூடவேண்டும். அதன் மேல் ரோஜா இதழ்களை நிறையப்போட்டு பிறகு உப்புத்தூவி இப்படியே மாற்றி மாற்றி போட்டு ஸீஸாவை நிரப்பவேண்டும். எண் ணெய்ப்பட்டை இரண்டாக மடித்து அதனால் ஸீஸாவின் வாயைக்கட்டிவிட்டு பகல் முழு வதும் வெயில் அடிக்கக்கூடிய ஓரிடத்தில் இரண்டு வாரம் வைத்திருந்து பிறகு பட்டை யவிழ்த்து பருத்தியிலிருந்தும் ரோஜா இதழ் களிலிருந்தும் தைலத்தைப் பிழிந்தெடுத்துக் கொள்ளவேண்டும். மற்ற முறைகளால் செய் யப்படும் வாஸனையைவிட இந்த முறையால் கிடைக்கும் அத்தர் ரொம்ப உயர்ந்ததாயிருக் கிறதாம்.

## BUSINESS ENTERPRISE IN INDIA.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்:—இந்தியா வில் சென்ற ஸெப்டம்பர் மாஸம் அடியில் கண்ட விவரப்படி 27-கம்பெனிகள் ரெஜிஸ் டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 6 | பாங்கிக் கம்பெனிகள் | .... ரூ.31,20,000 |
| 2 | இன்ஷூரென்ஸ் கம்பெனிகள் | ... 1,20,000 |
| 1 | ரெயில்வே கம்பெனி | ... 85,00,000 |
| 2 | அச்சிட்டு ப்ரசுரம் செய்பவர்கள் | ... 2,30,000 |
| 7 | வ்யாபாரக்கம்பெனிகள் | ... 23,70,000 |
| 2 | மில்லுகளும் ப்ரெஸ்களும் | ... 4,50,000 |
| 1 | தேயிலைக்கம்பெனி | ... 2,00,000 |
| 2 | சுரங்கக்கம்பெனிகள் | ... 22,50,000 |
| 1 | நிலங்கள் கட்டிடங்கள் கம்பெனி | ... 6,00,000 |
| 2 | சர்க்கரை கம்பெனிகள் | ... 4,50,000 |
| 1 | கம்பெனி, (மேலே சொன்னவை தவிர) | |
| 27 | மொத்தம் | 1,82,90,000 |

# The Educational World

## வித்யாவிஷயப் பகுதி

### COPY WRITING

காபி எழுதல்.

மாணவர்கள் நன்ருய் எழுதக்கற்றுக் கொள்வதற்கு அவர்கள் காபி எழுதுவது ஒரு தகுந்த வழியாகும். காபி எழுதுவதோடு, எழுத வேண்டியிருக்கும் வேறு பாடங்களிலும் மாணவர்கள் விருத்தி கவனமாய் எழுதிவரும்படி செய்தால் அவர்களுடைய எழுத்து மிகவும் நன்ருய்ப் படிந்துவரும் என்பதில் ஸந்தேகமில்லை.

காபி பாடத்தில் உபாத்யாயர்கள் கவனிக்க வேண்டிய முக்யமான விஷயங்கள் சில இருக்கின்றன. அவைகளாவன:—

(1) காபி புஸ்தகம்.
(2) பேனுக்கள், இங்க், கடிதம்.
(3) மாணவர் உட்கார வேண்டிய விதம்.
(4) எழுத்துக்களின் அளவு.
(5) பாடங் கற்பிக்கும் முறை.
(6) வீட்டில் காப்பி எழுதுவது.

(1) காபி புஸ்தகத்தைத் தெரிந்தெடுத்து உபயோகிப்பதில் அதில் எழுத்துக்கள் இயற்கையாயமைந்தும் வேகமாய் எழுதக்கூடியனவாயும் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும்.

(2) பேனுக்களின் ஹோல்டர்கள் பிடித்துக்கொள்ள ஸுலபமாயிருக்க வேண்டும். ஸாதாரண மரத்தால் செய்த லேசான ஹோல்டர்கள் ரொம்ப ஏற்றவை. ஆனல் அவைகள் ஒடிந்து குட்டையாக விருந்தால் அவைகளைப் பிள்ளைகள் உபயோகிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

நிப்புகளின் முனைகள் ரொம்ப கூர்மையாகவாவது ரொம்ப அகலமாகவாவதிராமல் நடுத்தரமான அகலத்துடன் இருக்கவேண்டும். இன்னும் அவை மிகவும் கடினமாயிராமல் ம்ருதுவாயிருக்கவேண்டும். அதாவது கொஞ்சம் துவளக்கூடியதாயிருக்கவேண்டும். பிள்ளைகள் முதல் முதலில் காபி எழுத ஆரம்பிக்கும்போது ரொம்ப கடினமான நிப்புகளை உபயோகிப்பது மிகவும் கெடுதல். ஏனென்ருல் நிப்புகள் ரொம்ப கடினமாயிருந்தால் பையன்களுடைய கையின் நுண்மையான தசை நார்கள் அவர்களிஷ்டப்படி வளைந்து கொடுக்காது. ஜப்பானில் பிள்ளைகளை முதலில் எழுதும்போது மெல்லிய ப்ரஷ்ஷினல் எழுதும்படி செய்கிருர்கள். இதனல் பிள்ளைகளின் கைவிரல்கள் அவர்களுடைய இஷ்டப்படி எல்லாம் அசைந்து கொடுக்கும். ஆனல் அங்கே உபயோகிப்பது போல் இங்கே ப்ரஷ் உபயோகிப்பது ஸாத்யமில்லை யாயினும் ம்ருதுவான நிப்பை உபயோகிக்க யாதொரு தடையும் இராது. இங்க் (மை) ரொம்ப கெட்டியாக இருந்தால் எழுதுவது முடியாது. இங்க் கருப்பாயிராமல் ரொம்ப ஜலமாயும் இருக்கக்கூடாது.

காபி புஸ்தகம் ரொம்ப சிறியதாயிருக்கக் கூடாது. அதிலுள்ள கடுதாசிகள் வழவழப்பாயிருக்கவேண்டும்.

(3) மாணவர்கள் உட்கார வேண்டிய விதம். இது ரொம்ப முக்யமான விஷம். இது விஷயத்தில் உபாத்யாயர்கள் எப்போதும் கவனமாயிருக்கவேண்டும். எழுத்து நன்ருயிருக்க வேண்டுமென்பதற்கு மாத்ரமல்ல, பையன்களுடைய தேகஸ்திதியை உத்தேசித்தும் பையன்கள் ஸரியாய் உட்காருகிருர்களா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். காபி எழுதும்போது மாத்ரம் மாணவர்கள் ஸரியாக உட்கார்ந்திருக்

கிறார்களா என்று பார்ப்பதுபோதாது. மாணவர்கள் ஏதாவது எழுதிக் கொண்டிருக்கும் போதெல்லாம் அவர்கள் ஸரியாய் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களா என்று கவனிக்க வேண்டும். கூடுமானால் ஸரியாய் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒரு பையனுடைய படம் ஒன்றை ஒவ்வொரு வகுப்பறையிலும் தொங்க விட்டு, அதன் பக்கத்தில் பின்வரும் விதிகளை பெரிய எழுத்தில் அச்சிட்டுத் தொங்க விடுவது நல்லது.

விதிகள்.

(i) தாராளமாய் ஸௌகர்யமாய் உட்கார்ந்துகொள். கால்களைத் தரையிலாவது அல்லது கால்களை வைத்துக்கொள்ள ஏற்பட்ட பலகை அல்லது சட்டத்திலாவது வைத்துக்கொள். உன்னுடைய இரண்டு கைகளும் 'டெஸ்கி'ன் மேலேயே இருக்கட்டும்.

(ii) உன்னுடைய தலை நிமிர்ந்திருக்கட்டும். புஸ்தகத்துப் பக்கம் தலை சாயவேண்டாம்.

(iii) கடுதாசியின் எந்த பாகத்தில் நீ எழுதுகிறாயோ அந்த பாகம் உனக்கு முன்னால் இருக்கட்டும். அது உனது இடதுகைப்புறமாவது வலதுகைப்புறமாவது நகர்ந்திருக்க வேண்டாம்.

(iv) வேண்டுமானால் காபி புஸ்தகத்தைக் கொஞ்சம் சாய்த்து வைத்துக் கொள்ளலாம். (அதாவது ஸமனாயிராமல், காபி புஸ்தகத்தின் தலைப்புறம் சற்று உயர்ந்திருக்கட்டும்).

(v) பேனாவை 'நிப்'புக்கு ரொம்ப கிட்டத்தில் பிடித்துக் கொள்ளாதே.

(vi) கஷ்டமானதாயும், ஸ்வபாவமாய் வராததாகவும் இருக்கப்பட்ட எல்லாவற்றையும் நீக்கிவிடு.

(4) எழுத்துக்களின் அளவு. மாணவர்கள் முதல் முதலில் ரொம்பப் பெரிய எழுத்துக்களையே எழுதப் பழக வேண்டும். இதனால் மாணவர்களுக்கு எழுத்துக்களின் உருவம் நன்றாய்த் தெரிவதோடு கைவிரல்களும் நன்றாய்ப் பழகும். ஆனால் ஸ்வல்ப காலத்துக்குப் பிறகு மாணவர்கள் தங்களுடைய மற்ற பாடங்களில் எந்த அளவுள்ள எழுத்துக்கள் எழுதுவார்களோ அந்த அளவுள்ள எழுத்துக்களையே காபி புஸ்தகத்திலும் எழுதப் பழக வேண்டும்.

(5) காபிப் பாடம் சற்பிக்கும் முறை. சிலர் காபிப் பாடம் என்றால் பையன்களை எழுதச் சொல்லிவிட்டு ஸுகமாய் நாற்காலியில் உட்கார்ந்து தூங்கவேண்டியதென்று நினைக்கிறார்கள். உபாத்தியாயர்களுடைய ச்ரம பரிஹாரத்துக்காகத்தான் காபிப் பாடம் ஏற்பட்டிருக்கிறதென்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும். இதனால் பிள்ளைகளின் கையெழுத்து கொஞ்சமும் கடைத் தேறாதென்பது சொல்ல வேண்டியதில்லை. காபிப்பாடத்தில் உபாத்யாயர்கள் பின் வரும் விஷயங்களை கவனிக்க வேண்டும்.

(i) பிள்ளைகளெல்லாம் ஒரே நிதானமாய் எழுதும்படி சொல்லக்கூடாது. எல்லாரும் ஒவ்வொரு வரியையும் ஏககாலத்தில் எழுத ஆரம்பிக்க வேண்டுமென்றும், அடுத்த வரியை எழுதச் சொல்லும் வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டும் என்றும் சொல்வது நல்லதல்ல,

(ii) எழுத்துக்களின் உருவத்தையும் எழுதும் விதத்தையும் கருப்புப்பலகையில் எழுதிக்காட்ட வேண்டும்.

(iii) கருப்புப்பலகையில் ஒவ்வொரு தடவையிலும் கொஞ்சங் கொஞ்சமாய் எழுதிக் காட்டவேண்டுமேயொழிய பல விஷயங்களை ஒருமிக்கக் காட்டக் கூடாது. கொஞ்சம் கற்பித்துக் கற்பித்தவைகளை பையன்கள் க்ரஹித்துக் கொண்டார்களா என்று பார்த்துக் கொண்டு பிறகு வேறு விஷயங்களைப்பற்றிக் கற்பிக்க வேண்டும்.

(iv) வகுப்பில் ஸதா சுற்றிக்கொண்டு பயன்கள் எப்படி எழுதுகிறார்கள் என்பதை கவனிக்கவேண்டும். கையில் எப்போதும் பென்ஸில் வைத்திருக்க வேண்டும். அப்போதைக்கப்போது பிள்ளைகள் எழுவதைப்பார்த்து அவர்கள் தவருய் எழுதியிருந்தால் தவறுகளைத் திருத்தி, எப்படி எழுதவேண்டுமென்பதைக் காட்டவேண்டும்.

(v) பல பையன்கள் செய்கிற அல்லது செய்யக்கூடிய பிழைகளை கருப்புப் பலகையில் எழுதிக் காட்டி அவைகளை எப்படி எழுதவேண்டுமென்பதைப் பிள்ளைகளுக்கு விளக்கிச் சொல்லவேண்டும்.

(vi) பிள்ளைகள் ஸரியாய் உட்கார்ந்திருக்கிறார்களா என்பதை எப்போதும் கவனித்து வரவேண்டும்.

(6) வீட்டில் காபி எழுதுவது. பிள்ளைகளை வீட்டில் காபி எழுதிக்கொண்டுவந்து காட்டும்படி சொல்லக்கூடாது. ஆனால் பிள்ளைகளின் பெற்றோர்களிடம் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு ஒரு ப்ரத்யேகமான வழியில் காபிஎழுதக் கற்றுக் கொடுப்பதாகவும், அதே மாதிரி பிள்ளைகள் வீட்டிலும் காபி எழுதுவதற்கு பெற்றோர்கள் ஸௌகர்யம் செய்து கொடுக்கக்கூடுமானல் பிள்ளைகளினுடைய கையெழுத்து ரொம்பவும் நன்ருகப்படியும் என்றும் சொல்லி வைக்கவேண்டும். இதனல் பிள்ளைகளின் படிப்பில் கவனமுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பள்ளிக் கூடத்திலுள்ளதைப் போலவே வேண்டிய ஸௌகர்யம் வீட்டிலும் செய்து கொடுக்கக்கூடும்.

## DELAY IN DISBURSEMENT OF PAY TO TEACHERS.

### உபாத்யாயர்களுக்கு சம்பளம் பட்வாடா செய்வதில் தாமஸம்.

சென்ற மாஸம் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடினபோது ஆனரபிள் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர், போர்ட் எலிமெண்டரி ஸ்கூல் உபாத்யாயர்களுக்கு சம்பளம் எந்த மாஸம் கொடுக்க வேண்டுமோ அதற்குமூன்று மாஸத்துக்குப் பிறகு தான் கொடுக்கப்பட்டு வருவதாகச் சொல்வது வாஸ்தவந்தானு என்றும், அது வாஸ்தவமானல், எந்த மாஸத்துக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமோ அதற்கு அடுத்த மாஸம் முடிவுக்குள் சம்பளம் பட்வாடா ஆவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்றும் கேட்டார். அதற்கு கவர்ன்மெண்டார் சம்பளம் தாமஸமாக பட்வாடா செய்யப்பட்டு வருவதைப்பற்றித் தங்களுக்குத் தகவல் வந்திருப்பதாகவும், இப்போது சம்பளம் பட்வாடா செய்யும் ஏற்பாட்டை ஸுலபமாக்கி சீக்ரம் சம்பளம் பட்வாடா செய்வதற்காக யோசனைகள் சொல்லும்படி சில ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்டுகளைக் கேட்டுவிட்டிருப்பதாகவும், அவர்களுடைய பதில்கள் வந்தவுடன் கவர்ன்மெண்டார் அது விஷயமாய் வேண்டிய உத்தரவு செய்வார்கள் என்றும் சொன்னர்கள்.

## PAY OF PUNDITS.

### பண்டிதர்களின் சம்பளம்.

சென்ற மாஸம் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடினபோது ஆனரபிள் ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாசார்யார் கவர்ன்மெண்ட் காலேஜுகளிலுள்ள பண்டிதர்களை அஸிஸ்டெண்ட் லெக்சரர் க்ரேடில் சேர்த்து அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்தி அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்த வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அப்போது அவர், இரண்டு மூன்று வருஷத்துக்கு முன்னல் ஆனரபிள் மிஸ்டர் கேசவ பிள்ளை பண்டிதர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானத்தின் மேல் கவர்ன்மெண்டார் அவர்களுடைய சம்பளத்தைக் கொஞ்சம் உயர்த்தியிருந்த

போதிலும் அது போதாதென்றும் அவர்களுடைய சம்பளத்தை இன்னும் உயர்த்தி அவர்களை அஸிஸ்டெண்ட் லெக்சரர் க்ரேடில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்.

ஆனரபிள் ஸர் ஆல்ப்ரட் போர்ன் கவர்ன்மெண்டுக்காக எழுந்து பேசினபோது ஆனரபிள் மிஸ்டர் கேசவபிள்ளை கொண்டுவந்த தீர்மானத்தின்மேல் கவர்ன்மெண்ட் காலேஜுகளிலுள்ள பண்டிதர்களின் சம்பளத்தை தகுந்த அளவு உயர்த்தியிருக்கிறதாகவும், அவர்களுடைய சம்பளத்தை இன்னம் உயர்த்த யோசிக்குமுன், லோகல் போர்டுகள் முனிஸிபாலிடிகள் நடத்தி வரும் ஸ்கூல்கள் காலேஜுகள் ஆகிய இவைகளிலுள்ள பண்டிதர்களுடைய சம்பளத்தையும் ப்ரைவேட் ஸ்கூல்களிலும் காலேஜ்களிலுமுள்ள பண்டிதர்களின் சம்பளத்தையும் உயர்த்துவதைக்குறித்து யோசிக்க வேண்டியிருக்கும் என்றும், தற்போது லோகல் போர்டு, முனிஸிபாலிடிகளால் நடத்தப்பட்டு வரும் வித்யா ஸ்தாபனங்களிலுள்ள பண்டிதர்களின் சம்பளத்தை உயர்த்துவதைக்குறித்து ஆலோசித்து வருவதாகவும், ஆகையால் அந்தத் தீர்மானத்தை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் சொன்னார். தீர்மானத்தை வோட்டுக்கு விட்டதில் அது நிறைவேறாமல் போயிற்று.

## PICTORIAL TUITION TO WORKMEN.

### வேலையாட்களுக்கு படங்கள் மூலமாய்க் கற்பித்தல்.

அமெரிக்கா ஐக்யமாகாணங்களில் ஒரு கம்பெனியார் தொழில்களில் அமர்ந்துள்ள வேலையாட்களுக்கு அந்தத்தொழில்களில் தேர்ச்சி ஏற்படுவதற்காக ஒரு ஏற்பாடுசெய்து வருகிறார்கள். தொழிலாளி ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கும் போது அவன் வேலை செய்கிறபடியே காட்டும் அசையும் படங்களை போட்ட க்ராப்பில் பிடித்து விடுகிறார்கள். பிறகு அவைகளை "ஸினிமாடோக்ராப்" என்னும் யந்த்ரத்தில் வைத்துக் காட்டினால் தொழிலாளி எப்படி வேலை செய்தானோ அப்படியே படங்கள் காட்டுகின்றன. பிறகு அவனுடைய வேலையில் அனாவச்யமான செய்கைகளை காட்டும் பாகங்களைப் படத்திலிருந்து எடுத்து விட்டு ஸரியாக எப்படிச் செய்ய வேண்டுமென்பதை மாத்ரம் படத்தில் காட்டுகிறார்கள். இதனால் தொழிலாளி வேலையில் சீர்திருத்த மடைகிறான். இந்தப் படங்களைக் கொண்டு வேலையில் பழக்கமில்லா புது வேலையாட்களையும் பழக்குகிறார்கள். புதுவேலையாட்கள் படங்களைப்பார்த்து வெகு சீக்ரம் வேலையைக்கற்றுக் கொள்ளுகிறார்கள்.

## FRESH AIR AND INFECTION.

### சுத்தமான காற்றும் தொத்து வ்யாதிபரவுதலும்.

வகுப்பில் பாடம் நடக்கும்போது ஜன்னல் கதவுகளை எப்போதும் திறந்து வைத்திருக்க வேண்டும். பகல்நேரத்தில் பிள்ளைகளை வீட்டுக்குப் போகவிட்டிருக்கும்போது வகுப்பறைகளில் நல்ல காற்றோட்டம் ஏற்படும்படி செய்ய வேண்டும். ஜன்னல்களைத் திறந்து வைப்பதால் பிள்ளைகளினுடைய தேகஸுகம் ரொம்பவும் அபிவ்ருத்திபடைகிறது. சிறுவர்களிடம் தொத்துவ்யாதிகள் பரவும்பயம் குறைகிறது. உபாத்யாயர்களுடைய தேகஸுகமும் ரொம்ப நன்மை யடைகிறது.

# The Legal World.

## வ்யவஹாரப் பகுதி.

### POWERS OF A NATURAL GUARDIAN.

### க்ரமமான கார்டியனுக்குள்ள அதிகாரங்கள்.

ஒரு ஹிந்து மைனரின் தாயார் அந்த மைனரின் தகப்பனர் பட்டிருந்த சில கடன்களைத் தீர்ப்பதற்காக அந்த மைனரின் ஸொத்தை விற்ருல், அப்படி விற்றது ந்யாயமானதா என்பது கார்டியன்ஸ் அண்ட் வார்ட்ஸ் ஆக்டின் நிபந்தனைகளைப் பொறுத்ததாயிராமல் ஹிந்து லா ப்ரகாரம் ஒரு கார்டியனுக்கு என்ன அதிகாரங்களும், கடமைகளும் ஏற்பட்டிருக்கின்றனவோ அவைகளைப்பொறுத்ததாயிருக்கிறது.

இயற்கையாய் ஏற்படும் கார்டியனுடைய அதிகாரங்களுக்கும், கோர்ட்டால் நியமிக்கப்படும் கார்டியனுடைய அதிகாரங்களுக்கும் வித்யாஸம் இருக்கிறது.

கோர்ட்டால் ந்யமிக்கப்படும் கார்டியன்கள் கோர்ட்டின் மேம்பார்வையில் இருக்கிருர்கள். கார்டியன்ஷிப்பின் அதிகார்ங்களை பெரும்பாகம் கோர்ட்டாரே செலுத்தி வருகிருர்கள். கோர்ட்டால் நியமிக்கப்படும் ஒரு கார்டியன் கோர்ட்டாருடைய மேம்பார்வைக்கும் கட்டுக்கும் அடங்கியே மைனரின் கார்யங்களை நடத்திவரவேண்டும்.

கோர்ட்டால் நியமிக்கப்பட்ட கார்டியன்களுக்கு சட்டத்தில் சில குறிப்பிட்ட நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த நிபந்தனைகள் க்ரமமான கார்டியன்கள் விஷயத்தில் ஏற்கா. க்ரமமான கார்டியன்களுடைய கடமைகளோ மைனர்களுடைய க்ஷேமத்துக்கு அனுகுணமானவைகளை அனுஸரித்தவைகளாயிருக்கின்றன. கார்டியன்கள் மைனர்களுடைய க்ஷேமத்துக்கு எது அனுகுணமானதென்று கருதப்படுகிறதோ அதை அனுஸரித்தே நடந்துவரவேண்டும். குழந்தையாயிருக்கும் ஒரு வார்ஸின் ஸொத்துக்களைப்பார்த்து வரும் ஒரு மானேஜர் தமக்கு ஸொந்தமில்லாத மைனரின் ஸொத்தை செலவுக்காக சிற்சில காலங்களில் சில நிபந்தனைகளுக்குள்பட்டே கட்டுப்படுத்தலாம். அவச்யம் நேர்ந்த போதாவது, அல்லது அந்த ஸொத்துக்கு லாபம் கிடைக்குமென்றிருந்தாலாவது தான் ஸொத்தைக் கட்டுப்படுத்துவது ந்யாயமாகும். மைனருடைய லாபத்தை உத்தேசித்து ஸொத்தைப் பாராதீனம் செய்தோ, அல்லது ஸொத்தை ஸம்பந்தப்படுத்தி வேறு கார்யங்கள் செய்தோ, இருந்தால், ஒவ்வொரு கேஸிலும் அப்படிச் செய்தது அவச்யந்தானு என்று கேள்வி உண்டாகும்.

கார்டியன் பாராதீனம் செய்த ஸொத்தை வாங்கின ஒருவர் நல்லெண்ணத்தோடு நடந்து, அந்த விற்பனையைப்பற்றி விசாரித்ததில் மைனருடைய லாபத்தை உத்தேசித்தோ அல்லது மைனருக்குள்ள அவச்யத்தை உத்தேசித்தோ அந்த ஸொத்து விற்கப்படுகிறதென்று நம்பினுல், மைனர் கார்டியனுடைய நடத்தையைப்பற்றிக் குறைகூற தக்க காரணங்கள் இருந்தபோதிலுங் கூட, அந்த விற்பனையானது சட்டப்படி செல்லக்கூடியது. ‘அவச்யம்’, ‘நன்மை’ என்னும் இரண்டு வார்த்தைகளுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் இருக்கின்றன. ‘அவச்ய’ மென்பதற்கு ஒரு கெடுதலைப் போக்குவது, தவிர்க்க முடியாத ஒன்றைச் செய்வது, அல்லது சட்டப்படி ஒருவர் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வது என்று அர்த்தம் உண்டு, சட்டப்படி செய்ய

வேண்டிய கடமைகளுக்கு உதாரணமாக, கடனுக்காக மைனருடைய ஸொத்துக்களை விற்பதைத் தடுப்பது, அவச்யமான ரிபேர் களைச் செய்வது, மைனருடைய ஸம்ரக்ஷணைக் காகச் செலவிடுவது, மைனருடைய இறந்து போன தகப்பனாரின் சடங்குகளைச் செய்வது ஆகிய இவைகளைச் சொல்லலாம். அவச்ய மாய்ச் செய்யவேண்டிய இந்தக் கார்யங்களைத் தவிர மைனருக்கு நிச்சயமாய் நன்மை பயக் கக்கூடிய கார்யங்களும் இருக்கின்றன. மைனருக்கு நிச்சயமாய் நன்மை உண்டாகக் கூடுமென்று ஒரு ஸொத்தைப் பராதீனம் செய்தால், அதனால் வேறு கெடுதல் இல்லை யென்றால், அப்படிப் பராதீனம் செய்தது சட் டப்படி செல்லும். கடனைத் தீர்ப்பதற்காக ஸொத்தைப் பராதீனம் செய்யவேண்டுமானால் கடன் கொடுத்தவர் கடனைக் கேட்கவேண்டு மென்பதில்லை. கடன் கொடுத்தோர் கட னைக் கொடுக்கவேண்டு மென்று நிர்ப்பந்தம் செய்திருக்க வேண்டுமென்பது மில்லை. கடன் கொடுத்தவர் கடனைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று கேட்காவிட்டாலுங்கூட அந் தக் கடனானது, ஸொத்தின்மேல் ஒரு பளு வாக இருக்கக்கூடும். அப்படி ஒரு கடன் ஸொத்தின்மேல் பளுவாக இருக்கிறதா என் பது அந்தந்தக் கேஸின் நிலைமைகளைப் பொறுத்ததாயிருக்கிறது.

ஒரு மைனரின் தகப்பனார் பட்ட கடனைத் தீர்க்க வேண்டியது கார்டியனுடைய கடமை யாகும். சட்டப்படி நியமிக்கப்பட்ட ஒரு கார்டியனுக்கு கோர்ட்டின் யோசனை கேட்க பாத்யதை யிருப்பதுபோல இந்த தேசத்தில் க்ரமமான கார்டியனுக்கு கோர்ட்டின்யோசனை கேட்க பாத்யதை கிடையாது. மைனரைக் கட்டுப்படுத்தும் கடன்களைத் தீர்க்கும் விஷ யத்தில் ஒரு க்ரமமான கார்டியன் எப்படி நடந்து கொள்ளுகிற தென்பதை அந்த கார் டியனே தமக்கு உசிதமென்று தோன்றுகிற படி தீர்மானித்துக் கொள்ளவேண்டும். ஒவ் வொரு கேஸிலும் கார்டியன் ஸரியானபடி நடந்திருக்கிறாரா என்பது மாத்ரம் கவனிக் கப்படும். அவர் தகுந்த யோசனையோடும் ஜாக்ரதையோடும் நடந்திருந்தால் அவர் ஸரி யானபடியே நடந்திருக்கிறார் என்று கொள் ளப்படும். ஸரியான யோசனையோடு கார்டியன் கார்யங்களை நடத்தியிருக்கிறார் என்பதற்கு கார்டியன் ஸொத்தைப்பராதீனம் செய்த காலத்தில் இருந்த நிலைமைகளை கவனிக்கும் போது, ஸாதாரண முன்யோசனையுள்ள ஜனங் கள், இப்படி மைனரின் ஸொத்து விஷயத்தில் கார்டியன் நடந்து கொண்டது விவேகமும், யோசனையும் கூடியது என்று சொல்வார்களா என்று பார்க்கவேண்டும். ஒரு ஸொத்தை விற்பதற்கு அவச்யம் இல்லாமலிருந்து, அதை விற்பதனால் மைனருக்கு லாபம் ஏற்படக்கூடும் என்பதை உத்தேசித்து அந்த ஸொத்தை மைனரின் கார்டியன் விற்றால், அதை விற் பதற்கு முன் கார்டியன் அந்த விற்பனை விஷய மாய் யோசனை சொல்லத் தகுந்தவர்களை யோசனை கேட்டிருந்தால் அவர் விவேகத் தோடும் யோசனை யோடும் நடந்து வந்தார் என்று சொல்லலாம். ஆனால் யோசனை சொன்னவரும், கார்டியனும், ஸொத்தை விற் பது விஷயமாகப் பெரிய தவறு செய்துவிட் டார்கள் என்று கோர்ட்டாருக்கு நிச்சய மாய்த் தெரிந்தால், கார்டியன் மற்றவர்களை யோசனை கேட்டார் என்பது மாத்ரம் கோர்ட் டார் விற்பனையை ஸ்திரப்படுத்துவதற்கு ஒரு தகுந்த ஆதாரமாகாது.

இது விஷயமாய் ஜட்ஜ் ஸதாசிவய்யருடைய அபிப்ராயமாவது:—

(1) ஒரு ஹிந்து மைனருடைய கார்டியன் அந்த மைனருடைய ஸொத்தைப் பராதீனம் செய்வதற்குமுன் அப்போது இருந்த நிலைமை

களைப்பற்றித் தீர யோசித்ததில் அப்படி ஸொத்தைப் பராதினம் செய்வதால் மைன ருக்கு நன்மை ஏற்படக்கூடும் என்று நம்பி, மைனருடைய ஸொத்தைப் பராதீனம் செய் தால் மைனர் அந்த விற்பனைக்கு கட்டுப் பட்டவனுகிறுன்.

(2) கார்டியன் ஸொத்தை விற்றதில் தவறு தலாய் நடந்திருந்த போதிலும், வாங்கினவன் விற்பனையைப் பற்றி விசாரித்து நல்லெண்ண த்தோடு நடந்துவந்து, விற்பனையைப் பற்றி கார்டியன் சொல்லியவைகளைக் கேட்டும் தா னே அதைப்பற்றி விசாரித்தும் கார்டியன் மைனருடைய ஸொத்தை விற்பது மைன ருடைய க்ஷேமத்தை உத்தேசித்தே யென்று அவருக்குத் த்ருப்திகரமாக தோன்றினுல் வாங்கினவருக்கு அப்படி வாங்கினதினுல் யாதொரு கெடுதலும் நேராது-1912 மதராஸ் லா டைம்ஸ் 547.

### MRS. BESANT'S CASE.
மிஸ்லஸ் பெஸண்டின் கேஸ்.

சென்ற அக்டோபர் மாஸம் மிஸஸ் பெஸண் டின்மேல் மிஸ்டர்நாராயணய்யா கொண்டுவந்தி ருந்த கேஸ் அப்பீலில் மிஸஸ் பெஸண்டுக்கு விரோதமாக முடிந்ததென்று சொல்லியிருந் தோம். இந்த மாஸம் 4-தேதி யன்று சென்னை ஹைகோர்ட்டில் மிஸஸ் பெஸண்ட் முதல் அப்பீல் தீர்மானத்தின்மேல் ப்ரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்ய உத்தரவாக வேண்டுமென்று மனுப்போட்டார். இப் பேர்ப்பட்ட கேஸ்களை விசாரிக்க சென்னை ஹைகோர்ட்டுக்கு அதிகாரம் உண்டா என் பதைப்பற்றிய லாபாயிண்டு விஷயமாக இந்தக் கேஸ் அப்பீல் செய்யத் தகுந்ததென்று மிஸ் ஸெஸ் பெஸண்ட் சொன்னுர். வாதி மிஸ் டர் நாராயணய்யாவின் வக்கீல் அந்த மனுவை ஆக்ஷேபித்துப்பேசினுர். ஜட்ஜுகள் அந்தக் கேஸில் லாபாயிண்டு விஷயமாய் கவனிக்க வேண்டிய கேள்விகள் இருக்கின்றன வென்று சொல்லி, ப்ரிவிகௌன்ஸிலுக்கு அப்பீல் செய்ய அனுமதிகொடுத்தார்கள். மிஸ்ஸெஸ் பெஸண்ட்மிஸ்டர் நாராயணய்யாவினுடைய புத்ரர்களைக் கொண்டுவந்து விடவேண்டு மென்று செய்திருந்த டிக்ரியை நிறைவேற்று மல் நிறுத்திவைக்கும்படி மிஸ்ஸெஸ்பெஸண்ட் கேட்டுக்கொண்டதை ஜட்ஜுகள் மறுத்து விட்டார்கள்.

### RIGHT OF WAY.
போவதற்கு வழி.

வாதி தம்முடைய ஸாகுபடியாகக் கூடிய நிலங்களுக்குப் போவதற்கு பாத்ய முள்ள வழியை வாதி உபயோகிக்காதபடி ப்ரதிவாதி தடை செய்துவிட்டார். அதனுல் வாதி தம்மு டைய நிலங்களை ஸாகுபடி செய்யவில்லை. வாதி யினுடைய நிலங்களுக்கு போவதற்கு வேறு வழி யொன்று இருந்தது. ஆனுல் அந்த வழி ரொம்ப ஆபத்துக்கிடமானதும் சுற்று னதுமாய் இருந்தது. அப்படியானுல், ப்ரதி வாதி தடை செய்ததனுல்தான் தமக்கு நஷ் டம் நேர்ந்ததென்று வாதி ரூபித்தாலொழிய வாதிக்கு நஷ்டத்துக்கு ஈடு பெற பாத்யம் கிடையாது.

அப்படித் தடைசெய்ததின் நிமித்தம் வாதி ப்ரத்யேகமான செலவுகள் செய்திருந்தால் அந்தச் செலவையும், போவதற்குள்ள பாத் யதையைத் தடை செய்ததற்காக நஷ்டத் துக்கு ஈடும் வாதி பெறலாம்.

16. (1913) இந்திய லா ஜர்னல். 243.

### EXECUTION OF A DECREE.
டிக்ரீயை நிறைவேற்றுதல்.

அவிபக்த குடும்பத்தில் ஒருவர் குடும்பத் துக்கு வரவேண்டிய கடனைப் பெற்றுக்கொ ண்டு ரசீது கொடுக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறுர். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்கள் மைனர்களாயிருந்தாலும், அப்

படி மைனர்களாயிருப்பது அந்தக் குடும்பத்துக்கு வரவேண்டிய கடனுக்காக டிக்ரியை நிறைவேற்ற மனுப்போடுவதற்கு ஒரு தடையாகாது. அவர்கள் மைனராயிருப்பதாலேயே லிமிடேஷன் காலம் செல்லாவது நின்று போகாது.

## A SANYASI'S INHERITANCE.

ஒரு ஸன்யாஸி வார்ஸாவது.

சூத்ர ஜாதியில் பிறந்த ஒருவர் யதி அல்லது ஸன்யாஸி ஆச்ரமத்தைச் சேர்ந்தவராக ஆக முடியாது. துறவியாய்ப் போன ஒரு சூத்ரர் குடும்ப ஸொத்தை அடைவது கிடையாது என்று உலகவழக்க மிருப்பதாக ருசுப்படுத்தினலொழிய அவருக்கு குடும்ப ஸொத்துக்கு பாத்யமில்லை என்று சொல்வதற்கில்லை.

## REVIVING A TIME BARRED DEBT.

காலாவதியான கடனை உயிர்ப்பிப்பது.

ஒரு அவிபக்தி ஹிந்து குடும்பத்தின் தகப்பனரும் மானேஜருமாயிருப்பவர் காலாவதியான கடனை உயிர்ப்பித்து அந்தக் கடனுக்காக குடும்ப ஸொத்தைக் கட்டுப்படுத்தினல் அது சட்டப்படி செல்லாது. 25 இந்தியன் லா ரிபோர்ட், அல்லகபாத்து 207.

## RECEIVING STOLEN NOTES.

திருட்டுப்போன நோட்டுகளை வாங்கிக்கோள்ளுதல்.

ஒருவரிடமிருந்த ஆயிரரூபாய் மதிப்புள்ள கரன்ஸி நோட்டொன்று திருட்டுப்போய் விட்டது. திருட்டுப்போன 7-மாஸத்துக்குப் பிறகு அந்த நோட்டு பம்பாயில் வ்யாபாரம் செய்துவந்த ஒரு ஷராப்பினிடம் அகப்பட்டது. வ்யாபார நடவடிக்கையில் அவர் கையில் நோட்டுகள் வந்து போய்க்கொண்டிருக்கும். ப்ரஸ்தாப நோட்டை யார் தம்மிடம் செலுத்தினர் என்று சொல்ல ஷராப்பால் முடியவில்லை. அப்படியானல் இந்தியன் பினல் கோட் 411, 414-வது ஸெக்ஷன்கள்படி கொடுக்கப்பட்ட ஒரு ப்ராதின்மேல் சீப் ப்ரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் ஸம்மன்ஸ் கொடுக்க மறுப்பது ந்யாயமே யாகும்.

## ILL-TREATMEMT OF WIFE.

மனைவியைக் கொடுமையாய் நடத்துவது.

ஒரு ஹிந்துவின் மனைவி தன்புருஷன் தன்னைக் கொடுமையாய் நடத்துகிறன் என்று சொல்லி தான் தனியாக இருக்க ஜீவனம்சம் வேண்டுமென்றுகேட்கவேண்டுமானல் அவளையவள்புருஷன் சட்டப்படி கொடுமையாக நடத்தினதாக ரூபிக்கவேண்டும். அந்தக் கொடுமையானது இங்க்லீஷ் சட்டப்படி புருஷன் மனைவி இருவரும் கோர்ட்டு மூலமாய் பிரிந்து போகும்படி வ்யாஜ்யம் போடக் கூடியதாயிருக்கவேண்டும். இங்க்லீஷ் சட்டப்படி கொடுமை யென்பதற்கு புருஷன் தன் மனைவியை அவளுடைய தேகத்துக்கும், பத்ரத்துக்கும் கெடுதல் உண்டாகக்கூடியதாய் கொடுமை செய்திருக்கவேண்டும்.

ப்ரஸ்தாபகேஸில் ஒரு ஹிந்து மனைவி தனி ஜீவனம்சம் வேண்டுமென்றுதன்புருஷன்மேல் வ்யாஜ்யம் கொண்டுவந்தாள். அவளுடைய தேகஸுகத்துக்கும் பத்ரத்துக்கும் கெடுதலுண்டாகும்படியாக அவளுடைய புருஷன் அவளுக்குக் கொடுமை செய்ததாய் ருஜுவாகவில்லை. ஆகையால் அவளுக்குத் தனி ஜீவனம்சம் பெற பாத்யதை கிடையாது. இன்னம், அவள் புருஷன் இரண்டாவது மனைவியை கல்யாணம் செய்து கொண்டு, முதல் மனைவியை அலக்ஷ்யம் செய்தோ, அவளிடம் அன்பில்லாதபடி நடந்தோ, அல்லது அவளை இரண்டாவது மனைவியைவிடத் தாழ்வாக நடத்தியோ வந்து, அதனல் முதல் மனைவிக்கு மனஸில் துக்கமுண்டாகும்படி செய்தால் அப்படி புருஷன் நடந்துகொண்டது சட்டப்படி கொடுமையாய் நடத்தின தாகாது.

11. அல்லகபாத் லா ஜர்னல் 161.

# The Sanitary World.

## ஸுகாதாரப் பகுதி

### SOME ERRORS IN HYGIENE.

### ஸுகாதாரத்தைப்பற்றிய சில தவறுன கொள்கைகள்.

அநேக ஜனங்கள் ஸுகாதார ஸம்பந்தமான ஒரு விஷயத்தைப்பற்றி ஏதாவது ஒரு அபிப்ராயம் கொண்டுவிட்டால் அந்த அபிப்ராயம் ரொம்ப தவறுதலாக இருந்தபோதிலும் அதை விட்டுவிட மனங்கொள்வதில்லே. அந்த அபிப்ராயம் எவ்விதத்தில் தவறுதலாயிருக்கிறதென்பதை எடுத்துக்காட்டினபோதிலுங் கூட அந்த அபிப்ராயம் வெகு காலமாய் மனஸில் பதிந்திருப்பதால் அதை மாற்றிவிட வெகுவாய் இஷ்டப்படுவதில்லே இன்னம் இந்தத் தவறுன கொள்கைகள் தலேமுறை தலேமுறையாக இருந்துகொண்டே இருக்கும். இப்படி ஜனங்கள் இருப்பதால் ஸுகாதார விஷயமாய் பாடுபடும் வைத்யர்கள் ரொம்பவும் ச்ரமப்படவேண்டியிருக்கிறது. ஸுகாதாரத்தில் ரொம்ப அபிவ்ருத்தி ஏற்படுவதும் கஷ்டமாகிவிடுகிறது. இந்தக் கொள்கைகள் எப்படித் தப்பாயிருக்கின்றன என்பதை ஜனங்கள் அறிந்துகொண்டால் அவர்களுக்கு தேக ஸௌக்யமேற்படுவதோடு பொதுவாய் தேசத்துக்கும் க்ஷேமமும் ஏற்படும்.

ஸமீபத்தில் பேஹார் ஒரிஸ்ஸா மாகாணங்களில் ஸானிடரி கமிஷனராயிருக்கும் காப்டன் ராஸ் என்பவர் இப்பேர்ப்பட்ட தப்புக் கொள்கைகளில் சிலவற்றை எடுத்துக்காட்டி அவைகள் எவ்விதத்தில் தப்பாயிருக்கின்றன என்பதை விவரித்துச் சொல்லியிருக்கிருர். அந்தக் கொள்கைகளாவன.

(1) குடி ஜலத்தைக் காய்ச்சிக் குடிக்கவேண்டு மென்பது.

(2) தேக ஸௌக்யத்துக்காக, ஒரு சீதோஷ்ண ஸ்திதியுள்ள இடத்திலிருந்து இன்னெரு சீதோஷ்ண ஸ்திதியுள்ள இடத்துக்கு மாறுவதின் உண்மையான கருத்து.

(3) வ்யாதி க்ருமிகளேப் போக்கும் மருந்துகளே ஸரியாய் உபயோகப்படுத்தாமல் வீணுக்குவது.

இந்த ஸஞ்சிகையில் குடிஜலத்தைக் காய்ச்சிக் குடிக்கவேண்டுமென்பதைப்பற்றி மட்டும் காப்டன் ராஸ் சொல்வதை விவரித்து எழுதுவோம்.

குடிஜலத்தைக் காய்ச்சிவிடுவதாலேயே அது குடிக்கத்தகுந்த நல்ல ஜலமாகி விடுகிறதென்று ஜனங்கள் பொதுவாய் தப்பெண்ணம் கொண்டிருக்கிருர்கள் என்கிருர். இந்தக் கொள்கை ஒரு விதத்தில் உண்மையானுலும், ஸரியாய்க் கைக்கொள்ளாததனுல் இது அனுஷ்டானத்துக்கு ஒத்துவருகிறதில்லே. இந்த தேசத்தில் வெகுவாய் எங்கும் கிடைக்கும் ஜலம் பூமியின் மேற்பாகத்தி லிருந்தே கிடைக்கிறது. பூமியில் ரொம்ப ஆழத்திலிருந்து ஜலம் கிடைப்பது துர்லபம். அப்படி பூமியின் மேல்பாகத்திலிருந்து கிடைக்கும் ஜலத்தில் இந்த்ரிய வஸ்து சிறிது ஜாஸ்தியாகவே இருக்கிறதென்று வைத்துக்கொள்ளலாம். அந்த இந்த்ரிய வஸ்துவிலும் உயிருள்ள பாக்டீரியாக்கள் ஏதேஷ்டமாயிருக்கின்றன என்றும் சொல்லலாம். ஆகையால் இந்த ஜலத்தைக் காய்ச்சுவதால் இது பாக்டீரியாக்களேப் போட்டு ஓர் குழம்பு தயார் செய்த மாதிரியாகிறது.

பலவகை க்ருமிகள் வ்ருத்தியாவதற்கு இந்தக் குழம்பைப்போல் அவ்வளவு ஏற்றதான

வஸ்து வேறு கிடையாது என்று சொல்ல லாம். இந்தக் காய்ச்சின ஜலத்தில் உயிருள்ள வும் வ்ருத்தியாகக்கூடியவுமான ஜீவராசிகள் இல்லை யென்றாலும், இந்த நிலைமை வெகு நேரம் நீடித்திருப்பதில்லை. ஏதாவது ஒரு ஜீவராசி அந்த ஜலத்தில் கலந்துவிட்டால் உடனே அது வெகு விரைவாய் வ்ருத்தியடை கிறது.

ஜனங்கள் தண்ணீரைக் காய்ச்சும் விஷயத் தில் ச்ரத்தையாயிருந்தாலும், அந்த ஜலம் கெடு தலடையாமல் வைத்திருக்க வெகுவாய் வேண் டிய அளவு கவலை எடுத்துக்கொள்வதில்லை. இந்த ஜலத்தில் வ்யாதி க்ருமிகள் கலந்துவிடக் கூடும். அப்படிக் கலந்துவிட்டால் க்ருமிகள் ரொம்ப விரைவாக வ்ருத்தியடைந்து தொத்து வ்யாதி பரவுவதற்கு ஹேதுவாகிறது.

இந்த ஜலத்தில் யாதொரு க்ருமியும் வ்ருத்தியாகாதபடி ஜலத்தை பத்ரப்படுத்தி வைத்திருந்தால் ரொம்ப நல்லதுதான். ஆனால் அதை அப்படி வைத்திருப்பது எப்போதும் ஸாத்யமாகாது.

ஆகையினால் இந்தக் காய்ச்சின ஜலத்தில் அந்தந்த ப்ரதேசங்களில் வ்யாபித்துக் கொண் டிருக்கக் கூடிய வ்யாதிகளின் க்ருமிகள் கலந்து ஜலம் கெடுதலடைய ஹேதுவாகும்.

காப்டன் ராஸ் தமது சுற்றுப் ப்ரயாணங் களில் இது விஷயமாய் கவனம் செலுத்த நேர்ந்ததாம். அவர் வெளியூரிலிருக்கும் போதெல்லாம் காலையில் ஜலத்தை வடிகட்டும் கருவிகளில் வடிகட்டி, குப்பிகளில் நிரப்பி வைத்துக்கொள்வாராம். இந்த ஜலம் பகல் முழுவதும் ருசி மாறாமல் குடிக்க ஏற்றதாயிருக் கும். ஆனால் சில ஸமயங்களில் அவருடைய வடிகட்டும் கருவி ஸரியாய் இராமல் கெடுதல டைந்துவிட்டால் அவர் முதல் நாள் இரவே ஜல த்தை நன்றாய்க் காய்ச்சி புட்டியில் ஊற்றி ஆற வைத்து மறுநாள் உபயோகிப்பது வழக்கம். இப்படி உபயோகித்ததில் அநேகமாய் ஒவ் வொரு ஸமயத்திலும் ஜலமானது ஸாயங் காலத்துக்குள் கெட்டுப்போய் நாற்றமெடுத்து விட்டதாம். இப்படி ஜலம் கெடுதலடைந்த தற்கு காரணம் என்னவென்றால், ஜலத்தைக் காய்ச்சுவதால் அதிலுள்ள பாக்டீரியாக்கள் இறந்துபோய்விட, அந்த ஜலம் பாக்டீரியாக் கள் போட்டுச் செய்த குழம்பு மாதிரியாகி விடுகிறது. காலை நேரத்தில் ஸூர்ய உஷ்ணத் தால் ஜலமானது பாக்டீரியா வ்ருத்தியாவதற்கு ஏற்ற சூட்டில் இருக்கிறது. புதிதாக பாக்டீ ரியாக்கள் அதில் கலந்தவுடன் அவை ரொம்ப விரைவாக வ்ருத்தியாகி ஜலத்தைக் கெடுத்து விடுகின்றன. அவர் போனவிடங்களில் காலரா முதலிய வ்யாதிகளின் விஷ பாக்டீரியாக் கள் காய்ச்சின ஜலத்தில் கலக்காமலிருந்தது அவரத்ருஷ்டமே. ஆனால் வடிகட்டும் கருவி (Filter) யில் ஜலத்தை வடிகட்டுவதிலோ பெரும்பாகம் பாக்டீரியாவும் மற்ற ஜீவராசி களும் போய் விடுவதோடு அப்படி அவைகள் போவதால் பாக்டீரியாக்கள் வ்ருத்தியாவதற்கு வேண்டிய உணவும் ஜலத்தில் இல்லாமல் போகிறது. இதனால் வடிகட்டின ஜலத்தில் வேறு பாக்டீரியாக்கள் கலந்தபோதிலும் அவைகளுக்குப் போதுமான உணவில்லாத தாலும், அந்த ஸ்வல்ப உணவும் ஏற்கனவே ஜலத்திலுள்ள ஜீவராசிகளுக்கும் வேண்டி யிருப்பதாலும் அவை விரைவாய் வ்ருத்திய டைவதற்கு முடிவதில்லை. ஆகையால் தண் ணீரைக் காய்ச்சிக் குடிப்பது நல்லதென்றா லும் அதை பத்ரமாக வேறு க்ருமிகள் கலக்கா மல் வைத்திருப்பது வெகுவாய் முடியாத கார்யமாதலால் தண்ணீரை எப்போதும் வடி கட்டும் கருவியால் வடிகட்டி சாப்பிடுவதே நல்லது என்று ஏற்படுகிறது.

## THE REGISTRATION OF MEDICAL PRACTITIONERS.

வைத்யர்களை ரேஜிஸ்டர் செய்வது.

சென்ற நவம்பர் மாஸம் 11-தேதி சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடினபோது ஆனரபிள் டாக்டர் டி. எம். நாயர் சென்னை ராஜதானியிலுள்ள வைத்யர்களை ரெஜிஸ்டர் செய்வதற்காக மசோதா ஒன்று கொண்டுவந்து அந்த மசோதா கௌன்ஸிலால் ஆலோசிக்கப் பட்டது. ஆனரபிள் டாக்டர் டி. எம். நாயர் அந்த மசோதாவைப்பற்றிப் பேசினபோது அந்த மசோதா சட்டமாக வேண்டுமென் பதற்கு 3-காரணங்கள் இருக்கின்றன வென் றும், முதலாவது காரணம் வைத்யக் கல்வி யையும் வைத்யர்களுடைய பொதுக்கல்வியை யும், உயர்த்துவதாகுமென்றும், இந்த ராஜ தானியில் வைத்யத் தொழிலுக்குப் படிப்பவர் களுடைய கல்வி நிலைமை உயர்ந்ததாயிருந் தாலும் இந்தியாவின் மற்ற பாகங்களில் ஸமீ பத்தில் தோன்றியிருக்கும் வைத்ய பள்ளிக் கூடங்களில் போய்ப் படிப்பவர்களுடைய கல்வி மட்டமாகவே யிருக்கிறதென்றும் இந்தச் சட்டத்தால் ஒரு வைத்ய கௌன்ஸில் ஸ்தா பித்து வைத்யர்களுடைய வைத்யப் படிப்பையே யன்றி அவர்களுடைய பொதுக் கல்வியையுங் கூட கவனித்து வருவதாக உத் தேசித்திருக்கிறதென்றும், சொன்னார்.

இன்னும், இன்ன வைத்யர் தேர்ச்சி யடைந்திருக்கிறார் என்று ஸாதாரண ஜனங் கள் அறிந்துகொள்ள முடியாமல் கஷ்டப்படு கிறபடியால் அவர்களுக்குத் தெரியும்படி வைத்யர்களுடைய ரெஜிஸ்டர் ஒன்று ஏற்ப படுத்தவேண்டியது அவச்ய மென்றும், இது இரண்டாவது காரணம் என்றும், ரெஜிஸ்டர் செய்த வைத்யர்கள் க்ரமந்தப்பி நடக்காதபடி பார்த்துக்கொள்வது மூன்றாவது காரணம் என்றும், எந்த வைத்யராவது ஒழுங்கு தப்பி நடந்தால் அவருடைய பெயரை ரெஜிஸ்டரிலி ருந்து வைத்யகௌன்ஸில் நீக்கிவிடவேண்டு மென்று இந்தச் சட்டத்தில் ஏற்படுமென்றும் சொன்னார். ஸ்வதேச வைத்ய முறைகளைப்பற் றிப்பேசினபோது, அவர் இந்தச்சட்டமானது ஸ்வதேசமுறைகளை பாதிக்காது என்றும், ஸ்வ தேச முறைகள் ரொம்ப அபிவ்ருத்தியடைந் திருந்து ஜனங்களுக்கு ரொம்ப நன்மை செய்து வந்தால் ஜனங்கள் அந்த வைத்ய முறைகளை அனுஸரிப்பவர்களை மேம்பார்வை பார்த்து அவர்களுக்கு யோக்யதாபத்ரம் கொடுக்கக்கூடிய ஒரு ஸங்கம் அல்லது ஸ்தா பனத்தை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்க வேண்டுமென்று ஜனங்கள் கவர்ன்மெண்டா ரைக்கேட்டுக்கொள்ளலாமென்றும், அப்படிச் செய்யாதவரையில் அவர்கள் வைத்யத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் என்று நிச்சயிக்க முடி யாதாகையால் அவர்களையும் ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமென்பது ஸரியல்லவென்றும், ரெஜிஸ் டர் செய்யப்பட்ட ஒரு வைத்யர் அவ ருக்கு இஷ்டமிருந்தால் ஆயுர்வேத அல்லது யூனானி முறைப்படி வைத்யம் செய்து வரலா மென்று சட்டத்தில் அனுமதி கொடுத்திருக் கிறதென்றும் சொன்னார்.

சென்னையில் ப்ரபல யூனானி வைத்யராகிய ஆனரபிள் மிஸ்டர் ஸைனுலாபிடீன் இந்த மசோதாவை ஆக்ஷேபித்துப் பேசினபோது ஆனரபிள் டாக்டர் நாயர் இந்த மசோதாவா னது ஸ்வதேச முறைப்படி வைத்யம் செய்ப வர்களை பாதிக்காது என்று சொன்ன சொல் லியபடி இல்லை யென்று தமக்கு தோன்றுவ தாகவும், தங்கள் முன்னோரிடத்திலிருந்து கற்று வெகு காலமாக வைத்யம் செய்து வந்த அனுபவத்தால் ஸ்வதேச வைத்யர் கள் வ்யாதிகளை ஸ்வஸ்தம் செய்ய திறமை யுள்ளவர்களாயிருக்க, அவர்களை யோக்யதை யில்லாதவர்கள் என்று சொல்வதாக இந்த

சட்டத்தால் ஏற்படுகிறதென்றும், மேல் நாட்டு முறைப்படி வைத்யம் செய்யும் வைத்யர்களுக்காக ஏற்பட்ட ஒரு சட்டத்துக்கு சென்னை வைத்யர்கள் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் என்று பெயர் இருப்பதனாலேயே மற்ற முறைப்படி வைத்யம் செய்பவர்களை இல்லையென்றும் அப்படியிருந்தாலும் அவர்களைதேர்ச்சிபெறாதவர்களோடு சேர்த்துவிடவேண்டும் என்று சொல்வதாகக் காணப்படுகிறது என்றும் சொன்னார். இன்னம் ஸ்வதேசமுறைப்படி வைத்யம் செய்பவர்கள் ஒரு ஸர்டிபிகேட்டும் கொடுக்கக்கூடாதென்றுசட்டத்தில் நிபந்தனை ஏற்பட்டிருக்கிறதென்றும், ரெஜிஸ்டர் செய்யப்பட்ட வைத்யர்களை மாத்ரம் ஜூரியாயிருக்கும்படி கட்டாயப்படுத்தக் கூடாதென்றிருக்கிறதென்றும், தாமஸிக்கக் கூடாத கேஸ்களில் வைத்யம் பார்க்கும் ஸ்வதேச வைத்யர்களை மாத்ரம் அந்தப்படி விலக்க ஆக்ஷேபனையென்னவென்றும் சொன்னார்.

பிறகு மசோதா கௌன்ஸிலில் வாசிக்கப்பட்டு ஸெலெக்ட் கமிட்டிக்கு விடப்பட்டது. ஸெலக்ட் கமிட்டியார் இந்த மசோதாவில் சில திருத்தங்கள் செய்திருக்கிறார்கள். மசோதாவின் முகவுரையில் "வைத்ய உதவி வேண்டுபவர்கள் தேர்ச்சிபெற்ற வைத்யர்கள் இன்னாரென்றும் தேர்ச்சி பெறாத வைத்யர்கள் இன்னாரென்றும் தெரிந்து கொள்ளவேண்டி" என்று இருந்ததை எடுத்து விட்டுவைத்யர்களை ரெஜிஸ்டர் செய்யவேண்டியதற்காக என்பதை மாத்ரம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின்படி வைத்யர்கள் ஜூரியில் ஒருவராக இருக்கவேண்டியதில்லை என்று இருப்பதால் இந்த மசோதாவில் ரெஜிஸ்டரான வைத்யர்களுக்குத்தான் இந்த ஸௌகர்யம் உண்டென்று சொல்லியிருப்பது அநாவச்யம் என்று அந்தப் பிரிவையும் தள்ளிவிட்டார்கள்.

கவர்ன்மெண்ட் உதவி பெறும் வைத்ய சாலைகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட வைத்யர்கள் தான் வேலைபார்க்கலாம் என்றிருந்ததை மாற்றி மாகாண கவர்ன்மெண்டார் ஸாங்ஷன் செய்தால் ரெஜிஸ்டராகாத வைத்யர்களும் வேலை பார்க்கலாம் என்று விதித்திருக்கிறது.

## GOOD TEETH.

### நல்ல பற்கள்.

பற்கள் சீக்ரம் கெடாமல் நல்ல ஸ்திதியிலிருக்க வேண்டுமானால் பின்வரும் விதிகளை அனுஸரிப்பது நல்லது. $2\frac{1}{2}$ வயது வரையில் குழந்தைகளுக்கு பாலைத்தவிர வேறு மா ஸத்துள்ள அல்லது சர்க்கரை ஸத்துள்ள ஆகாரங்கள் கொடுத்தால் அவைகள் குழந்தைகள் மென்று தின்னவேண்டிய நிலைமையில் இருக்க வேண்டும். ரொட்டியைப் பாலில் ஊறப் போட்டுக் கொடுக்கக்கூடாது. மா ஸத்துள்ள அல்லது சர்க்கரை அதிகமாயுள்ளதும் ம்ருதுவானதுமான ஆகாரம் சாப்பிட்டிருந்தால் அதற்குப் பிறகு வாயையும் பற்களையும் சுத்தம் செய்யக்கூடிய வைகளான ஆகாரம் சாப்பிடவேண்டும். உதாரணமாக, மாப்பலகாரம், தித்திப்பான பிஸ்கோத்துகள், ரொட்டிகள், பணியாரங்கள் முதலியவைகளைச் சாப்பிட்டபின் பழங்கள் சாப்பிடவேண்டும். தினம் மூன்றுவேளை சாப்பிடுவது நல்லது. சாப்பாட்டு நேரத்துக்கு நடுவிலாவது, படுத்துக் கொள்ளப் போகுமுன்னாவது மிட்டாய்கள், சோகலேட், பிஸ்கோத்து, பால் ஆகிய இவைகளை சாப்பிடவேகூடாது. இந்த ஸுலபமான விதிகளை அனுஸரித்து வந்தால் பற்கள் வெகு நாள் கெடாமலிருக்கும்.

# The Boys' World

## பையன்கள் பகுதி.

### COLOURS OF SEA WATER.

### ஸமுத்ர ஜலத்தின் நிறங்கள்.

ஸமுத்ர ஜலமானது உஷ்ண ப்ரதேசங்களில் நீல நிறமாயும் மற்ற இடங்களில் பசுமையாயும் இருக்கிறது. கடல் ஜலத்தின் நிறம் நீலமாயிருப்பதற்குக் காரணம் ஜலத்தில் உப்பு இருப்பது தான். எவ்வளவுக்கு உப்பு இருக்கிறதோ அவ்வளவுக்கு கடல் ஜலம் ரொம்ப நீல நிறமாயிருக்கும். உஷ்ண ப்ரதேசங்களில் கடல் நீர் சடுமையான ஸூர்ய உஷ்ணத்தால் ரொம்ப ஆவியாய்ப் போய்விடுவதால், மற்ற குளிர்ந்த ப்ரதேசங்களில் இருப்பதைவிட ரொம்ப உப்பாக இருக்கிறது. ஈக்வேடர், அதாவது, நிரக்ஷரேகைக்கு (பூமத்ய ரேகை) 30 டிக்ரி வடக்கேயும் தெற்கேயும் கடல் ஜலமானது ரொம்ப நீல நிறமாயிருக்கிறது. இதற்கு அப்பால் உள்ள இடங்களில் ஜலம் பசுமையாக மாறுகிறது. ரொம்ப வடக்கேயுள்ள ஆர்க்டிக் ஸமுத்ரத்திலும் அன்டார்ட்டிக் ஸமுத்ரத்திலும் ஜலம் ரொம்ப பசுமையாக இருக்கிறது.

மத்யதரைக் கடல் ரொம்ப நீல நிறமாயிருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, அதில் பாயும் சுத்த ஜலமுள்ள பெரிய நதிகள் வெகு ஸ்வல்பம். இரண்டாவது, அந்தக்கடலைச் சுற்றிலும் தரையிருந்து அதைச் சூழ்ந்து கொண்டிருப்பதாலும், கொடுமையான ஸூர்ய உஷ்ணம் அதன்மேல் தாக்குவதாலும், அதன் ஜலம் ரொம்ப உப்பாயிருக்கிறது. அதன் ஜலத்தை எடுத்து அட்லாண்டிக் ஸமுத்ர ஜலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்ததில், மத்ய தரைக்கடல் ஜலம் ரொம்ப உப்பாயும் கனமாயும் இருந்தது.

ஸமுத்ரஜலத்தில் நீலம், பசுமை வர்ணங்களோடு சில ஸமயங்களில் வேறு வர்ணங்களும் காணப்படுவதுண்டு. 1909-ம்வருஷம் ஜனவரி மாஸத்தில் அமெரிக்காவின் கிழப் பக்கத்தில் ஸமுத்ர ஜலம் ப்ளாரிடா முனையிலிருந்து ஹாட்டராஸ் முனைவரையில் 3-மைல் அகலத்துக்கு மஞ்சள் நிறமாயிருந்ததாம். ஸுமார் 9-வருஷங்களுக்கு முன் கலிபோர்னியாவின் கரையோரமாக கடல் ஜலம் ஒரே கறுப்பு நிறமாயிருந்தது. அந்தப்பக்கத்திலுள்ள ஸாண்டாக்ரஸ் விரிகுடா முழுவதிலும் ஜலம் இந்த யாதிரி ஒரே கருப்பாய்ப் போய்விட்டது. ஒரு வித கறுப்பான சிறிய பூச்சிகள் ஜலத்தில் இருந்ததனால்தான் ஜலம் இப்படி கருப்பாயிருக்கவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

ரெட் ஸீ என்னும் செங்கடலில் ஜலம் மங்கின சிவப்பு நிறமாயிருக்கிறதால் அதற்கு ரெட் அதாவது சிவப்புக் கடல் (செங்கடல்) என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆல்ஜீ என்று சொல்லப்படும் ஒருவித ஸூக்ஷமமான பூண்டுகள் அந்தக் கடலில் இருக்கின்றன.

சீனாவுக்குப் பக்கத்திலுள்ள "யெல்லொ ஸீ" அதாவது மஞ்சள் கடலின் ஜலம் மஞ்சள் நிறமாயிருக்கிறது. மஞ்சள் நதி யென்று சொல்லப்படும் ஹோயாங் ஹோ நதியின் வண்டல் ஜலம் அந்தக் கடலில் சேருவதால் அதன் ஜலம் அந்த நிறம் கொண்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. ஆனால் இதிலும் ஒருவித ஜீவராசிகள் இருப்பதனால் தான் இந்த மஞ்சள் நிறம் வந்திருக்கவேண்டும்.

சில ஸமயங்களில் ஸமுத்ர ஜலம் திடீரென்று பால்போல் வெண்மை நிறமாக மாறுவதுண்டு. 1904-ம்வருஷம் மார்ச்சு மாஸத்தில்

ஒரு ஜப்பானிய கப்பல் யோகஹாமாவிலிருந்து ஹாங்காங்குக்குப் போய்க் கொண்டிருந்தபோது ஸமுத்ர ஜலம் திடீரென்று சுத்த பால்போல் வெண்மையாகத் தோன்றிற்றும். ஆறு மணிநேரம் இந்தநிறம் மாறாமலிருந்தது. இதற்கு காரணம் இன்னதென்று விளங்கவில்லை.

### THE MISPLACED COMMA.

இடந்தவறிப்போட்ட "காமா"

வாக்யங்களை ஸுலபமாய் வாசிக்கும் பொருட்டு எங்கெந்த இடங்களில் எவ்வளவு நேரம் நிறுத்தி வாசிக்கவேண்டும் என்பதைக் காட்டுவதற்காக சில குறிகளை இடுகிறோம். முற்றுப்புள்ளி (.) வாக்யம் முடிந்து போனபிறகு இடப்படும். (;) ஸெமிகோலன்; இது தொடர்ச்சியான இரண்டு வாக்கியங்களுக்கு இடையில் இடப்படும். கமா (,) இது ஒரே வாக்யத்தில் வார்த்தைகளையும் பாகங்களையும் பிரித்துக்காட்ட வேண்டியஇடங்களில்இடப்படும். இவைகளைப் போல் வேறு குறிகளும் இருக்கின்றன. இந்தக்குறிகளை யிடுவதில், அநேகர் அஜாக்ரதையாக இருந்தாலும், இதனால் ஸகஜமாய் ஒன்றும் ப்ரமாதம் நேரிடுவதில்லை. ஆனால் இது விஷயம் அஜாக்ரதையாக இருந்ததில் ஒரு பத்ரிகை ஒரு பெரிய தவறுசெய்யும்படி நேர்ந்துவிட்டது. ப்ளாடினம் என்னும் உலோகம் ரொம்பவிலை ஏறப்பெற்றது. ப்ரான்ஸ் தேசத்தில் ப்ரசுரமான சில கணக்குகளில், ப்ரின்ஸ் டெமிடாவ் என்பவரிடம் உள்ள ப்ளாடினம் கட்டியானது 7,837 கிலோக்ராம் (கிலோக்ராம் என்பது 2-ராத்தலாகும்,) உள்ளது என்று போட்டிருந்தது. அந்த எண்ணில் போட்டிருந்த (,) கமாவை (.) தசாம்சபின்னப் புள்ளியாக மாற்றவேண்டும். மேலே சொன்ன பத்ரிகை அப்படி மாற்றாமல் அப்படியே போட்டு, ப்ளாடினம் கிடைப்பது ரொம்ப அரிதாயும் விலை ரொம்ப க்ராக்கியாயும் இருக்கும்போது அவ்வளவு பெரிய (15,674 ராத்தல் நிறையுள்ள) கட்டியை உலகத்துக்கு உபயோகப்படும்படி விடாமல் மற்ற உலோகங்கள், தாதுப்பொருள்கள் ஆகிய இவைகளோடு ஷை ப்ரின்ஸ் வைத்துக் காப்பாற்றி வருகிறார் என்று எழுதிற்று இவ்வளவு அதிகமாக ப்ளாடினம் ஒருவருக்கு அகப்படுவது ரொம்ப அருமை. சென்ற 1909-ம் வருஷம் உலகம் முழுமையிலும் கிடைத்த ப்ளாடினத்தின் அளவு 12500 ராத்தல்தான்.

ப்ரின்ஸ் டெமிடாவிடத்தில் இருப்பதாகச் சொன்ன ப்ளாடினம் உண்மையில் 15674-ராத்தல் இருக்குமானால் $3\frac{3}{4}$ கோடிரூபாய் விலையுள்ளதாகும். அவ்வளவு விலையுள்ள ப்ளாடினத்தை சும்மாவைத்திருக்க கோடீச்வரன் கூட ஸம்மதிக்கமாட்டான் அல்லவா? அவரிடமிருந்த ப்ளாடினத்தின் உண்மையான நிறை 7.837-கிலோக்ராம் அதாவது $15\frac{1}{2}$ ராத்தல் தான்.

அல்ப விஷயந்தானே என்று அலக்ஷ்யம் செய்தால் சில ஸமயங்களில் பெரிய ஸங்கடங்களும் நேர்ந்துவிடும். அமெரிக்காவில் அநேக புதிய யந்த்ரங்களைக் கண்டுபிடித்துக் கொண்டு வருபவரான மிஸ்டர் தாமஸ் அல்வா எடிஸன் இப்படி ஒரு ஸமயம் "காமா" போடுவதில் அஜாக்ரதையா யிருந்ததால் ரொம்ப நஷ்டம் அடையும்படி நேரிட்டது. கார்பன் டெலிபோன் என்னும் யந்த்ரத்தை ஜர்மெனியில் பேடெண்டு செய்ய விரும்பியபோது, அந்த யந்த்ரத்தின் விவரமடங்கிய வாக்யத்தில் ஒரு காமா தவறிப்போட்டு விட்டதால் அதன் தாத்பர்யமே மாறிப்போய் அவருக்கு பேடெண்டு கிடைக்காமல் போய்விட்டது. (பேடெண்ட் என்றால் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு யந்த்ரம்

அல்லது வேறு சாஸ்த்ர ஸம்பந்தமான வஸ்துவை கண்டுபிடித்தவரே ஒரு குறிப்பிட்ட காலம் செய்து விற்கலாம் என்று பாத்யதை பெறுதல்.)

"காமா" தவறிப்போட்டது விஷபமாக இன்னொரு உதாரணமும் கொடுக்கிறோம். அமெரிக்கா ஐக்யமாகாணங்களில் கவர்ன்மெண்டார் சில வருஷங்களுக்கு முன்னால் காப்பு வரி ஏற்படுத்தியிருந்தார்கள். அது விஷயமாய்ச் செய்த சட்டத்தில் வரியில்லாமல் இறக்குமதியாகக்கூடிய ஸாமான்கள் இன்னின்னவை யென்பதைப்பற்றிய ஒரு ஸெக்ஷனில் "எல்லா வெளிநாட்டு பழச்செடிகள்" என்று ஒரு பாபத்து குறிப்பிட்டிருந்தது. இதில் "பழச்செடிகள்" என்பது இங்க்லீஷில் 'ப்ரூட்—ப்ளாண்ட்ஸ்" (Fruit-Plants) என்று இரண்டு வார்த்தைகளுக்கும் நடுவில் ஒரு கோடு போட்டு எழுதப்படும். சட்டத்துக்கு நகல் எழுதின க்ளர்க்கு அந்தக் கோட்டுக்குப் பதிலாக ஒரு "காமா" போட்டு நகல் எழுதிவிட்டாராம். அதனால் ப்ரூட், ப்ளாண்ட்ஸ், அதாவது பழமும் செடிகளும் என்றாகி, பழங்கள் கூட வரியில்லாமல் அமெரிக்காவுக்குள் வரலாமென்றாயிற்று. ஆகவே ஒருவருஷம் வரையில் வெளி நாடுகளிலிருந்து ஆரெஞ்சுகள், எலுமிச்சம்பழம், வாழைப்பழம், கொடிமுந்திரிப்பழம், முதலிய அந்யநாட்டுப்பழங்கள் அமெரிக்காவில் வரியில்லாமல் வரலாயிற்று. இதனால் அமெரிக்காவுக்கு 60-லக்ஷம் ரூபாய் நஷ்டம் நேர்ந்ததாம். ஒரு அற்ப "காமா" இரண்டு வார்த்தைகளுக்கு இடையில் இருந்து என்ன வேடிக்கையும் நஷ்டமும் உண்டாக்கிவிட்டன, பாருங்கள்!

## KAISER'S MAXIMS.

### கெய்ஸருடைய நீதி வாக்யங்கள்.

ஜெர்மன் சக்ரவர்த்தியாகிய கெய்ஸர் தாம் வாசிக்கும் அறையில் தமது மேஜையின்மேல் ஒரு தங்கத்தால் செய்த சட்டத்தில் பின்வரும் நீதிவாக்யங்களை எழுதி ஒட்டி வைத்திருக்கிறாராம்.

(1) துக்கம் வந்தபோது மனந்தளராதே.

(2) அடையமுடியாதவற்றைப் பற்றியும் உபயோகமற்றவைகளைப்பற்றியும் ஆசைப்படாதே.

(3) அன்றன்றைக்குக் கிடைத்ததைக் கொண்டு த்ருப்திப்படு.

(4) எதிலும் நன்மையுண்டா என்று கவனிக்கவேண்டும்.

(5) ஆயிரநாழிகை துக்கப்பட்டுக்கொண்டிருந்தாலும் ஒரு நாழிகைப்பொழுதாவது ஸந்தோஷமாயிருக்க முடிந்தால் அதில் த்ருப்தியடைந்து கொள்.

(6) நீ செய்யும் கார்யங்களைப்பற்றி உன்னை ஒருவர் ச்லாகித்து நன்றிசெலுத்தாவிட்டாலும் கூட, நீ செய்யும் கார்யங்களை எப்போதும் உன்னால் கூடியமட்டும் நன்றாகவே செய். இவைகளின்படி எவர் நடக்கிறாரோ அவர் ஸந்தோஷமாக இருப்பார்.

(7) ஒருவர் உன்னைவிடத் தாழ்ந்தவரென்று நிச்சயமாய்த்தெரியும் வரையில் அவரை உனக்கு ஸமத்வமாகவாவது உன்னைவிட உயர்ந்தவராகவாவது நினைத்துக்கொள்.

(8) லோகமோ மிகப் பெரியது; மனிதர்களோ மிகச் சிறியவர்கள். ஆகவே உலகத்தில் நடக்கும் எல்லா விஷயங்களும் நம்மைப்பற்றியவைகளாகவே இருக்கமாட்டா. நமக்குதுன்பங்கள் நேர்ந்தாலும், அல்லது நமக்கு ஒருவர் கெடுதிகள் செய்தாலும், அவைகள் நமது நன்மைக்காக நேரவில்லை யென்று யார் சொல்ல முடியும்? இந்த பூமியிலுள்ள எந்தப்பொருள் விஷயத்திலும், அது உயிருள்ளதாயினும் ஸரி, உயிரற்றதாயினும் ஸரி, கடவுளுடைய ஆஞ்ஞை நடந்துவருகிறது. அற்பஜீவன்களாகிய நமக்கு அவ்விஷயம் தெரிவதில்லை. உலகத்தில் எக்கார்யமும் நமது நன்மைக்காகவே நடந்து வருகிறது.

## LORD HARDINGE AND A POLICE CONSTABLE.

லார்ட் ஹார்டிஞ்ஜூம் ஒரு போலீஸ் கான்ஸ்டபிளும்.

லார்ட் ஹார்டிஞ்ஜ் ஸமீபத்தில் மைஸூருக்குப் போயிருந்தபோது வைஸ்ராய் இருக்குமிடத்துக்குள் போகவிரும்புவோர் எல்லோரும் ஒரு பாஸ் கொண்டு போகவேண்டுமென்று "ரூல்" இருந்தது. ஒருநாள் ஸாயங்திரம் வைஸ்ராய் தமது ஏ. டி. காங்குடன் வெளியில் உலாவப்போயிருந்து தமது காம்புக்குத் திரும்புகையில் வழியில் ஒருஇந்திய போலீஸ் கான்ஸ்டேபிள், "பாஸை"க் காட்டினுலொழிய அவரை காம்புக்குள் நுழையவிட முடியாதென்று ஆக்ஷேபித்தானும்.

வைஸ்ராய் கையில் பாஸ்வைத்திருக்கவில்லை. கான்ஸ்டபிளிடம் தாம் லார்ட் ஹார்டிஞ்ஜ் என்பதைக் காட்டிக் கொள்ளாமலே தம்மை உள்ளே விடும்படி பலவிதத்திலும் வசப்படுத்த முயன்று பார்த்தார். என்ன சொல்லியும் கான்ஸ்டபிள் ஒரே கண்டிப்பாய் உள்ளே விட முடியாதென்று மறுத்துவிட்டான். கடைசியில் வேறு சிலர் அங்குவந்து அவர் வைஸ்ராயென்பதை கான்ஸ்டபிளுக்குச் சொல்லி லார்டு ஹார்டிஞ்ஜை காம்புக்குள் அழைத்துச் சென்றூர்கள். லார்டு ஹார்டிஞ்ஜ் அந்தக் கான்ஸ்டபிள் பிடிவாதமா யிருந்ததைப்பற்றி புகழ்ந்து அவனுக்கு ஒரு வெகுமதி கொடுத்து மைஸூர் போலீஸ் ஏற்பாட்டைப்பற்றி ச்லாகித்துப் பேசினூராம்.

## LAWN TENNIS.

லான் டேன்னிஸ்.

நமது தேசத்திலுள்ள பாடசாலைகளிலும் ஸங்கங்களிலும் க்ளப்களிலும் லான் டென்னிஸ் என்னும் பந்து விளையாட்டு விசேஷமாயும் ப்ரபலமாயு மிருக்கிறதல்லவா.? இது நல்ல தேகாப்யாஸமென்று நினைக்கிறூர்கள். இந்த விளையாட்டை யார் முதலில் கண்டு பிடித்தார்கள் என்ற விஷயம் அநேகருக்கு தெரியாது. இங்க்லண்டில் முதல் முதலாக இந்த விளையாட்டை ப்ரபலப்படுத்தினவர் நமது ராஜாவிடம் பாடிகார்டாக விருக்கும் மேஜர் வால்டர் க்ளாட்டன் விங்பீல்ட். இவருக்கு இப்பொழுது 80-வயது நடக்கிறது.

## TIBET.

திபேத்து.

திபேத்து என்னும் தேசம் இந்தியாவிற்கு வடக்கே இமயமலைக்கு அப்பால் இருக்கிறது. திபேத்து ஜனங்கள் தங்கள் தேசத்துக்கு "ப்யோ" என்று பெயரிட்டிருக்கிறூர்கள். அவர்கள் அந்த வார்த்தையை "பாட்" என்று எழுதி "ப்யோ" என்று வாசிக்கிறூர்கள். "ப்யோ" என்ற வார்த்தைக்கு கூப்பிடு என்று பொருளாம். ஹிந்துஸ்தானியில் திபேத்துக்கு "போதா" அல்லது "போத்" என்றும், திபேத்தியர்களுக்கு "போதியர்" என்றும் பெயர். ஸம்ஸ்க்ருதத்தில் திபேத்துக்கு ஹிமவத் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. திபேத்தின்மேல்பாகம் ஆதியில் துருக்கியர்களால் டோபாட் என்று பெயரிடப்பட்டிருந்தது. அந்தப் பெயர் இப்போது திபேத்து (டிபேட்) என்று இங்க்லீஷில் மருவி வழங்குகின்றதென்று தோன்றுகிறது.

## UNHATCHED CROCODILES.

முட்டையிலிருந்து வெளிவராத முதலைகள்.

முட்டையிலிருந்து வெளிவராமல் இருக்கும் முதலைக் குட்டிகள் முட்டையிலிருந்து வருமுன் ஒருவித சத்தம் செய்கின்றனவாம். முட்டை மணலில் ரொம்ப ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்தாலும் கூட இந்த சத்தம் கேட்கிறதாம். இதைக்கேட்டவுடன் அந்தக் குட்டியின் தாய் மணலைத் தோண்டி குட்டியை வெளிப்படுத்துகிறதாம்.

# The Ladies' World.

## ஸ்த்ரீகள் பகுதி.

### TO MAINTAIN GOOD APPEARANCE.

பார்வைக்கு லக்ஷணமா யிருப்பது.

ஸ்த்ரீகள் பார்வைக்கு லக்ஷணமாய்த் தோன்றுவதற்காக பலவிதத்தில் ப்ரயாஸை எடுத்துக் கொள்ளுகிறார்கள். அவைகளில் ரொம்ப முக்யமானது அவர்கள் தங்களுடைய தேகஸௌகத்தை ஸரியாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது. தேகத்திலுள்ள ரக்தம் அசுத்த மாயிருப்பதனால் முகத்தில் வேர்க்குரு, பரு முதலியவை உண்டாகி, முகம் விகாரமடைந்து வரும்போது, மூலகாரணமாகிய ரக்த அசுத்தத்தை நீக்காமல் வெளிக்கு மருந்துகளும் தைலங்களும் உபயோகிப்பது நல்லதல்ல.

ஸௌகாதாரத் தப்பாக நடந்து வருவதால் தேகமும் முகமும் விகாரமடைந்து வரும்போது; ஸௌகாதாரத்துக் கிணங்க ஆகாரம், உடை, வீடு முதலியவைகளை சீராய் வைத்துக் கொள்ளாமல் ரொம்பப் பணம் செலவழித்து வெளிக்கு உபயோகிக்க மருந்துகளையும் வாஸனை த்ரவ்யங்களையும் தைலங்களையும் உபயோகிப்பதால் யாதொரு பெரிய ப்ரயோஜனமும் உண்டாகாது. இயற்கைக்கு அனுஸரணையாக நமது வாழ்க்கையை ஒழுங்கு படுத்தினால், தானாகவே லக்ஷ்மீகரம் நம்மிடம் குடி கொள்ளும்.

தேகம் ஸ்தூலித்து பருமனாய் பார்வைக்கு விகாரமாயிருப்பதும், தேகத்தின் தோல் பார்வைக்கு அவலக்ஷணமாயிருப்பதும், முகம் ப்ரகாசமற்று லக்ஷணக் குறைவாயிருப்பதும், பெரும்பாலும் இயற்கைக்கு விரோதமாய் நடையுடை ஆகாராதிகளை அனுஸரிப்பதினால் தான் நேருகின்றன.

ஒரு ஸ்த்ரீ பார்வைக்கு லக்ஷணமாய் இருப்பதற்கும், அவளுடைய தேகம் ஸௌக்யமாயிருப்பதற்கும், அவள் அவச்யம் கவனிக்க வேண்டிய விதிகள் சில இருக்கின்றன.

ஒரு ஸ்திரீலக்ஷணமாயும் அவலக்ஷணமாயும் தோற்றுவதற்கு முக்ய காரணமாயிருப்பவை, ஆகாரம், ச்ரமபரிஹாரம், தேகாப்யாஸம், உடை, தேகசுத்தம் ஆகிய இவைகளே. தேகத்தை எப்போதும் சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும். தேகம் சுத்தமாயிருந்தால்தான் தேகத்தில் தோல் பார்வைக்கு லக்ஷணமாயிருக்க முடியும். தேகம் அழுக்காயிருந்தால் மேதாலிலுள்ள த்வாரங்கள் அடைபட்டுப்போய் தேகத்திலுள்ள அழுக்கு நீர் வெளியில் வராமல் தேகத்துக்குள்ளேயே இருக்க நேரிடுகிறது. இதனால் ரக்தம் அசுத்தமடைந்து அதற்கறிகுறியாக முகம் அவலக்ஷணமாகக்கூடும். ஆகையால் எப்போதும் தேகத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும்.

சாப்பாடு விஷயம் ரொம்ப முக்யமானது. ஆனால் இது ஒவ்வொருவருடைய தேகஸ்திதியையும் பொருத்தது. அதைப்பற்றித் திட்டமாய் ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால் தேகம் அல்லது முகம் அவலக்ஷணமாயிருக்கும் ஒவ்வொருவரும் தங்களுடைய ஆகார விஷயம் எப்படியிருக்கிறது என்பதைப்பற்றி கவனிக்க வேண்டியது ரொம்ப அவச்யம். இரண்டொரு வாரம் ஸாதாரண ஆகாரம் சாப்பிடுவதினாலேயே ரொம்ப நன்மை உண்டாவது நன்றாய்த் தெரியும். காபியும், டீயும் இப்போது ஸ்த்ரீகள் குடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இது முகத்தையும் தேகத்தையும் லக்ஷணமாய் வைத்திருப்பதற்கு ரொம்ப தடையாக இருக்கும். மிட்டாய் வகையராக்கள் மிதமின்றி

சாப்பிடுவதும், பக்ஷணபலகாராதிகள் ரொம்ப சாப்பிடுவதும் தோலின் வர்ணத்தைக் கெடுக்கக் கூடியவைகளே.

ரொம்ப பருத்திருப்பவர்கள் தங்கள் பருமனைக் குறைத்துக்கொள்ள விரும்புவதுண்டு. அதற்கு சாப்பாடு விஷயத்தில் ரொம்ப கவலை எடுத்துக்கொள்ள வேண்டும். ரொம்பசதை உண்டாக்கக்கூடிய ஆகாரத்தைக் கூடியமட்டும் குறைத்து வரவேண்டும். சர்க்கரைப் பதார்த்தம், மிட்டாய்கள், மாப்பண்டங்கள், வெண்ணெய், உருளைக்கிழங்கு, காபி, கோகோ முதலியவைகளைக் கூடியமட்டும் விலக்கிவிட வேண்டும். குளிர்ந்த ஜலம் வேண்டியமட்டும் குடிப்பது ரொம்ப நன்மையுண்டாக்கும். காலை சாப்பாட்டுக்கு ஒருமணி நேரத்துக்குமுன்னால் ஒரு டம்ளர் குளிர்ந்த ஜலம் குடிப்பது ரொம்ப நல்லது.

ஒவ்வொரு ஸ்த்ரீயும் தான் லக்ஷணமாய்க் காணப்படவேண்டுமானால், தகுந்த அளவு ச்ரம பரிஹாரம் செய்து கொள்ளவேண்டியது ரொம்ப அவச்யமாகும். எவ்வளவு நேரம் ஒருவர் தூங்கவேண்டுமென்பது அவரவருடைய தேகவாசியைப் பொருத்தது. ஸாதாரணமாய் எட்டுமணி போதுமானது. இரவில் பின் பாகத்தில் தூங்குவதைவிட முன் பாகத்தில் தூங்குவது தான் தேக ஸுகத்துக்கும் அழகு ஏற்படுவதற்கும் ஏற்றது. படுக்கும் அறை நல்ல காற்றோட்ட முள்ளதாயிருக்க வேண்டும். கொஞ்சம் அதிக காற்று இருந்தாலும் பாதகமில்லை. சுத்தமான காற்று அறையில் வந்து கொண்டிருக்க வேண்டும். அதிக நேரம் தூங்குவது கூடாது. முன் ஜாமத்தில் வெகு நேரம் விழித்திருந்து காலை நேரத்தில் வெகுநேரம் தூங்குவதும் கெடுதலானதே. மேற்சொன்ன குறிப்புகளை எல்லா ஸ்த்ரீகளும் அனுஸரித்து வருவது ரொம்பவும் நன்மை பயக்கக்கூடியது.

## EDUCATION OF INDIAN WOMEN.

### இந்திய ஸ்த்ரீகளின் கல்வி.

இந்திய ஸ்த்ரீகளுக்கு எந்த விதமான கல்வி கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி ஆனரபிள் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர் "பெண் கல்வி" ப்பத்ரிகையில் ஒரு வ்யாஸம் இங்கிலீஷில் எழுதியிருக்கிறார். அதன் மொழிபெயர்ப்பும் அதிலேயே ப்ரசுரித்திருக்கிறது. அவர் பெண்களின் கல்வியை உத்யோகத்துக்கு அநுகுணமான கல்வியென்றும் பொதுக் கல்வியென்றும் பிரிக்கிறார்.

உத்யோகம் செய்து ஸம்பாதித்து வாழப்ரிய முள்ள ஸ்த்ரீகள் எந்த விதமான கல்வி கற்கவேண்டும்? புருஷர்கள் போலவே ஸர்க்கார் உத்யோகம் செய்யவோ, அல்லது கவர்ன்மெண்டல்லாத கம்பெனி முதலிய ஸ்தாபனங்களில் உத்யோகம் செய்யவோ விரும்பும் ஸ்த்ரீகள் புருஷர்களைப் போலவே கல்வியில் தேர்ச்சி பெறவேண்டுமென்று சிலர் வாதிக்கக்கூடும். இவ்விஷயமாய் இப்படி நினைப்பது ஸரியல்ல. ஸ்த்ரீகளுக்கு ஏற்ற உத்யோகங்கள் சிலவே. முக்யமாய் உபாத்திமை, தபாலாபீஸ் உத்யோகம், வைத்யம் ஆகிய இவைகள் தான் ஸ்த்ரீகளுக்கு ஏற்ற தொழில்கள். ஆகையால் ஸ்த்ரீகளுக்கு இந்த விஷயங்களில் உயர்தரப் படிப்பைச் சொல்லிக்கொடுக்கக்கூடிய ஸத்ரீ காலேஜ் ஒன்று ஸ்தாபித்து நல்லது. இந்தக் காலேஜில் படித்துத்தேறிய ஸ்த்ரீகளுக்கு அவர்கள் இன்ன தொழிலில் விசேஷத் தேர்ச்சி பெற்றிருக்கிறார்களென்று குறித்து அவர்களுக்கு ஸர்டிபிகெட்கொடுக்கலாம். காலேஜ் அதிகாரிகள் நடத்தும் பரீக்ஷையை ஸர்வகலா ஸங்கத்தார் (யுனிவர்ஸிடி) அங்கீகரிக்கவேண்டும்.—என்று சேஷகிரி அய்யர் சொல்லுகிறார்.

பொதுக்கல்வியைப்பற்றி அவர் பின்வருமாறு அபிப்ராயப்படுகிறார். மேற்சொன்ன

உத்யோகப்படிப்பை விட நமது ஸஹோதரிகளுக்கும், புத்ரிகளுக்கும் பொதுக் கல்வி கற்பிப்பது முக்யமானது. இவர்களுக்கு அவச்யம் மதஸம்பந்தமான கல்வி போதிக்கவேண்டும். மேலும், ஸம்ஸ்க்ருதம் எழுதப்படிக்கத் தெரிந்திருப்பது அவச்யம். தேச பாஷைகளிலும் ஆழ்ந்தபடிப்பு இன்றியமையாதது. இங்க்லீஷ் கற்றுக்கொடுக்கவேண்டியது அவச்யந்தான். இருந்தாலும் முன் கூறியுள்ளவை போல இது அவ்வளவு முக்யமில்லை. ஸுகாதாரம், சித்ரம் எழுதல், தையல்வேலை, ஸங்கிதம் இவைகளையும் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும். ஸமயோசிதமாய் இரண்டொன்றைக் கட்டாயமாய்ச் சொல்லிவைக்கவேண்டும். பாக்கியுள்ளதை ஸௌகர்யமும் ப்ரியமும் இருந்தால் சொல்லிவைக்கலாம். முக்யமாய் ஸ்த்ரீகள் நம்முடைய மதங்களிலுள்ள முக்ய அம்சங்களை அறிந்து கொள்ளவும், குடும்ப ஸம்ரக்ஷணை, குழந்தைகளை வளர்த்தல் ஆகிய இவைகளை நன்றாயறியவும், புருஷர்களுடைய ஸுகதுக்கங்களையும், லாப நஷ்டங்களையு மறிந்து ஸமயத்துக் கேற்றவிதமாய் அவர்களுக்குத் தகுந்ததுணைவிகளாய் இருக்கப்பழக்கமும் செய்வதே இப்படிப்பின் லட்சியமாயிருக்கவேண்டும்.

## THE SEVA SADAN SOCIETY.

### பூனா ஸேவ ஸாதன் ஸங்கம்.

ஸேவஸாதன் ஸங்கத்தின் பூனா ப்ராஞ்சில் உள்ளவர்கள் பெண்கல்வி விஷயமாய் ரொம்பப் பாடுபட்டு வருகிறார்கள்.

ஸ்த்ரீகளுக்கு ஸாதாரண கல்வியோடு கைத்தொழில் கல்வியும் கற்றுக்கொடுக்கிறார்களாம். இன்னம் ஸுகாதார ஸம்பந்தமான விஷயங்கள், காயமடைந்த அல்லது வேறு விதத்தால் தேகத்துக்கு அபாயமடைந்தவர்களுக்கு வைத்யர்களைத் தருவிக்குமுன் செய்யவேண்டி சிகித்ஸைகள், குழந்தை வளர்த்தல் முதலிய பல ஜனோபகார விஷயங்களையும் ஸ்த்ரீகளுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். பெண்களுக்குக் கல்யாணமாகி அவர்கள் பள்ளிக்கூடத்துக்குப் போய் வாசிக்க முடியாமல் போனால், அவர்களுக்கு வீட்டில் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பால்யத்தில் கொஞ்சங்கூட படிக்காத ஸ்த்ரீகளும் இந்த ஏற்பாட்டால் படிக்க ஆரம்பிப்பது ஸாத்யமாகிறது. பெண் பள்ளிக்கூடங்களுக்குப் போக முடியாமலும், வீட்டில் தங்கிப்படிக்கமுடியாமலும், இருக்கிறவர்களுக்கே இப்படி வீட்டுப்படிப்பு ஏற்பாடு நடந்து வருகிறபடியால், ஏற்கனவேயுள்ள பெண்பாடசாலைகளுக்கும் இந்த ஸங்கத்தின் ஏற்பாட்டிற்கும் போட்டியில்லாமல் இருக்கிறது. நமது தமிழ் நாட்டிலும் பள்ளிக்கூடம்போக முடியாத ஸ்த்ரீகளுக்குப்படிப்பு சொல்லிக்கொடுக்கும் முறை ஏற்பட்டால் ரொம்ப நன்மையுண்டாகும்.

## MARRIAGEABLE AGE AMONG PARSIS.

### பார்ஸி ஜாதியில் கல்யாண வயஸு.

பார்ஸி பத்ரிகைகளில் குடும்ப விஷயங்கள் ப்ரசுரம் செய்யும் பாகங்களில் அந்தந்தக் காலங்களில் நடைபெறும் கல்யாணங்களைப்பற்றிய ஸமாசாரங்களை வெளியிடுவதுண்டு. அப்படி வெளிவருவதை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஆராய்ச்சிசெய்து பார்த்ததில் அவர்களுக்குள் பால்ய விவாகமே கிடையாதென்று தெரிய வருகிறது. ஸமீபத்தில் ஸெப்டம்பர் மாஸத்துக்கடைசி வாரத்திலும் அக்டோபர்மாஸத்து முதல் வாரத்திலுமாக இரண்டு வாரத்தில் 14-கல்யாணங்கள் நடந்தன. அவைகளில் முப்பத்தொன்று வயதுள்ள ஒரு பெண் 45-வயதுள்ள வரனையும், 37-வயதுள்ள ஒரு பெண் 44-வயதுள்ள வரனையும் கல்யாணம் செய்து கொண்டார்கள். ஸாதாரணமாய் பெண்களுக்குள் கல்யாண வயஸு 20-முதல் 29-வரையிலுமாக இருந்தது. ஆண்களில்

கல்யாண வயஸு 31-முதல் 38-வரையினுமா யிருந்தது. ரொம்பக்குறைந்த வயஸு பெண் களில் 17.

சில கல்யாணப் பெண்கள் கல்யாண காலத் தில் விநோதமாய் நடந்து கொள்ளுகிறார்களாம். ஒரு பெண் தனது கையை மாப்பிள்ளை பிடித் துக்கொள்வதற்கு ஸம்மதிக்க வில்லையாம். ஏனென்றால் அவள் தனது ஹ்ருதயத்தையே தனது புருஷனுக்கு அர்ப்பணம் செய்திருக் கும்போது கையைப் பிடித்துக்கொள்வதென் பது ஒரு கேலிக்கிடமான கார்யமென்று சொன்னாளாம்.

## BRINGING UP CHILDREN.

குழந்தைகளை வளர்த்தல்.

1. குழந்தைகளிடம் ஸதா குற்றம் கண்டு பிடித்துக்கொண்டிருப்பது ஸரியன்று.

2. குழந்தைகள் ஏதாவது விஷமம் செய் தால் பெற்றோர்கள் முகத்தைச் சுளிப்பதும், கோபிப்பதும், திட்டுவதும் அதட்டுவதும் கூடாது.

3. நல்ல விஷயங்களைப் பற்றியும், ச்ரேஷ்ட மான குணங்களைப் பற்றியும், குழந்தைகள் முன் ச்லாகித்துப் பேசவேண்டும். இப்படிச் செய்வதால் நாளடைவில் நல்ல குணங்கள் அவர்களுக்குப் பிடிபடும். முக்யமாய் ஜீவ காருண்யம், அன்பு, நன்றியறிவு, தயை, முத லிய குணங்களைப்பற்றி அடிக்கடி சொல்ல வேண்டும்.

4. குழந்தைகளிடம் அவர்களுக்கு திகில் உண்டாகும்படியான விஷயங்களைச் சொல்லக் கூடாது. பேய் பிசாசுகளைப் பற்றியும், அஸுரர், ராக்ஷஸர்களைப்பற்றியும், வ்யாதியி னால்படும் அவஸ்தைகளைப்பற்றியும், சொல்லக் கூடாது.

5. குழந்தைகள் ஏதாவது விஷயங்களைப் பற்றிக்கேட்டால் அவைகளை அவஸரப்படா மலும், மனவில் நன்றாய்ப் பதியும்படியாயும் சொல்லவேண்டும்.

6. குழந்தைகளை ஸதாகாலம் புஸ்தகத்தை ப்படித்துக்கொண்டிருக்கும்படி கட்டாயப் படு த்தாமல் அவர்களை பல இடங்களுக்கு அழைத் துப்போய் வேடிக்கையாயே விஷயங்களை சொல்லிக் கொடுக்கவேண்டும்.

## WHAT AM I?

எனது நிலைமை என்ன?

வருமானவரி செலுத்துவதற்காக ஒரு ஸ்த்ரீ அதற்கென்று ஏற்பட்ட ஒரு பாரத்தில் எழு தும்போது அதில் ஒரு குறிப்பு எழுதப்பட்டி ருந்ததைக் கண்டாள்.

“ஒரு ஸ்த்ரீ தனது கையெழுத்திற்கு அடுத் தாற்போல், கல்யாணமாகாத கன்னியா, வித வையா, கல்யாணமானவளா என்பதைக் குறிப்பிடவேண்டும்” என்று கண்டிருந்தது. இதைக்கண்டவுடன் அவள், தனது நிலைமை யென்னவென்று ஆலோசித்தாள். அவள் கன்னிகையல்ல, விதவையுமல்ல; கல்யாணமா காதவளுமல்ல. அவள் தனது கணவனை கோர்ட்டு மூலமாய்த் தள்ளிவைத்திருந்தாள். தன் கையெழுத்திற்குப் பிறகு என்ன எழுதுகிறது?

## THE QUEEN OF HOLLAND.

ஹாலண்ட் தேசத்து ராணி.

ஹாலண்ட் தேசத்து ராணி விவஸாய விஷ யத்தில் ரொம்ப ஊக்கங் கொண்டவராம். லூ என்னுமிடத்திலுள்ள அரண்மனையில் அவ ருக்கு சொந்தமாக ஒரு பால் தயிர்ச்சாலை இருக்கிறது. அது வ்யாபார முறையில் நடத் தப்பட்டு வருகிறது. அந்தச் சாலையிலிருந்து தினந்தோறும் பாலும், வெண்ணெயும் வெளி யில் அனுப்பி விற்றுவருகிறார். அது தன் செலவைக் கட்டிக்கொள்வதோடு லாபமும் தருகிறதாம்.

# Story and Biography.

## கதையும் ஜீவ்ய சரித்ரமும்.

### MOHANDAS K. GHANDHI

### மோசனதாஸ் காந்தி.

(604-ம் பக்கத் தொடர்ச்சி)

நேட்டாலிலுள்ள உத்யோகஸ்தர்கள் மிஸ்டர் காந்தியினிடம் அதிக வெறுப்புக் காட்டாமலிருந்ததால் மிஸ்டர் சேம்பர் லெயினிடம் டெபுட்டேஷன் போவது ஸுலபமாய் முடிந்தது. ஆயினும் காந்தி ட்ரான்ஸ்வாலுக்குப்போய் அங்குள்ள இந்தியர்களின் குறைகளை எடுத்துச் சொல்ல டெபுட்டேஷன் போக ப்ரயத்தனப்படுகையில், அங்குள்ள உத்யோகஸ்தர்கள் மிஸ்டர் காந்தியிடம் ரொம்ப க்ஷாத்ரம் காட்டிவந்தார்கள். டெபுட்டேஷன் விஷயமாக அப்போது ட்ரான்ஸ்வால் கவர்ன்மெண்டுக்கு கலோனியல் ஸெக்ரெடரியாக இருந்தவரைப் பார்ப்பது பகிரத ப்ரயத்தனமாக முடிந்தது. அவர் அஸிஸ்டெண்ட் ஸெக்ரெடரியைக் கண்டு பேசிக்கொள்ளும்படி சொல்லி விட்டார். அஸிஸ்டெண்ட் ஸெக்ரெடரியோ, அங்குள்ள இந்தியர்களை வரவழைத்து, மிஸ்டர்காந்தியை தங்களுக்குத்தலைவராக வைத்துக்கொண்டதற்காக அவர்களைக் கோபித்து, அவர்களுடைய க்ஷேமத்தைப் பற்றி கவனிக்கத்தாமிருக்கும்போது காந்தியிடம் முறையிட்டுக்கொண்டது தவறென்று கண்டித்து, காந்தி அவ்விடத்துக்கு வந்திருக்க வேண்டியதே அவசியமில்லை யென்றும், அவருக்கு அவ்விடத்தில் யாதொரு வேலையும் இல்லையென்றும், இந்தியர்கள் தம்மையே எதற்கும் ஆலோசனை கேட்கவேண்டுமென்றும், "உம்மைப் பார்க்கவும் எனக்கு இஷ்டமில்லை; இவ்விஷயங்களைப்பற்றி உம்மிடம் கலந்து பேசவும் எனக்கு விருப்பம் இல்லை" யென்றும் சொல்லி காந்தியை யனுப்பி விட்டார். அப்போது மிஸ்டர் காந்தியின் மனம் எப்படி யிருக்கும் என்பதை நாம் ஒருவாறு ஊஹித்து அறிந்து கொள்ளவேண்டும். இந்தியர்களோ மிஸ்டர் காந்தியே தங்களுக்குத் தலைவராக இருக்கவேண்டும் என்று விரும்பியிருந்தார்கள். மிஸ்டர் காந்தியோ தாம் தலைவராகக் காட்டிக்கொண்டால் இந்தியர்களுடைய கார்யங்கள் பலிதமாக ஆகா என்பதை யறிந்திருந்தார். பல விதத்தில் இந்தியர்களுக்கு ஸமாதானம் சொல்லி, தாம் ஒரு மெம்பராகச் சேராமலே வேறு சில ப்ரமுகர்களைச் சேர்த்து ஒரு டெபுட்டேஷன் போகும்படி ஏற்பாடு செய்தார்.

மிஸ்டர் காந்தி ட்ரான்ஸ்வால் இந்தியர்களின் நிலைமை ரொம்ப கேவலமாயிருப்பதையும், தாம் இல்லாவிட்டால் அவர்களைப்பற்றி கவனிக்க ஒருவரும் இல்லாமல் அவர்கள் இன்னம் கஷ்டப்படவேண்டி யிருக்கும் என்பதையும் உத்தேசித்து, இந்தியர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அவ்விடத்திலேயே வஸிக்கத் தீர்மானித்து, ட்ரான்ஸ்வால் ஸுப்ரீம் கோர்ட்டில் ஒரு அட்டார்னியாகச் சேர்ந்து உத்யோகம் செய்து வந்தார். 1903-ம் வருஷத்தில் மற்ற ஜனத்தலைவர்களுடன் சேர்ந்து ட்ரான்ஸ்வால் ப்ரிட்டிஷ் இண்டியன் அஸோஸியேஷன் என்று ஒரு ஸங்கம் ஸ்தாபித்தார்.

ட்ரான்ஸ்வாலிலுள்ள வெள்ளைக்கார உத்யோகஸ்தர்கள்வெகுவாய் இந்தியர்களுடையஸுகாதார விஷயங்களைப்பற்றி கவனிப்பதில்லை. இந்தியர்களே அங்கே யிருக்கக்கூடாதென்னும்போது அவர்களுடைய ஸுகாதாரம் ச்ரத்தையுடன் கவனிக்கக்கூடிய விஷயமாகுமா?

1904-ம் வருஷம் ஜோகன்னஸ்பர்க்கில் இந்தியர்கள் வசிக்கும் பிரிவில் முனிஸிபாலிட்டியார் ஸுகாதார விஷயங்களை முற்றிலும் கவனிக்காமலிருந்துவிட்டதால் அவ்விடத்தில் ப்ளேக் நோய் உண்டாயிற்று. இது வருமுன் அங்குள்ளவர்கள் முனிஸிபாலிட்டிக்கு அடிக்கடி மனுக்கள் போட்டுப்பார்த்தார்கள். முனிஸிபாலிட்டியார் அவைகளைப்பற்றி கவனிக்கவேயில்லை. கடைசியில் மிஸ்டர் காந்தி ப்ளேக் நோய் பரவத்தொடங்கி விட்டதென்றும், அதைப்பற்றி முனிஸிபாலிடி வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டுமென்றும் முனிஸிபாலிட்டிக்குத் தெரிவித்தார். முனிஸிபாலிட்டியார்களோ ப்ளேக் நோயே கிடையாதென்று சொல்லி விட்டார்கள். மிஸ்டர் காந்தியோ முனிஸிபல் உதவிக்காகக் காத்திராமல் வ்யாதியஸ்தர்களுக்கு வைத்யம் செய்ய ஒரு ப்ரைவேட் ஹாஸ்பிடல் ஸ்தாபித்து ப்ளேக் நோயோடு போராடி வந்தார். பிறகு முனிஸிபாலிட்டியார் உதவிக்கு வந்து மிஸ்டர் காந்தியின் வேலையைப்பற்றிப் புகழ்ந்தும் பேசினார்கள்.

மிஸ்டர் காந்தி இந்தியர்கள் ஒருவர்க்கொருவர் ரொம்ப நெருங்கிப்பழகி அவர்களுக்கு ஜனஸமூக ஸம்பந்தமாகவும், ராஜரீக ஸம்பந்தமாகவும், அறிவு அதிகரிக்கவேண்டுமென்றும் எண்ணி, அதற்காக "இந்தியன் ஒபினியன்" என்று ஒரு வாரப்பத்ரிகையை ஸ்தாபித்தார். அதுமுதலில் இங்க்லீஷ், தமிழ், குஜராதி, ஹிந்தி ஆகிய நான்கு பாஷைகளிலும் ப்ரசுரிக்கப்பட்டு வந்தது. ஆயினும் சில காரணங்களால் ஹிந்தியையும் தமிழையும் நிறுத்திவிடவேண்டியதாயிற்று.

இன்னும் டர்பனுக்குப் பக்கத்தில் 12-மைல் தூரத்தில் 100-ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு பூமியை மிஸ்டர் காந்தி தமது ஸொந்தச்செலவில் வாங்கி, அதில் இங்க்லீஷ்காரர்களையும் இந்தியர்களையும் குடியேறும்படி செய்து, பத்ரிகை ஆபீஸை அவ்விடத்துக்கு மாற்றி அங்குள்ள ஜனங்களிடத்தில் ரொம்ப ஒற்றுமை ஏற்படும்படி செய்தார்.

1906-ம் வருஷம் தென்னாப்ரிக்காவில் பூர்வீக ஜனங்களாகிய ஸுலு ஜாதியார் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். அந்தக் கலகத்தில் காயமடைந்தவர்களுக்கு உதவி செய்வதற்காக காந்தி ஒரு வைத்யக்கூட்டம் ஏற்பாடு செய்தார். அப்போதும் அந்த வைத்ய உதவியை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ள முதலில் பின்வாங்கினர். ஒரு மாஸகாலம் மிஸ்டர் காந்தியும் மற்ற இந்தியர்களும் அந்தக் கலகத்தில் காயமடைந்தவர்களுக்கு ரொம்பவும் உதவி செய்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்வளவு தூரம் உதவிசெய்வதற்கெல்லாம் இந்தியர்கள் அடையும் ப்ரதிப் ப்ரயோஜனம் என்ன? ட்ரான்ஸ்வாலில் இந்தியர்கள் ட்ராம் வேக்களில் ஏறக்கூடாது. ட்ரெய்ன்களிலும் இவர்கள் வெள்ளைக்காரர்கள் ஏறும் வண்டிகளில் ஏறக்கூடாது. ஜெயில்களிலோ இவர்கள் படும் துன்பம் சொல்லி முடியாது. நாகரீக மற்ற ஜாதியார்களிலும் கேடாக இவர்களை நடத்திவருகிறார்கள்.

ஸுலு கலகம் முடிந்து காந்தி தமது ஊருக்குத்திரும்பி வந்ததும் இந்தியர்களை ஒரே அடியாய் நசுக்கிவிட தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் செய்யப்போவதாகத் தெரிய வந்தது. ஏஷியாடிக் லா அமெண்ட்மெண்ட் ஆர்டினென்ஸ் என்று ஒரு மசோதாவை அப்போது தான் கவர்ன்மெண்டார் ப்ரசுரம் செய்தார்கள். இந்த மசோதா சட்டமாகிவிட்டால், இந்தியர்களுக்கு ரொம்பவும் கஷ்டமென்பதை காந்தி யறிந்து, அந்தச்சட்டத்தை எதிர்ப்பதற்காக மற்ற இந்தியத் தலைவர்களோடு வேண்டிய ஏற்பாடு செய்தார்.

தாமும் மிஸ்டர் அலியுமாக இங்கலண்டுக்குச்சென்று, அங்கே ப்ரிட்டிஷாரிடம் இந்தி

யர்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லி, தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டார் பாஸ் செய்த ஏஷ்யாடிக் சட்டத்துக்கு அரசர் ஸம்மதங் கொடுக்கக்கூடாதென்று மன்றாடினர். இவ்வளவு பாடுபட்டதன்பேரில் தென்னாப்ரிக்காவில் புது கவர்ன்மெண்ட் ஏற்படும் வரையில் அந்தச்சட்டத்துக்கு அரசர் ஸம்மதம் ஏற்படாமல் தாமஸமாயிற்று. ஆயினும் தென்னாப்ரிக்காவில் சீக்ரம் புது யூனியன் கவர்ன்மெண்ட் ஸ்தாபிக்கப்பட்டுப்போகவே, தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டார் நிறுத்தப்பட்டுப்போன சட்டத்தை ரொம்ப அவஸரமாக பாஸ் செய்து அரசர் ஸம்மதத்தையும் பெற்றுக்கொண்டார்கள். அதன் மேல் தான் "பாஸிவ் ரெஸிஸ்டென்ஸ்" என்று சொல்லப்படும் "எதிர்க்காமல் எதிர்க்கும்" உபாயம் ஆரம்பமாயிற்று. அது 1907-ம் வருஷம் ஜூலைமாஸம் ஏற்படலாயிற்று. இந்தியர்களோடு 1000 சீனர்களும் இந்த ஆசியவாஸி விலக்குச் சட்டத்தை எதிர்ப்பதற்காகச்சேர்ந்து கொண்டார்கள். ட்ரான்ஸ்வால் கோர்ட்டில் அட்டர்னியாகவுள்ள மிஸ்டர் போலக் இவர்களுக்கு ரொம்பவும் உதவியாக நாளது வரையில் இருந்து வருகிறார். மிஸ்டர் காந்தியை கைது செய்து ஜயிலுக்கு அனுப்பிவிட்டார்கள். அவரைப்போல் இன்னம் பல இந்தியர்களுக்கும் ஜெயில் வாஸம் கிடைத்தது. கவர்ன்மெண்டார் இந்தியர்களை ஜெயிலில் ரொம்பவும் வருத்தினார்கள். ஆனாலும் இந்தியர்கள் ஒரே பிடிவாதமாக இருந்ததால் கவர்ன்மெண்டார் இந்த விஷயத்தை ஒரு விதமாய்த் தீர்த்துவிட எண்ணி, இந்தியத்தலைவர்களோடு ஸமாதானப் பேச்சுகள் பேச ஆரம்பித்தார்கள். ஆக்ஷேபிக்கப்பட்ட சட்டத்தை எடுத்து விடுவதாகவும், இந்தியர்கள் தாங்களே மனமொப்பி இப்போது தங்களை ரெஜிஸ்டெர் செய்து கொள்ளுகிறதென்றும் தீர்மானமாயிற்று. ஆயினும் கவர்ன்மெண்ட் பக்கம் பேசின ஜெனரல் ஸ்மட்ஸ் கொஞ்சகாலத்துக்குப் பின்னால் தாம் சட்டத்தை நிறுத்துவதாக வாக்களிக்கவில்லையென்று மறுத்துச் சொல்லவே, மிஸ்டர் காந்தியும் மற்ற தலைவர்களும் ஒரே மனஸாய் 'எதிர்க்காமல் எதிர்க்கும்' உபாயத்தை மறுபடியும்தொடங்கி நாளது வரையில் கையாடி வருகிறார்கள்.

மிஸ்டர் காந்தி பொதுஜன ஸமூகத்துக்குத் தாம் செய்யவேண்டிய கடமையைச் செய்கையில் தமது ஸொந்த கார்யங்கள் குறுக்கிட்டால் அவைகளை ஒரு பொருட்டா யெண்ணுவதே கிடையாது. 1907-ம் வருஷம் முதல் முதலில் அவரை கவர்ன்மெண்டார் கைதுசெய்வதற்கு முன் தமது கடைசிக் குழந்தை சாகக் கிடந்ததென்று தந்தி ஸமாசாரம் கிடைத்தும் தமது குழந்தையின் க்ஷேமத்தை கடவுள் கவனித்துக்கொள்வார் என்று சொல்லி, சட்டத்தை எதிர்ப்பதாகிய பொதுக்கார்யத்தில் பாடுபட்டுக்கொண்டிருந்தார்.

இரண்டாந் தடவை அவர் கைது செய்யப்பட்டபோது தமது மனைவி வ்யாதியால் கஷ்டப்படுகிறதாகத் தந்திவந்து மாஜிஸ்ட்ரேட் கூட அபராதத்தைச் செலுத்திவிட்டால் தமது மனைவியைப் பார்க்கப் போகலாமே என்று சொல்லியும் சட்டத்தை எதிர்ப்பதே தமது கடமை என்று எண்ணி ஜெயிலுக்குப் போனார். மிஸ்டர் காந்தி சென்ற ஆறு வருஷமாக இந்தியர்களுக்கு ஒரு நற்கதி பிறக்க வேண்டுமென்று பாடுபட்டு வருகிறார். தமது தேக ச்ரமத்தையும் ஸௌகக் குறைவையும் பாராட்டாமல் உழைத்து வருகிறார். சென்ற சில மாஸமாக தென்னாப்ரிக்காப் போராட்டம் வெகு கடுமையாக நடந்து வருகிறது.

இந்தியர்களின் க்ஷேமத்துக்காகப் பாடுபட்டு இந்தியர்களின் கௌரவதையைக் காப்பாற்றும் பொருட்டு உன்னத நிலைமையையும்,

ஸுகத்தையும், செல்வத்தையும் த்யாகம் செய்து பிறருக்காகக் கஷ்டப்படுதலே தமது கடமை என்று கருதி உழைத்து வருபவரா கிய ஸ்ரீமான் மோஹனதாஸ் காந்தியின் பெயர் இந்து தேச சரித்ரத்திலும், தென்னுப்ரிக்கா இந்தியப் போராட்டச்சரித்ரத்திலும் மேன்மை பெற்று விளங்கி நிற்கும் என்பதில் யாதொரு ஸந்தேகமும் இல்லை.

## THE FOOLISH KING.

### மூட அரசன்.

சில நூற்றுண்டுகளுக்கு முன்னுல் ஒரு நகரத்தில் ஒரு சிற்றரசன் அரசாட்சி புரிந்து வந்தான். அவன் மகா முட்டாளாயிருந்ததோடு வெகு கோபிஷ்டனுகவும் இருந்தான். ஆயினும் அவனுடைய மந்த்ரி மிகவும் கெட்டிக்காரனுக இருந்ததால் அவனுடைய ராஜாங்க கார்யங்கள் நன்றுகவே நடந்து வந்தன. அந்த அரசன் செய்த ஒரு முட்டாள் தனமான கார்யத்தை இங்கு கூறுகிறோம். ஒரு நாள் அரசன் சாப்பிட்டுக்கொண்டிருந்த போது சாதத்தில் ஒரு மயிர் இருந்தது. அரசனுக்கு எப்போதும் முன் கோபமாகையால் ராணியை மிகவும் கோபித்துக்கொண்டு அடுத்த தடவை இப்படி சாதத்தில் மயிர் இருக்குமானுல் அவளுடைய தலையைச் சிறைத்து விடுவதாகச் சொன்னுன்.

சிலநாள்கள் சென்ற பிறகு ஒரு நாள் ராஜா சாப்பிட்டுக்கொண்டிருந்த போது மறுபடியும் சாதத்தில் ஒரு ரோமம் இருந்தது. அதைக் கண்டதும் அரசனுக்கு மிகவும் கோபம் உண்டாயிற்று. உடனே அவளைப்பார்த்து "முன்னமேயே சொன்னேனே, ஏன் அஜாக்ரதையாக இருந்தாய்? இப்போது உனக்குத் தகுந்தபடி வழி வைக்கிறேன். சமையல் செய்யும் போது தலை மயிரை ஆற்றுவானேன். முன்பு நான் சொன்ன புத்திமதி மறந்து போயிற்று?" என்று அவளைக் கண்டித்து உடனே தனது மந்த்ரியைக் கூப்பிட்டு "மந்த்ரீ, எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. நாலு நாள் முன்பு தான் இப்படி சாதத்தில் மயிரிருந்ததைக்கண்டு கண்டித்தேன். அதையெல்லாம மறந்து விட்டு சமையல் செய்யும்போது தலைமயிரை அவிழ்த்துப்போட்டுக்கொண்டு இருந்திருக்கிறுள். தலைமயிரிருந்தால் தானே இந்த சங்கடம். அவளுடைய தலைமயிரை இப்பொழுதே வாங்கிவிடவேண்டும். தெரிந்ததா? மந்த்ரீ, தாமஸிக்கவேண்டாம்" என்று சொன்னுன்.

மந்த்ரீ அரசனுடைய முட்டாள் தனமான உத்தரவைக் கேட்டுக்கொண்டு வெளியில் போய் ப்ரதானி முதலியவர்களுடன் இந்த உத்தரவுக்கு என்ன செய்வது என்று யோசித்துக்கடைசியில் அரசனுக்குத் தக்க புத்தி வரும்படிக்குச் செய்ய வேண்டுமென்று ஒரு சூழ்ச்சி செய்தார்.

ஒரு பாடை, சட்டி, பச்சைக்கீற்று முதலிய வைகளைக் கொண்டுவந்து அரண்மனை வாயிலில் வைத்து சில ப்ராமணர்களையும் அழைத்து வந்து ஆங்கிருக்கச்சொல்லிவிட்டு மந்த்ரி ப்ரதானி முதலானவர்கள் அரசனிடம் போனுர்கள்.

அரசன்:—என்ன, ஆயிற்று? நான் கொடுத்த உத்தரவு நிறைவேறிற்று?

மந்த்ரீ:—எல்லாம் தயாராக இருக்கின்றன. தாங்கள் வந்தவுடன் கார்யம் ஆரம்பிக்க வேண்டும்.

அரசன்:—நான் எதற்காக? நீங்களே போதாதா?

மந்த்ரீ:—நீங்கள் வராவிட்டால் அந்தக் கார்யம் ஆவது கடினம்.

அரசர் வர ஸம்மதப்பட்டு வெளியில் வந்தார். அங்கு பாடையும் பச்சைக் கீற்றுமாயிருக்கக்கண்டு "இதெல்லாம் எதற்காக?" என்று கேட்டார். "எல்லாம் தங்களுக்காகத்தான்" என்றுர் மந்த்ரீ. "நீ சொல்லுவது விளங்கவில்லையே?" "நீங்கள் சொன்ன உத்தரவைப்பற்றி ப்ராமணர்களிடம் சொன்னேன். புருஷனிருக்கும் ஸ்த்ரீக்குத்தலை மயிர் வாங்கலாகாது என்று சாஸ்த்ர மிருப்பதாகச்சொன்னுர்கள். ராஜ ஆக்ஞை நிறைவேறியாக வேண்டுமே என்றேன். அதன் மேல் அவர்கள் இது விஷயமாய் வெகு நேரம் யோசித்துக்கடைசியில் தங்களை இந்தப் பாடையிலேற்றிக்கொண்டு போய் ஸ்மசானத்தில் எரித்து விட்டால் பிறகு தங்கள் மனைவி விதவையாய் விடுவாராதலால் தலை மயிரை வாங்குவது ஸுலபமாகும் என்றுர்கள். அதன் மேல் அப்படியே செய்திருக்கிறேன். தாங்கள் தயவு பாடையில் ஏறிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்." அரசர் இதைக்கேட்டதும் தாம் சொன்னது தவறு என்பதை யறிந்து கொண்டு தமது உத்தரவை ரத்துசெய்து விட்டதாகச் சொன்னுர்.

# Departmental Notes.

## பகுதிக்குறிப்புகள்.

## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### SMUGGLING MEN.

மனிதர்களைத் திருட்டுத்தனமாய் கொண்டு போவது.

போர்த்துகல் தேசம் கொஞ்ச காலத்துக்கு முன்னால் வரையில் ஒரு ராஜாவால் ஆளப்பட்டு வந்தது. ஸமீபத்தில் அது குடியரசு நாடாயிற்று. ராஜாவைச் சேர்ந்தவர்கள் குடியரசை ஒழித்துவிட்டு ராஜாவின் ஆட்சியை ஸ்தாபிக்க பல ஸமயங்களில் முயன்று வந்திருக்கிறார்கள். ராஜாங்க கட்சியைச் சேர்ந்தவர்களை அந்த தேசத்திற்குள் விடாமல் பார்த்துக்கொள்ளும்படி குடியரசு க்வர்ன்மெண்டார் வேண்டிய பந்தோபஸ்துகள் செய்திருக்கிறார்கள். அந்த தேசத்துக்கும் ஸ்பெய்ன் தேசத்துக்கும் போகும் ரஸ்தாக்களில் எல்லை ப்ரதேசத்தில் ராஜாங்கக் கட்சியார் வராதபடி புர்த்துக்கொள்ள போலீஸ் உத்யோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸமீபத்தில் இந்த போலீஸ் ஸ்டேஷன் வழியாக ஒரு வைக்கோல் வண்டி ஸ்பெய்ன் தேசத்துப் பக்கத்திலிருந்து போர்த்துகல் தேசத்துப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்த போது ஒரு உத்யோகஸ்தர் அந்த வண்டியை நிறுத்தி தமது மனஸுக்கு த்ருப்தி உண்டாவதற்காக தமது கத்தியால் பலதடவைகள் வைக்கோல் கட்டில் குத்தினார். பிறகு வண்டியை விடச் சொன்னார். ஒரு நிமிஷ நேரத்துக்கெல்லாம் வைக்கோல் கட்டிலிருந்து ரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. உடனே வண்டியை நிறுத்தச் சொல்ல வண்டிக்காரன் தப்பி ஓடிவிட்டான். வைக்கோல் கட்டை அவிழ்த்துப் பார்க்கையில் ராஜாங்கக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் வைக்கோலுக்குள் செத்துக்கிடந்தார். உத்யோகஸ்தருடைய கத்தி அவருடைய ஹ்ருதயத்தில் பாய்ந்து அவரைக் கொன்று விட்டது.

### FOOD AND WORK.

ஆகாரமும் வேலையும்

ஒரு நாள் ஜயில் வார்டர் கைதிகளை யெல்லாம் பார்த்து வேலை கொடுத்து வருகையில், ஒரு அறையில் நுழைந்தான். அதிலிருந்த கைதி இவனைக் கண்டதும் சாப்பிடாமல் வைத்திருந்த ரொட்டியை ஒளித்துக் கொண்டான். அதை வார்டர் வாங்கி, பக்ஷிகள் தின்னட்டும் என்று ஜன்னல் வழியாய் எறிந்துவிட்டு கயிறு திரிக்க நாரைக் கொடுத்துவிட்டுப் போனான். மறுபடியும் க்ரமப்படி வேலை முடிந்ததை யெல்லாம் வாங்கிச் செல்ல வார்டர் இக்கைதி யறைக்கு வந்த பொழுது, கைதி தூங்கிக்கொண்டிருந்தான். அவனை எழுப்பி வேலையைப்பற்றி விசாரிக்க, அவன் "நல்லதையா! நீர் என் ரொட்டியை ஜன்னல் வழியாய் எறிந்து விட்டீர். நானும் அப்படியே நீர் கொடுத்த நாரை எறிந்துவிட்டேன். ரொட்டியைத்தின்ற பக்ஷிகள் வேலையும் செய்யுமல்லவா?" என்று கேட்டான்.

### THE REASON FOR FAILURE.

தவறுவதற்குக் காரணம்.

ஒரு ப்ரொபெஸர், வகுப்பில் ப்ரஸங்கம் செய்யும்போது "சில முட்டாள்கள் சில கேள்விகள் கேட்டுவிடுகிறார்கள். ரொம்ப அறிவாளிகளுக்கும் பதில் சொல்லமுடியாமல் போகிறது" என்றார். அதற்கு ஒரு பையன், "ஸரிதான். அதனால்தான் எங்களில் அநேகர் பரீக்ஷையில் தேறாமல் தவறி விடுகிறார்கள்" என்றான்.

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### A MOONLESS MONTH.
சந்த்ரனில்லாத மாஸம்.

1866-ம் வருஷம் பிப்ரவரி மாஸத்தில் பௌர்ணிமை திதி வரவில்லையாம். அதற்குமுந்தின ஜனவரி மாஸத்திலும், அடுத்த மார்ச்சு மாஸத்திலும் ஒவ்வொன்றிலும் இரண்டு பௌர்ணிமை திதிகள் இருந்தன. லோகம் ச்ருஷ்டிக்கப்பட்டது முதல் இதுவரையில் இந்தமாதிரி இங்க்லீஷ் மாஸங்களில் ஒன்றிலாவது பௌர்ணிமை திதி வராமலிருந்ததில்லையாம். இன்னம் 25,00,000, வருஷம் வரையில் அப்படி நேரிடாதென்று வானசாஸ்த்ரிகள் கணக்கிட்டிருக்கிறார்களாம்!.

### CENTENARIANS
நூறுவயஸுள்ளவர்கள்.

பல்கேரியாவில் 3883, ருமேனியாவில் 1074, ஸெர்வியாவில் 573, ஸ்பெய்னில் 410, ப்ரான்ஸில் 213, இட்டலியில் 146, இங்க்லண்டிலும் ஸ்காட்லண்டிலும் 92, ரஷ்யாவில் 89, ஜர்மனியில் 76, நார்வேயில் 23, ஸ்வீடனில் 10, பெல்ஜியத்தில் 5, டென்மார்க்கில் 2 பேர் நூறு வயதுடையவராக இருக்கிறார்களென்று கணக்குகளால் தெரிகிறது.

### THE AFTERMATH OF WAR.
யுத்தத்திற்குப் பிறகு நேரிடும் கெடுதிகள்.

யுத்தம் நடந்த பிறகும் யுத்தத்தின்சேஷம் எவ்வளவுமட்டும் விடாமல் இருந்து வருகிறதென்பதை ஸமீபத்தில் ஒரு ஜர்மன் பத்ரிகையில் ப்ரசுரிக்கப்பட்டடு பின்வரும் விளம்பரத்தால் ஒருவாறு அறிந்து கொள்ளலாம். "தற்போது யுத்தம் செய்து கொண்டிருக்கும் ஒரு தேசத்து கவர்ன்மெண்டுக்கு 3000 பொய்க் கால்கள் தேவை. இவ்வளவு கால்களையும் ஒரு மிக்க ஸப்ளை செய்யக்கூடியவர்களே எஸ்டிமேட்டுகள் அனுப்பலாம். கீழ்க்கண்ட விலாஸத்துக்கு எழுதவும்—".

### MUSIC AND FLOWERS
ஸங்கீதமும் புஷ்பங்களும்.

சில புஷ்பங்களுக்கு ஸங்கீத உணர்ச்சியிருக்கிறதென்று ஐரோப்பா கண்டத்திலுள்ள பவேரியா தேசத்தின் ப்ரதான நகரமாகிய ம்யூனிச்சிலிருக்கும் ப்ரொபஸர் ஹான்ஸ்டிஜென் சொல்கிறார். சில ஸ்வரங்களைக் கேட்டால் மலர்கிற ஸ்பாவமும் வேறு ஸ்வரங்களை கேட்டால் குவிகிற ஸ்வபாவமும் சில புஷ்பங்களுக்கிருக்கின்றனவாம்.

### DEAD CHILD REBORN?
இறந்த குழந்தை மறுபடியும் பிறந்ததா?

ஒரு இட்டலி தேசத்து டாக்டருடைய 5-வயது பெண் குழந்தை ஒன்று சில வருஷங்களுக்கு முன்னால் இறந்து போயிற்று. இறந்துபோன சில காலத்துக்கெல்லாம் இறந்த குழந்தையின் ஆவியானது அதன் தாயாரிடம் க்ருஸ்ட்மஸ் தினத்தன்று அவளுக்கே குழந்தையாகப் பிறக்கப் போவதாகச் சொல்லிற்றாம். மறுபடியும் ஒருதடவை தானும் இன்னொரு பெண்ணும் அந்த தினத்தில் பிறக்கப் போவதாகச் சொல்லிற்றாம். இரண்டாந்தடவை சொல்லி 14-மாஸம் ஆனபிறகு க்ருஸ்ட்மஸ்தினத்தன்று அந்த டாக்டரின் மனைவிக்கு இரண்டு பெண் குழந்தைகள் ஜோடியாகப் பிறந்தன. அவைகளின் ஒன்றின் நெற்றியில் இறந்துபோன பெண்ணின் நெற்றியிலிருந்த அடையாளங்களை முற்றிலும் ஒத்திருந்த 3-அடையாளங்கள் இருந்தன. ஒருவருஷத்துக்குப் பிறகு அந்தக் குழந்தைக்கு இறந்து போன குழந்தையின் குணங்கள் எல்லாம் ஏற்பட்டன. இது விசித்ரமாயிருக்கிறது. இந்த ஸம்பவம் உண்மைதான் என்று ரோமிலுள்ள ஒரு டாக்டரும் இன்னம் சில தக்க மனிதர்களும் சொல்லுகிறார்களாம்,

# HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### HOW TO CLEAN BRASS.
பித்தளை ஸாமான்களை சுத்தம் செய்தல்.

பித்தளை ஸாமான்களை சுத்தம் செய்ய வேண்டுமானாலும் ஸரி, அல்லது அவைகளில் உள்ள கரைகளைப் போக்கவேண்டுமானாலும் ஸரி, ஒரு பைண்ட் ஜலத்துக்கு ஒரு ஔன்ஸ் வீதம் படிக்காரத்தை ஜலத்தில் கரைத்து அந்த ஜலத்தில் பித்தளை ஸாமான்களைப் போட்டு ஜலத்தைக் கொதிக்கவைக்க வேண்டும். பிறகு அவைகளை எடுத்துத் துடைத்து விட்டு பித்தளைப் பாலிஷாலாவது அல்லது காய்ந்த துணியாலாவது தேய்த்து பாலிஷ் செய்யவேண்டும். ஸாமான்களின் இடுக்குகளில் உள்ள அழுக்குக்கூட இந்த முறையால் எடுபட்டுப் போகிறது.

### POTATOES AS CLEANSERS.
உருளைக்கிழங்கால் சுத்தம் செய்தல்.

உருளைக்கிழங்குக்கு அழுக்குகளை சுத்தம் செய்யும் குணம் ரொம்ப இருக்கிறது. ஸோப்பைஉபயோகப்படுத்துவதற்குப்பதிலாக வேகவைத்த உருளைக்கிழங்கை ஆறவைத்து அதைக்கொண்டு கையைத் தேய்த்து சுத்தம் செய்தால் கையிலுள்ள அழுக்குகள் நன்றாக விடுவதோடு, கையின் தோல் வழவழப்பாகவும் ம்ருதுவாகவும் ஆகிறது. உருளைக்கிழங்கு வேகவைத்த ஜலத்தை பட்டிலுள்ள அழுக்குகளைப் போக்க உபயோகிக்கலாம். இரண்டு ஆழாக்கு குளிர்ந்த ஜலத்தில் ஒரு உருளைக்கிழங்கைத் துருவிப்போட்டு சிறிது நேரம் கழித்து அந்த ஜலத்தை வடித்தெடுத்து அதைக்கொண்டு துணிகளை சுத்தம் செய்தால் எப்படிப்பட்ட புழுதிக் கரைகளும் விட்டுப் போகும்.

### LAMP CHIMNEYS.
விளக்கு சிம்னிகள்.

எரிந்து கொண்டிருக்கிறதும் அதனால் சிம்னி ரொம்ப சுட்டுக்கொண்டிருக்கிறதுமான விளக்கை அது இருக்குமிடத்திலிருந்து வேறு இடத்துக்குக் கொண்டுபோக வேண்டுமானால் ரொம்ப ஜாக்ரதையாய்ச்செய்ய வேண்டும். அதை வேறிடத்துக் கொண்டு போகும்போது திடீரென்று குளிர்ந்தகாற்று அதன்மேல் பட்டால் சிம்னியானது வெடித்துப் போகக்கூடும்; அல்லது ஒரு பாகத்தில் விரிந்து போகக்கூடும். விளக்கை வேறிடத்துக்கு எடுத்துக்கொண்டுபோவதற்கு முன்னால் வெளிச்சத்தைக் கொஞ்சம் சிறிதாக்கி சிம்னி சிறிது சூடுதணியும்படி விட்டுப்பிறகு வேறிடத்துக்கு மெதுவாய்க் கொண்டுபோக வேண்டும். விளக்கை அணைப்பதாயிருந்தால் வெளிச்சத்தைச் சிறிதாக்கித் தானாக நின்று போகும்படி செய்வது நல்லது; அல்லது சிம்னியின் உச்சியில் மெதுவாய் ஊதினாலும், அது நின்றுபோய் விடும்.

### THE BAT NUISANCE.
வௌவால் உபத்ரவம்.

வீட்டினுள் இருக்கக்கூடிய வௌவால்களை ஒழித்துவிட ஒரு நல்ல வழியிருக்கிறது. வீட்டில் ஜன்னல்கள், கதவுகள், திறந்தவழிகள் ஆகிய இவைகளையெல்லாம் நன்றாய் மூடி ஒரு வழி மாத்ரம் திறந்து வைக்கவேண்டும். அந்தத்திறந்தவழி இரண்டடி சதுரம் இருக்குமானால் நல்லது. அந்தத் திறப்பில் ஒருமீன் வலையைப்போட்டு மூடிக் கட்டி விடவேண்டும். வலையிலுள்ள த்வாரங்கள் வௌவால் புகுந்து போக முடியாதபடி சிறியனவாயிருக்க வேண்டும். வீட்டினுள் இருக்கும் வௌவால்களைத் துரத்தினால் அவைகள் திறந்தவழியின் மூலமாய் வெளியே போகப்ரயத்தனப்பட்டு வலைக்குள் விழுந்துவிடும். பிறகு அவைகளை ஸுலபமாய்க் கொன்றுவிடலாம். அவைகளைச் சுடுவதும், புகைபோட்டுத் துரத்துவதும், அதிக ப்ரயோஜனப்படுவதில்லை. ஒரு காட்டிலுள்ள பங்களாவிலிருந்து வௌவாலைத் துரத்த மேலே சொன்னமுறையை உபயோகித்ததில் ஒரேதடவையில் 79-வௌவால்கள் பிடிபட்டனவாம்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### BORROWING WORDS FROM FOREIGN LANGUAGES.

### அன்ய பாஷைகளிலிருந்து வார்த்தைகள் கடன் வாங்குதல்.

அன்ய பாஷையிலிருந்து வார்த்தைகள் கடன் வாங்குவதைப்பற்றி ஒருவர் 'செந்தமிழ்' பத்ரிகையில் பின் வருமாறு தெரிவிக்கிறார்.

அன்ய பாஷையினின்றும் மொழிபெயர்க்க வேண்டுமானல், அதன் கருத்துக் கிசைந்த பதங்கள் நமது தமிழினும் இருக்கவேண்டும். இல்லாவிடில் தாராளமாய்க் கடன் வாங்க வேண்டியதுதான். கடன் வாங்குவதிலும், நமக்கு ஸம்ஸ்க்ருத பாஷை வெகுகாலம் உதவி செய்திருப்பதாலும், ஸம்ஸ்க்ருத பதங்களைத் தமிழாக்குவதற்கு இயல்பாகவே ஸுலபமான விதிகளிருப்பதாலும், வேறு பாஷையினின்று கடன் வாங்குவதைப் பார்க்கிலும் நமது அடுத்த பாஷையானஸம்ஸ்க்ருதத்திலிருந்து வாங்குவது கௌரவக் குறைவன்று. ஸம்ஸ்க்ருத தாதுக்களைக் கொண்டு தக்க வார்த்தைகளும் பரிபாஷைகளும் கற்பித்துக்கொள்ளவேண்டும்.

உதாரணம். 1-வது. இங்க்லீஷ், மீடர்= மானி அதாவது அளக்கும் கருவி. இவ்வி குதியைக்கொண்டு வாயுமானி, ஜலமானி, தாபமானி, ச்வாஸமானி, பலமானி என்றும், அதேமாதிரி மனிதநூல், ஜீவநூல், மனநூல், வில்வித்தை, ஸ்வப்ன சாஸ்த்ரம், உடனூல் என்றும் -ism (இஸம்) என்றால் வாதம் என்று வைத்துக்கொண்டு, சுபவாதம், அணுவாதம், சூன்யவாதம் என்றும், வார்த்தைகள் கற்பித்துக்கொள்ளலாம்.

2-வது, இந்துதேசத்தில் அன்யபாஷைகளில் உபயோகித்து வரும் ஹிந்தி முதலான பதங்களை நாம் உபயோகிக்கலாம்.

3-வது, ஸம்ஸ்க்ருத பதங்கள் கிடைப்பதரிதானல், லத்தீன், க்ரீக் தாதுக்களைக்கொண்டு, தமிழ்மொழி கற்பித்துக்கொள்ளலாம்.

4-வது கடைசியாய் யாதொரு கதியுமில்லாவிடில் இங்க்லீஷ் வார்த்தைகளை அப்படியே உபயோகிக்க வேண்டியதுதான்.

உதாரணம். ஆக்ஸிஜன், ஹைட்ரஜின், லென்ஸ், கேஸ், கோர்ட், கோட், உயில் முதலான வார்த்தைகளே.

மேலே சொல்லுகிறபடி தமிழ் பாஷையில் ஸரியான பதங்கள் அகப்படாத் பக்ஷத்தில் ஸம்ஸ்க்ருதம் முதலிய பாஷைகளிலிருந்து பதங்கள் எடுத்துக் கொள்ளலாம் என்றால் அதில் ரொம்ப ஸங்கடங்கள் இருக்கின்றன.

முதலாவது, நாம் எந்தக் கருத்தை எடுத்துச் சொல்லவேண்டு மென்று உத்தேசிக்கிறோமோ அந்தக் கருத்தையே ஸம்ஸ்க்ருத பாஷையிலிருந்து நாம் தெரிந் தெடுக்கும் வார்த்தை தெரிவிக்கிற தென்பது ஸந்தேகம். இது ஒரு பக்கம் இருக்க, ஒருவன் தமிழில் எழுதவேண்டு மென்றால் மேலே சொல்லுகிறபடி செய்யவேண்டுமானல் குறைந்தது மூன்று பாஷைகளில் ஞானம் வேண்டுமென்று ஏற்படுகிறது. முதலாவது இங்க்லீஷ் வார்த்தைகளின் அர்த்தம் தெரிவதற்கு இங்க்லீஷ் பாஷை தெரிந்திருக்க வேண்டும். ஸம்ஸ்க்ருதத்திலிருந்து பதம் எடுக்க ஸம்ஸ்க்ருத பாஷை தெரிந்திருக்க வேண்டும். இவைகளிரண்டையும் அறிந்து எழுதவேண்டியது தமிழாதலால் தமிழ் பாஷையும் தெரிந்திருக்க வேண்டும். இரண்டு பாஷை தெரிந்திருப்பதே கஷ்டம். மூன்றாவதாக இன்னொரு பாஷையும் கற்பதென்றால் கஷ்டத்திற்குக் கேட்பானேன். கொஞ்ச காலத்துக்கு முன்னல் சாஸ்த்ரீய அறிவைப் பரவச் செய்வதைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்காக பஞ்சாப் டெக்ஸ்ட் புக் கமிட்டியார் நியமித்த ஒரு கமிட்டி அன்ய பாஷையிலுள்ள வார்த்தைகளை அப்படியே உபயோகிப்பது தான் மேலான முறையென்று தீர்மானம் செய்தார்கள்.

அன்ய பாஷைகளிலுள்ள வார்த்தைகளின் தாத்பர்யத்தை ஸரிவரத் தெரிவிக்கும் வார்த்தைகள் தமிழில் ஏற்கனவே வழங்கிவராவிட்டால் அன்ய பாஷைகளின் பதத்தை அப்படியே உபயோகிப்பது தான் மேலான வழியாகும்.

# DIARY OF THE MONTH.
## மாஸ வர்த்தமானம்.

டிஸம்பர்மீ 1-தேதி.—

தென் ஆப்ரிக்கா இந்தியர்கள்.—தென்னாப்ரிக்கா இந்தியர்களின் குறைகள் ஸம்பந்தமாக இன்றைபதினம் சில இந்திய ப்ரமுகர்கள் இந்தியர் மந்த்ரியைக் கண்டு கொண்டார்கள். அவர்கள் தென்னாப்ரிக்காவில் கைது செய்யப்பட்ட இந்தியர்களை விடுதலை செய்ய வேண்டு மென்றும், ஜாதி வித்யாஸத்தை நீக்கவேண்டு மென்றும், 3-பவுன் வரியைத் தள்ளிவிட வேண்டுமென்றும், இந்தியர்களுக்கு ப்ரிட்டிஷ் ராஜ்ய முழுவதிலும் உள்ள பாத்யதைகளை அவர்களுக்குக் கொடுக்கும்படி செய்யவேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டு மென்றும் சொன்னார்கள்.

இந்தியா மந்த்ரி அவர்களுக்குப் பதில் சொன்னபோது, வேலை நிறுத்தம் ஸம்பந்தமாக நடந்தவைகளைப்பற்றி விசாரணை செய்ய வேண்டியது அவச்யந்தான் என்றும், 3 பவுன் வரிதான் எல்லா கஷ்டங்களுக்கும் முக்ய காரண மாயிருக்கிறதென்றும், தென் ஆப்ரிக்கா இந்தியர்களுக்கு முழு ந்யாயம் கிடைக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் விரும்பியிருப்பதாகவும் சொன்னார்.

2-தேதி.

வேலை நிறுத்தம்.—நேட்டாலிலுள்ள கரும்புத் தோட்டங்களில் வேலை தொடங்க ஆரம்பித்துவிட்டார்கள்.

கனடாவில் இந்தியர்கள்.—இந்தியர்களில் ஞானசூன்யமாயும், வ்யாதியாயும், குற்றம் செய்தவர்களாயும், அல்லது பிச்சைக்காரர்களாயும் இருப்பவர்களைத்தான் கனடாவில் வரக்கூடாதென்று சொல்லலாமே யொழிய மற்ற இந்தியர்களை வரக்கூடாதென்று ஆக்ஷேபிப்பது செல்லாது என்று கனடாவிலுள்ள சீப் ஜஸ்டிஸ் ஒரு கேஸில் தீர்ப்பு செய்திருக்கிறார். ப்ரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ளவர்கள் இந்தத் தீர்ப்பில் அத்ருப்தி கொண்டிருக்கிறார்கள். கீழ் நாட்டாரை கனடாவிற்குள் வராமல் தடுப்பதற்காக சட்டம் செய்யவேண்டுமென்று கேட்பார்கள் என்று சொல்லப்படுகிறது.

4-தேதி.

மிஸ்டர் ஸுரேந்த்ர நாத் பானர்ஜி.—இன்றைய் தினம் மிஸ்டர் ஸுரேந்த்ரநாத் பானர்ஜிக்கு ஒரு பயமுறுத்தும் கடிதம் வந்தது. அதில் அவர் இன்னும் ஒரு மாஸத்துக்குள் தமக்கும் கவர்ன்மெண்டுக்கும் உள்ள ஸம்பந்தத்தை விட்டுவிடாவிட்டால் அவர் கொலை செய்யப்படுவாரென்றும், முன் அவருக்குவந்த வெடி குண்டு கடிதத்தை அவர் போலீஸார் வசம் கொடுத்தது பிசகென்றும் எழுதியிருந்தது.

கனடாவில் இந்தியர்கள்.—கனடாவிற்குள் கீழ்நாட்டு வாஸிகள் வருவதைத் தடுப்பதற்காக கனடா கவர்ன்மெண்டார் ஒருசட்டம் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள்.

6-தேதி.

க்ராம ரஸ்தாக்கள்.—இன்று தென்னாற்காடு டிஸ்ட்ரிக்ட்போர்டு மீட்டிங் கூடினபோது க்ராம ரஸ்தாக்களை அபிவ்ருத்தி செய்து அவைகளை ஸரியான நிலைமையில் வைத்திருப்பதற்காக வென்று டிஸ்ட்ரிக்ட்போர்டின் வரும்படியில் நூற்றுக்கு 10-பாகம் அதாவது ஏறக்குறைய 40,000-ரூபாயை எடுத்து வைத்து க்ராம ரோடுகளுக்காகச் செலவழிக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

8-தேதி.

விவஸாயகான்பரேன்ஸ்.—விவஸாய போர்ட்டார் இன்றையதினம் கோயம்புத்தூரில் கூடி

னுர்கள். சென்னை கவர்ன்மெண்டின் எக்ஸி க்யூடிவ் கௌன்ஸில் மெம்பராகிய ஸர் ஜான் அட்கின்ஸன் மெம்பர்களை வரவேற்றுப்பேசி னூர். இந்தியா கவர்ன்மெண்டுக்கு அக்ரிகல் சரல் அட்வைஸராய் வேலைபார்த்து வரும் மிஸ்டர் மெக்கன்னு ஆரம்ப ப்ரஸங்கம் செய் தார். அதில் முந்தின வருஷத்தில் விவஸாய டிபார்ட்மெண்டார் செய்திருந்த வேலையைப் பற்றி ப்ரஸ்தாபம் செய்தார்.

கனடாவில் இந்தியர்கள்.—கனடா இமிக் ரேஷன் டிபார்ட்மெண்டார் டிபோர்ட் செய் திருந்த 14-ஹிந்துக்கள் இன்று விடுதலை செய் யப்பட்டார்கள்.

தென்னுப்ரிக்கா இந்தியர்கள்.—லண்டன் டெய்லி டெலிக்ராப் பத்ரிகையின்ஜோகன்னஸ் பர்க் நிரூபர் நேடாலுக்குப்போய் இந்தியர்க ளுடைய குறைகளைப்பற்றியும் அவர்களைக் கொடுமையாய் நடத்தினதாகச் சொன்ன வைகளையும் விசாரித்து வந்தாராம். இந்தியர் களைக்கொடுமையாய் நடத்தினதாகச் சொன்ன தெல்லாம் பொய் என்று சொல்லுகிறுர்.

9-தேதி.

எச். எச். கோச்சி ராஜா.—கொச்சி ராஜா கூடிய சீக்ரம் தமது ராஜ்யகார்யங்களை விட்டு விலகிக் கொள்ளப்போவதாக இன்று கொச்சி கெஜட்டில் ப்ரசுரமாயிருக்கிறது.

கனடாவில் இந்தியர்கள்—கனடாவிலுள்ள ப்ரிட்டிஷ் கொலம்பியாவில் வேலையாட்கள் அதிகமாயிருக்கிறபடியால் அந்த மாகாணத் துக்குள் மார்ச்சு மாஸம் 31-தேதி வரையில் ஒரு வேலையாளும் ப்ரவேசிக்கக்கூடாதென்று கனடாவின் கவர்ன்மெண்டார் உத்தரவு செய் திருக்கிறுர்கள்.

10-தேதி.

விவஸாயக் கான்பரேன்ஸ்.—இன்று விவ ஸாயக்கான்பரென்ஸ் கூடினபோது பல ப்ரே ரணைகள் ஆலோசிக்கப்பட்டன. ம்ருகவைத்ய விப்பந்திகள் க்ராமவாஸிகளோடு நெருங்கிப் பழகி அவர்களுக்கு கால்நடை ஸுகாதாரம், ஜலவஸதி, தொத்து வ்யாதிகளைத் தடுப்பது முதலியவைகளைப்பற்றிய விஷயங்களைக் கற் பிக்கவேண்டுமென்றும், ஒவ்வொரு மாகா ணத்திலும் கோவாபரேடிவ் கால்நடை இன்ஷூரென்ஸ் ஏற்படுத்தவேண்டுமென்றும் செய்த ப்ரேரணைகள் விவஸாய போர்டால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

11-தேதி.

தென்னுப்ரிக்கா கமிட்டி.—தென்னுப்ரிக்கா இந்தியர்களின் குறைகளைப்பற்றி விசாரிக்க யூனியன் கவர்ன்மெண்டார் மூன்றுபேர் கொண்ட ஒரு கமிஷன் ஏற்படுத்தியிருக்கிறுர் கள். அதில் இந்தியாவிலிருந்து தெரிந்தெடுக் கப்பட்ட ப்ரதிநிதி ஒருவரும் இல்லை.

நோபல் வெகுமதிகள்—இன்று ஸ்வீடன் தேசத்து அரசர் நோபல் வெகுமதிகளை அளித்தபோது ரபீந்த்ரநாத் டாகூருக்குக் கொடுத்த வெகுமதியை இங்லண்டின் ப்ரதி நிதி தூதர் ரபீந்த்ரநாத் டாகூருக்காக வாங் கிக்கொண்டார்.

12-தேதி.

விவஸாய கான்பரேன்ஸ்.—இன்று கோயம் புத்தூரில் விவஸாய கான்பரென்ஸில் விவ ஸாய போர்டார் விவஸாய கல்வியைப் பரவச் செய்வதைப்பற்றி ஆலோசித்தார்கள்.

தென் ஆப்ரிக்கா இந்தியர்கள்.—தென்னுப் ரிக்கா கமிட்டி விசாரிக்கப்போகும் விஷ யங்கள் பின் வருபவையாகும்:—இந்தியர் களின் வேலை நிறுத்தத்தின் ஸம்பந்தமாய் நடந்த கலகங்களும், அப்படி கலகங்கள் நடந்த தற்கு காரணங்களும், கலகத்தை அடக்க என்னசெய்யப்பட்டது என்பதும், கைதிகள் விஷயத்தில் செய்ததாகச் சொல்லப்படுகிற கொடுமைகளும் ஆகிய இவைகள் ஸம்பந்த மாய் விசாரித்துப் தெரிவிக்கவும், மேலே

சொன்னவைகளைபற்றி ப்ரேரணைகள் செய்யவும் ஷை கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.

13-தேதி.

விவஸாய கான்பரேன்ஸ்.—கோயம்புத்தூரில் கூடின விவஸாய கான்பரென்ஸ் இன்று முடிவடைந்தது. இன்றையதினம் பால் தயிர் வெண்ணெய்க் கைத்தொழிலைப்பற்றி விவஸாய போர்டார் ஆலோசித்தார்கள்.

மிஸ்ஸஸ் பாங்கர்ஸ்ட்.—அமெரிக்காவுக்குப் போயிருந்த ஸ்த்ரீ ஸ்வதந்தரவாதியாகிய மிஸ்ஸஸ் பாங்கர்ஸ்ட் இன்று லண்டனுக்குத் திரும்பிவந்து விட்டார்.

14-தேதி.

மிஸ்ஸஸ் பாங்கர்ஸ்ட்.--மிஸ்ஸஸ் பாங்கர்ஸ்ட் டோவருக்கும் லண்டனுக்கும் இடையில் ரயில் வண்டியில் போகும்போது கைதுசெய்யப்பட்டார்.

15-தேதி.

பால்கன் விஷயம்.—க்ரீஸ் தேசத்து கவர்ன்மெண்டார் பல்கேரிய கைதிகளை இது வரையில் விடாமல் வைத்திருக்கிறார்கள். இது விஷயமாக இரண்டு தேசத்துக்கும் பேச்சுகள் தூதர்கள் மூலமாக ஆரம்பமாகி, த்ரேஸ் மாகாணத்தில் க்ரேக்க ஜனங்களை பல்கேரியர்கள் தொந்தரவு செய்வது நின்றால் கைதிகளை விட்டு விடுவதாக க்ரீஸ் கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

மிஸ்டர் பி. எஸ். கிருஷ்ணராவ்.—ஒரு வாரமாய் பாரிசவாயுவால் பீடிக்கப்பட்டு வந்த, மைஸூர் சீப் கோர்ட் சீப் ஜட்ஜ் மிஸ்டர் பி. எஸ். க்ருஷ்ணராவ் இன்று ஸாயந்த்ரம் காலகதி யடைந்தார்.

ஹிந்து யூனிவர்ஸிடி.—ஹிந்து யூனிவர்ஸிட்டி ஸங்கத்தின் இரண்டாவது வருஷாந்த மீட்டிங் இன்று நடை பெற்றது. நவம்பர் மாஸம்முடிவில் அந்த ஸங்கத்திற்குக் கிடைத்திருந்த பணம் 42,38,720 ரூபாயாகும். அடுத்த வருஷத்துக்குக் கமிட்டியும், ப்ரெஸிடெண்ட், வைஸ் ப்ரெஸிடெண்டுகளும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். காசி ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜை ஹிந்து யூனிவர்ஸிடியோடு சேர்த்துக் கொள்வதாக நிச்சயிக்கப்பட்டது.

16-தேதி.

க்ளைவின் உருவச்சிலை.—இன்று கல்கத்தாவில் லார்ட் க்ளைவின் உருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது. பேஹார் ஒரிஸ்ஸா மாகாணங்களின் லெப்டினண்ட் கவர்னராகிய ஸர் சார்ல்ஸ் பெய்லி அதைத் திறந்து வைத்தார். பங்காளத்து கவர்னராகிய லார்ட் கார்மிகேல் க்ளைவைப் பற்றி ச்லாகித்துப் பேசினார்.

17-தேதி.

மிஸ்ஸைஸ் பாங்கர்ஸ்ட்.—கைது செய்யப்பட்டிருந்த மிஸ்ஸஸ் பாங்கர்ஸ்ட் ஜெயிலில் ஆகாரம் சாப்பிட மறுத்ததால் அவரை விடுதலை செய்து விட்டார்கள். அவர் ஸ்விட்ஸர் லண்டுக்குப் போகப் போகிறார்.

18-தேதி.

டாக்கா யூனிவர்ஸிட்டி.—டாக்கா யூனிவர்ஸிட்டி ஸ்க்மை இந்திய ஸெக்ரெடரி அங்கீகரித்து விட்டார்.

மைஸூர் சீப் கோர்ட்.-மைஸூர் சீப்கோர்ட்டில் சீப் ஜட்ஜாயிருந்த மிஸ்டர் க்ருஷ்ணராவ் இறந்து போனதால், அந்த ஸ்தானத்தில், மைஸூர் ஸமஸ்தானத்து ஸீனியர் கௌன்ஸில்லராகிய மிஸ்டர் எச். வி. நஞ்சுண்டய்யாவை தற்காலத்துக்கு சீப் ஜட்ஜாக மைஸூர் கவர்ன்மெண்டார் நியமித்திருக்கிறார்கள்.

நேட்டால் கமிஷன்.—நேட்டால் விசாரணைக் கமிஷன் இன்று ஆரம்பமாயிற்று.

19-தேதி.

இந்தியன் ஸ்பீஷி பாங்கி.—இந்தியன் ஸ்பீஷி பாங்கியை மூடிவிடும்படியாக அநேகர் போட்ட பெடிஷன் மேல் இன்றையதினம்

ஜஸ்டிஸ் டேவார் மேற்படி பாங்கியை மூடி விடும்படி உத்தரவு செய்தார். அபிஷல் லிக்விடேடரையும் நியமித்திருக்கிறார்.

பார்லிமெண்ட்.—ப்ரிட்டிஷ் பார்லிமெண்ட் வரும் பிப்ரவரி மாஸம் கூடுமென்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—வேலை நிறுத்தத்தில் கைதுசெய்யப்பட்ட மெஸ்ஸர்ஸ் காந்தி, போலக், காலன்பாக் ஆகிய மூவரும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

பெரம்பூர் வொர்க் ஷாப்பில் கலகம்.—பெரம்பூர் வொர்க்ஷாப்பில் இன்று பிற்பகலில் ஒரு கலகம் நடந்தது. அங்குள்ள வேலையாட்களை அவர்களுக்குக் கெடுதலாக விருக்கிற ஒரு புதிய அக்ரிமெண்டில் கையெழுத்திடும்படி கட்டாயப்படுத்தினதாலும், வேலையாட்களை வொர்க்ஷாப்பில் விடுவதற்கு ஏற்பட்டிருந்த காலத்தைக் குறைத்து விட்டதாலும், வேலையாட்கள் அத்ருப்தியடைந்து இன்று கலகம் செய்தார்கள் என்று சொல்லப்படுகிறது. வேலையாட்கள் தச்சுப்பட்டரையின் ஜுனியர் போர்மனையும் இன்னும் இரண்டொருவரையும் தாக்கினார்கள். அதன் மேல் ஒரு உத்யோகஸ்தர் துப்பாக்கியால் கலகம் செய்தவர்களில் ஒருவரைச்சுட்டுக் கொன்று, இன்னம் நாலு பேரை காயப்படுத்தினதன் மேல், வேலையாட்கள் கலைந்து விட்டார்கள்.

20-ம் தேதி.

நெல்லூர்ஜில்லா கான்பரேன்ஸ்.—நெல்லூர் ஜில்லா கான்பரென்ஸ் இன்று கூடூரில் கூடிற்று. மிஸ்டர் ஜி. ராகவராவ் ப்ரெஸிடெண்டாக இருந்து, ஆந்த்ராக்கிளர்ச்சி, கல்வி, நிலவிஷயம், தென்னாப்ரிக்கா இந்தியர்கள், ஆகிய இவ்விஷயங்களைப்பற்றிப் பேசினார்.

நிலஸெஸ்ஸை அதிகப்படுத்தக் கூடாதென்றும், அந்த ஜில்லாவில் கோவாபரெடிவ் ஸங்கங்களை அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்றும், நெல்லூரில் ஸ்த்ரீகளுக்கு ஒரு ஸெகண்டரி ஸ்கூல் கவர்ன்மெண்டார் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டன.

ஒரு கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.—செங்கற்பட்டு ஜில்லா கோவாபரெடிவ் கான்பரென்ஸ் இன்றையதினம் கீழச்சேரியில் கூடிற்று. திருவள்ளூர் ரெவின்யூ டிவிஷனல் ஆபிஸராகிய மிஸ்டர் எஸ்-திருமலை அய்யங்கார் ப்ரெஸிடெண்டாக இருந்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் ஸங்கங்கள் மெம்பர்களுக்குக் கடன் கொடுப்பதேயன்றி எரு, விதைகள் ஆகிய இவைகளை மெம்பர்களுக்காக வாங்கி விற்கவும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், ஸங்கங்களுக்கு வேண்டிய பணம் அந்த ஜில்லாவிலேயே கிடைக்கக் கூடியதா யிருக்கும் போது, மதராஸ் ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து பணம் கடன் வாங்கப்பட்டு வருகிறதென்றும், ஜனங்கள் தங்களுடைய பணம் அந்த ஜில்லாவிலேயே உதவி வரும்படி ஜில்லாவிலுள்ள பாங்கிகளிலேயே போட்டு வைக்கவேண்டும் என்றும் சொன்னார்.

திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை செங்கல்பட்டு ஜில்லாவுக்கு ஒரு அர்பன் பாங்கி வேண்டியதின் அவச்யத்தைப் பற்றிப் பேசினார்.

ராவ்பகதூர் தர்மரங்கராஜு கோவாபரெடிவ் கால்நடை இன்ஷுரன்ஸ் ஏற்படுத்துவதைப்பற்றிப் பேசினார்.

மகமதிய மிஷன்.—மகமதிய விஷயங்களை இங்க்லண்டிலுள்ளவர்களுக்குத் தெரிவிப்பதற்காகப் போயிருந்த மிஸ்டர் வாஸிர் ஹாஸனும், மிஸ்டர் மகமது அலியும், இன்று பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்கள்.

21-ம் தேதி.

மிஸ்டர் பி. ஆர். ஸுந்தரய்யர்.—சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜாயிருந்த மிஸ்டர்ஜஸ்டிஸ்

காலையில் கால கதி

...ன்.—இன்று டர்பனில் ... கூடியிருந்த ஒரு மீட்டிங் ...சாரணைக் கமிஷனில் இந்தி... நிதி ஒருவரும் இராததனால் ... ஸாக்ஷ்யம் கொடுக்கக் கூடா... தீர்மானம் செய்தார்கள்.

...ட்டால் கமிஷனில் இந்தியர்களுடைய ...களை எடுத்துச் சொல்வதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் மத்யமாகாணங்களின் சீப் கமிஷனராகிய ஸர் பி. ராபர்ட்ஸனைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

துருக்கி விஷயம்.—துருக்கியின் ஸைன்யங்களை ஒழுங்கு படுத்துவதற்காக ஜெர்மனியிலிருந்து யுத்த ஆபிஸர்களை வரவழைத்திருக்கிறார்கள். அவர்களில் ஜெனரல் ஸாண்டர்ஸ் என்பவர் முதல் டர்க்கிஷ் ஆர்மி கோர் என்னும் ஸைன்யத்தின் தலைமையை இன்று ஏற்றுக்கொண்டார்.

இந்தியா லங்கை ரயில்வே.--இந்தியா லங்கை ரயில்வே பிப்ரவரி மாஸம் 24-தேதி யன்று திறக்கப்படும் என்று தெரிய வருகிறது.

22-தேதி.

நேட்டால் இந்தியர்கள்.—நேட்டாலில் இந்தி...ர்களின் தலைவர்கள் தாங்கள் கவர்ன்மெண்...ாரை இன்ன கேட்பதாகத்தெரிவித்து ஒரு ...தம் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் அந் ... கடிதத்தில், நேட்டால் கமிஷனில் புதிதாக ...ரண்டு மெம்பர்கள் நியமிக்கவேண்டுமென்றும், கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யவேண்டுமென்றும், கரும்புத்தோட்டங்களிலும் நிலக்கரிச்சுரங்கங்களிலும் போய் ...க்ஷ்யம் தயாரிக்க தலைவர்களுக்கு அனுமதி ...காடுக்கவேண்டு மென்றும் கேட்டுவிட்டு, ...லை நிறுத்தத்தின்போது நடந்த கொடுமை... விஷயமாத கமிஷனுடைய முடிவுகளை ஏற்றுக்கொண்டாலும், ஆதியிலிருந்துள்ள குறைகளைப்பற்றி கமிஷன் செய்யக்கூடிய சிபார்சுகளை இந்தியர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களென்றும், இப்படிக்கேட்டு கொண்டப்படி கவர்ன்மெண்டார் இணங்காவிட்டால் மறுபடியும் எதிர்க்காமல் எதிர்க்கும் உபாயத்தைக் கைக்கொள்ள நிச்சயித்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

நேட்டால் வேலைநிறுத்தக் கலகத்தில் கைது செய்யப்பட்டிருந்த காந்தியின் மனைவியும் இன்னம் சில ஸ்திரீகளும் இன்று விடுதலை செய்யப்பட்டார்கள்.

23-தேதி.

ஸ்த்ரீ வைத்யர்கள்.—கௌண்டஸ் அப் டப்ரின் பண்டின் ஸெண்ட்ரல் கமிட்டியார் ஸ்த்ரீ வைத்திய உத்யோகத்துக்காகப் பல ஸ்த்ரீ வைத்யர்களை நியமித்திருக்கிறார்கள். அந்த ஸ்த்ரீகளில் சிலர் இந்திய ஸ்த்ரீகளாவார்கள்.

24-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்.—நேட்டால் கமிஷனில் இந்தியப் பற்றுள்ளவர்களை அதிகப்படியாக நியமிக்கவேண்டும் என்றும், எல்லா எதிர்க்காமல் எதிர்க்கும் கைதிகளையும்விடுதலை செய்யவேண்டும் என்றும், மிஸ்டர் காந்தி கேட்டுக்கொண்டதை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளவில்லை.

25-தேதி.

இந்தியன் இண்டஸ்ட்ரியல் கான்பரென்ஸ்.—இந்தியன் இண்டஸ்ட்ரியல் கான்பரென்ஸ் இன்று கராச்சியில் கூடிற்று. பம்பாயைச் சேர்ந்த ஆனரபிள் மிஸ்டர் லல்லுபாய்ஸமால்தாஸ் ப்ரெஸிடெண்டாக இருந்தார். பாங்கிச் சட்டத்தைப் பற்றியும், வ்யாபாரக் காங்க்ரெஸைப்பற்றியும், இந்திய சேம்பர் அப் காமர்ஸ்களுக்குள் ஒற்றுமை வேண்டியதன் அவச்யத்தைப் பற்றியும், ஒரே விதமான படிக்கல்கள் வேண்டியதின் அவச்யத்தைப்

பற்றியும், தீர்மானங்கள் செய்யப்பட்டன.

26-தேதி.

எல்லா இந்திய மகமதிய கல்வி கான்பரென்ஸ்.—எல்லா இந்திய மகமதிய கல்வி கான்பரென்ஸ் இன்று ஆக்ராவில் கூடிற்று. ஆனரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷாடின் ப்ரெஸிடெண்டாயிருந்து மகமதிய யூனிவர்ஸிடி, டெக்னிகல் கல்வி, பெண் கல்வி முதலிய பல விஷயங்களைப்பற்றிப் பேசினர்.

இந்தியன் நாஷனல் காங்க்ரேஸ்.—இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் இன்று கராச்சியில் கூடிற்று. சென்னையைச் சேர்ந்த ஆனரபிள் நவாப் ஸையத் மகமது ப்ரெஸிடெண்டாக இருந்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில், தென்னாப்ரிக்கா இந்தியர்கள், இந்தியா கௌன்ஸில் விஷயம், ஸ்தல ஸ்வய ஆட்சி முதலிய விஷயங்களைப் பற்றிப் பேசினர்.

தியஸாபிகல் கன்வென்ஷன்.—இன்றைய தினம் தியஸாபிகல் கன்வென்ஷன் காசியில் கூடிற்று.

27-தேதி.

இந்தியன் நாஷனல் காங்க்ரேஸ்.—இன்றைய தினம் இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் மறுபடியும் கூடி, தென்னாப்ரிக்கா இந்தியர்களுக்கு விரோதமாக ஏற்பட்ட சட்டத்தை அரசர் ரத்து செய்யவேண்டுமென்றும், வேலை நிறுத்தத்தின் போது இந்தியர்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைகளைக் கண்டிப்பதாகவும், இந்தியர்களினுடைய குறைகளை இம்பீரியல் கவர்ன்மெண்டார் நீக்க முயலவேண்டும் என்றும், ஒரு தீர்மானம் செய்தது.

இன்னும், நீதி நிர்வாகப் பிரிவினையின் அவச்யத்தைப் பற்றியும், இந்தியா ஸெக்ரெடரியின் கௌன்ஸிலை எடுத்து விடுவதின் அவச்யத்தைப்பற்றியும், தீர்மானங்கள் செய்தது.

தியஸாபிகல் கன்வென்ஷன்—இன்று தியஸாபிகல் கன்வென்ஷன் மீட்டிங்கில் மிஸ்ஸஸ் பெஸண்ட் ஜாதி ஏற[...] கம் செய்தார். ஜாதி ஏற[...] இந்தியாவின் அபிவ்ருத்தி[...] ருக்கிறதென்றும், அந்த [...] விதமாய் மாற்றவேண்டும் எ[...]

28-தேதி.

ஒரு கல்விப்பொருள் காட்சி.—[...] தினம் பங்களூரில் மைஸூர் கவர்[...] ஹைஸ்கூல் கட்டிடத்தில் ஒரு கல்விப்பொ[...] காட்சி, மைஸூர் ரெஸிடெண்டால் திற[...] வைக்கப்பட்டது.

மிஸ்டர் காந்தி.—மிஸ்டர் காந்தி இன்றைய தினம் ஒரு மீட்டிங்கில் இந்தியர்களின் விஷய[...]மாய் கவர்ன்மெண்டாரிடமிருந்து தமக்கு[...] பதில் வந்திருப்பதாகவும், ஜோகன்னஸ்பர்க்கிலிருந்து டர்பனுக்கு இந்தியர்கள் புறப்பட்டு வருவதாக ஏற்பாடு செய்திருந்தபடி ஸம[...]பத்தில் புறப்படமாட்டார்கள் என்றுட[...] சொன்னர்.

இந்தியன் நாஷனல் காங்க்ரேஸ்.—இன்[...] இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் கூடி பப்ளி[...] ஸர்விஸ் கமிஷனில், சில ஐரோப்பியர்கள் இ[...]திய உத்யோகஸ்தர்களுக்கு திறமையும் யோ[...]யதையும் இல்லையென்று சொன்னதைக் க[...]டித்து இந்தியர்களுக்கு உயர்ந்த உத்யோக[...]கள் அதிகமாகக் கொடுக்கும்படிக்கும், [...]னம் சில ஸாதகங்கள் செய்யும்படிக்கும், [...] தீர்மானம் செய்தது. இன்னம் இந்[...] ப்ரெஸ் ஆக்ட், சாச்வத ஸெட்டில்மெ[...] இலவசமான கட்டாயப்படிப்பு, முதலிய [...] விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்தது.

29-தேதி.

ஜப்பானில் பஞ்சம்.—ஜப்பானிலுள்ள ஆமோரி, ஹௌக்காய் டோ என்னு[...] களில் பயிர்கள் எல்லாம் பெரும்பாலு[...] யாய்ப்போய் பஞ்சம் உண்டாகியிருக்கி[...] இந்த வருஷத்தில் மீன் பஞ்சமும் ஏற்[...]

ன்களை
பெண்
வதற்காக
டிருககிறார்கள்.
டஞ்ச நிவர்த்திக்காக
செலவழிப்பார்கள். இதனால்
ளள அரிசிக்கு விலை அதிகமாக
ன்று தோன்றுகிறது.

ஆசாரசீர்திருத்த கான்பரேன்ஸ்.—இன்றைய
ம் ஆசாரசீர்திருத்த கான்பரென்ஸ் கராச்
ல் கூடிற்று. ராவ்பகதூர் திவான் கௌரம்
சந்தன்லால் ப்ரெஸிடெண்டாக இருந்

ளுக்குள் எலிமெண்டரி கல்வியும்
க்கல்வியும் பரவச்செய்ய வேண்டு
ம், விதவா விவாகம் செய்யவேண்
வச்யம் என்றும், ஜாதிகள் ஒன்றோ
சேரவேண்டுமென்றும், தீர்மானம்
இன்னம் சில தீர்மானங்களும்
டன.

திய முஸ்லிம் லீக்.—எல்லா இந்
க் இன்று ஆக்ராவில் கூடிற்று.
த ஆனரபிள் ஸர் இப்ரகிம்
ரெஸிடெண்டாக இருந்தார்.
த்தில், கான்பூர் மசூதிக்
த்தம் தென்னாப்ரிக்கா
முதலியவைகளைப்பற்றிப்

நேட்டால் கமிஷனில்
மற்ற மெம்பர்கள்
ாக இருப்பதால்
ர் ஸாக்ஷி சொல்
தீர்மானித்
ககளுக்

# SEASON.

## கால ஸ்திதி.

**Rainfall.**

மழை.—1913ஞு ஏப்ரல்மீ 1உயிலிரு 1914ஞு ஜனவரிமீ 1உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய் திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 47·28 | 43·63 |
| வால்டேர் | 35·57 | 35·20 |
| காக்கினடா | 36·45 | 38·08 |
| மசூலிப்பட்டணம் | 31·50 | 39·15 |
| நெல்லூர் | 30·32 | 33·35 |
| மதராஸ் | 64·93 | 48·12 |
| கூடலூர் | 96·20 | 48·56 |
| நாகபட்டணம் | 84·81 | 50·84 |
| பாம்பன் | 40·48 | 33·88 |
| கொழும்பு | 64·31 | 74·66 |
| திருவநந்தபுரம் | 62·24 | 60·39 |
| கொச்சி | 97·01 | 109·44 |
| கள்ளிக்கோட்டை | 111·58 | 115·86 |
| மங்களூர் | 110·25 | 126·88 |
| மெர்க்காரா | 109·07 | 125·80 |
| ஐதராபாத் | 18·91 | 30·71 |
| பல்லாரி | 15·06 | 19·60 |
| கர்நூல் | 17·84 | 26·37 |
| கடப்பை | 23 75 | 31·12 |
| ஹாஸ்ஸான் | 25·63 | 35·51 |
| பெங்களூர் | 21·43 | 34·61 |
| கொடைக்கானல் | 49·45 | 54·84 |
| உதகமண்டலம் | 44·55 | 52·77 |
| கோயம்புத்தூர் | 15·21 | 20·73 |
| வேலூர் | 23·68 | [illegible]30 |
| சேலம் | 31·30 | [illegible]4 |
| திருச்சினாப்பள்ளி | 3[illegible]·11 | |
| புதுக்கோட்டை | 38·15 | |
| மதுரை | 16·06 | |
| திருநெல்வேலி | | |

# Calendar—பஞ்சாங்கம்.

| | | ..ஜூ | இங் | தமி | வா | 47-ப்ரமாதீசஞு தைமூ-<br>தக்ஷிணாயனம்-ஹேமந்தருது } கொல்லம்-1089<br>பஸலி-1323 { இங்கிலீஷ் - 1914<br>ஜனவரி-பிப்ரவரிமீ } ஹிஜரி-1332<br>மொஹரம்-ஸபர். |
|---|---|---|---|---|---|---|
| | | உ | உ | உ | | |
| | 3 | 15 | 13 | 1 | செ | ப்ர 5-9, உப 54-24, பூச 26-24, விஷ் 13-18, தை 32-24, ரா 27-41, மகாரவி 26-44, மகரத்விதீபாதி, உத்தராயணபுண்யகால பௌஷபகுள, அவம, சூன்யார்க்கம், கரிநாள் |
| | 33 | 16 | 14 | 2 | பு | த்ரி 53-36, ஆயி 22-21, பிரீ 5-38, உப 52-4, வணி 26-36, சே 0-17, ரா 21-40, கரிநாள் மாட்டுப்பொங்கல் |
| | 34 | 17 | 15 | 3 | வி | சது 47-33, மக 18-5, ஸவு 49-42, பவ 20-35, ரா 8-3, சங்கடசதுர்த்தீ, கரிநாள் |
| | 35 | 18 | 16 | 4 | வெ | பஞ் 41-38, பூர 13-48, சோ 41-50, கவு 14-34, ரா 1-57 |
| 4 | 36 | 19 | 17 | 5 | ச | ஷஷ் 35-58, உத் 9-44, அதி 34-9, கர 8-45, ரா 0-47 |
| 5 | 37 | 20 | 18 | 6 | ஞா | ஸப் 30-46, ஹஸ் 6-1, சுக 26-51, பத் 3-19, பால 58-21, தி 25-53 மித்ரஸப்தமி, காலாஷ்டமீ |
| 5 | 38 | 21 | 19 | 7 | தி | அஷ் 26-3, சித் 2-47, திரு 19-56, பால 53-54, தி 16-6, அஷ்டமீதி அஷ்டகா |
| 55 | 39 | 22 | 20 | 8 | செ | நவ 21-54, சுவா 0-4, உப 57-52, சூல 13-27, வணி 50-3, தி 13-31, திதிதுவப, கும்பாயன 49-45 |
| 45 | 40 | 23 | 21 | 9 | பு | தச 18-22, அனு 56-27, கண் 7-29, பவ 46-50, தி 7-38, ஏகாதசீதி |
| 35 | 41 | 24 | 22 | 10 | வி | ஏகா 15-30, கேட் 55-43, விரு 2-0, உப 55-9, கவு 44-22, தி 10-12, ஸர்வஜீவவார ஏகாதசி |
| மகரம் 26 | 42 | 25 | 23 | 11 | வெ | த்வா 13-23, மூல 55-52, விவ 53-1 கர 42 48, தி 15-40, ரா 23-8, பிரதோஷ, இராமா, கரிநாள் |
| 16 | 43 | 26 | 24 | 12 | ச | த்ர 12-22, பூரா 57-0, ஹர் 49-40, பத் 42-12, தி 20-12, மாஸசிவரா, திவாமா |
| 6 | 44 | 27 | 25 | 13 | ஞா | சசி 12-19, உரா 59-17, வஜ் 47-14, சது 44-45, தி 17-38, ஸர்வ அமா |
| 2 56 | 45 | 28 | 26 | 14 | தி | ● 13-30, திருவோ 60-0, வித் 45-45, கிம் 43-55, தி 9-46 சிரவணஉப, பிரதக்ஷிணம் போதாயன இஷ்டி பிண்டபிதிரு, புஷ்களா, சிரவணத்திற்கு குஹ ஓதோஷம் |
| 46 | 46 | 29 | 27 | 15 | செ | ப்ர 16-0, திருவோ 2-49, பிப 45-18, பால 47-45, தி 13-32, த்விதீயாதி, வியசிரா, மாக சுத்த, இஷ்டி சந்திரதர்சனம் |
| | 47 | 1 | 28 | 16 | பு | த்வி 19-50, அவி 7-38, வரீ 45-52, தை 52-14, தி 27-20, அதிதி [கரிநாள் |
| | 8 | 2 | 29 | 17 | வி | த்ரி 24-56, சத 13-41, பரி 47-17, வணி 57-53, ரா 2-41, திரிதீயாதி, குந்தசதுர்த்தி |
| | 49 | 3 | 30 | 18 | வெ | சது 31-3, பூட் 20-44, சிவ 49-24, பத் 31-3, ரா 18-58, சதுர்த்தீவிரு |
| | | 4 | 31 | 19 | ச | பஞ் 27-46, உட் 28-26, சித் 51-50, பவ 4-22, வஸர்தபஞ்சமீ |
| | | | 1 | 20 | ஞா | ஷஷ் 44-32, ரே 36-16, சாத் 54-14, கவு 11-11, தி 2-22, ஷஷ்டியுபவா |
| | | | | 21 | தி | ஸப் 50-44, அசு 43-39, சுப 56-9, கர 17-44, ரா 3-35, ரதஸப்தமீ, மன்வாதி |
| | | | | | | ...55-48, பர 50-0, சுப் 57-11, பத் 24-15, தி 10-20, பீஷ்டமாஷ்டமீ |
| | | | | | | ...5, கிரு 54-51, பிரா 57-1, பால 27-45, தி 22-38, கிருத்திகை இராமா |
| | | | | | | ... 57-52, மா 55-23, தை 30-15, ரா 8-8, த்திரிதினஸ்பிருக் திவாமா |
| | | | | | | ...8-56, வை 52-12, வணி 30-46, தி 12-17, வைசிரா, ஸ்மார்த்த ஏ... |
| | | | | | | ... ரோ 58-4, விஷ் 47-27, பவ 29-16, தி 19-50, வைஷ்ண... |
| | | | | | | ...18, கவு 25-52, தி 27-1, பிரதோஷம் |
| | | | | | | ... 20-52, ... 14-21 |

ரா
ர
குரு

மாவை
... 3-41